# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 66 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 18, செவ்வாய்க்கிழமை 31.01.2017


## எல்லை நிர்ணய அறிக்கை வெளியிட ஒரு மாதமாகும்

*நீதிமன்றில் தெரிவித்தது உள்ளூராட்சி அமைச்சு*

கொழும்பு, ஜன. 31
எல்லை நிர்ணய அறிக்கை வர்த்தமானியில் இன்று வெளியிடப்படும் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்திருந்த நிலையில், அதனை >> 24

## தொடராது மழை வறட்சி மீளவரும்

வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 31
மழையுடன் கூடிய காலநிலை நீண்ட நாள்களுக்கு நீடிக்காது. மீண்டும் வறட்சியான காலநிலை ஏற்படும்.
இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களப் பணிப் >> 24



## பெரும்பான்மையின் முடிவைத் தமிழர்கள் மீறி நடக்க முடியாது

மிரட்டுகிறார் சம்பிக்க

கொழும்பு, ஜன. 31
தமிழர் தரப்பு எத்தகைய கோரிக்கையையும் முன்வைக்கலாம். பெரும்பான்மை மக்களின் முடிவுகளை மீறித் தமிழர் தரப்புச் செயற்பட முடியாது.
இவ்வாறு அமைச்சர் >> 24

## மகிந்தவுடன் நட்பு வைப்போரை அறிய புலனாய்வுப் பிரிவு


***ரோகித அபயகுணவர்தன தகவல்***

கொழும்பு, ஜன. 31
கூட்டு அரசின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்தவுடன் தொடர்பு வைத்துள்ளனரா என்று அறிவதற்காக அவர்கள் பின்னால் புலனாய்வுப் பிரிவினர் சுற்றுகின்றனர்.
இவ்வாறு மகிந்த அணி >> 24

பன்னாட்டுச் சட்ட நிபுணர்கள், நீதிபதிகளை வரவழைத்து

# போர்க்குற்ற விசாரணையை நடத்தலாமா வடக்கு அரசு?

ஆராயும்படி கேட்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்கி



மன்னார், ஜனவரி 31
பன்னாட்டுச் சட்டநிபுணர்கள் – நீதிபதிகளை வரவழைத்து வடக்கு மாகாண சபையே போர்க்குற்ற விசாரணையை நடத்த முடியுமா என்று ஆராயுங்கள். சட்ட ஏற்பாடுகள் அதற்கு இடம்கொடுக்குமா என்பதைக் கண்டறியுங்கள். எமது மக்கள் நீதி பெறவேண்டுமானால் இதுவே ஒரே வழி.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். >> 24

முச்சந்தி முரளி



அப்ப விசாரிச்சு முடிய தண்டனையையும் இவையே குடுப்பினமோ...

## மார்ச்சில் கொழும்பு வருகின்றார் மோடி

*பன்னாட்டு வெசாக் நிகழ்வில் சிறப்பு அதிதியாக பங்கேற்பார்*

கொழும்பு, ஜன. 31
இரண்டு ஆண்டுகளின் பின்னர் இரு நாள் பயணமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு வருகை தரவுள்ளார் என, அமைச்சர் விஜயதாச >> 24

## இறுதிப்போரின்போது படை அதிகாரியால் வன்புணரப்பட்டார் ஒரு கன்னியாஸ்திரி

*வட்டக்கண்டல் படுகொலை நினைவில்*
*வடக்கு முதலமைச்சர் அதிர்ச்சித் தகவல்*



மன்னார், ஜன. 31
2009ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் – மே மாதத்தில், கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஒருவர் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு முகாமின் >> 22

## பாதுகாப்பை பலமாக்குங்கள்

*சுமந்திரன் மீதான கொலைச் சதி இதனை உணர்த்துகிறது என்கிறது ஹெல உறுமய*



கொழும்பு, ஜன. 31
நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீதான கொலைச் சதித் திட்டம் இதனைத் >> 04

## சுமந்திரன் எம்.பிக்கு கொலை அச்சுறுத்தல் வெறும் நாடகமே

***கூறுகிறது மகிந்த அணி***

கொழும்பு, ஜன. 31
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்குக் கொலை அச்சுறுத்தல் இருப்பதாக வெளியான செய்தி வெறும் >> 24

## தெற்கில் இனவாதம் எழுந்தால் வடக்கிலும் இனவாதம் எழும்

***இப்படிச் சொல்கிறார் சந்திரசிறி கஜதீர எம். பி***

கொழும்பு, ஜன. 31
அரசியல் தீர்வுக்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தீர்வானது, நாட்டைப் பிரிப்பதாக இல்லாமல் இருந்தால், நாட்டைப் பிரிக்கும் பிரிவினைவாதக் கும்பல்கள் இவ்வாறான ஜனநாயகத்தலைவர்களுக்கு >> 23

காணாமற்போனோர் விவகாரம்

# புராணம் படிக்கிறது ராணுவம்

முல்லைத்தீவு, ஜன. 31
சரணடைந்தவர்கள் தொடர்பில் எந்த ஆவணமும் இல்லை என்ற பதிலையே, 58 ஆவது டிவிசன் கட்டளை முன்னாள் அதிகாரி மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்தன நீதிமன்றில் நேற்றும் மீண்டும் தெரிவித்தார். போரின் இறுதியில் சரணடைந்தவர்களின் பட்டியல் இராணுவத்திடம் இருப்பதாக மன்றில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த >> 23

*சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில் ஐவர் கைது*

## சந்தேகநபர்களிடம் மீட்கப்பட்ட சான்றுகள் பகுப்பாய்வுக்கு

கிளிநொச்சி, ஜன. 31
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ. சுமந்திரனைக் கொலை செய்யத் திட்டமிட்டு உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் வைத்திருந்தமை, போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களிடமிருந் தும் மீட்கப்பட்ட சான்றுப் பொருள்களைப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார். வழக்கை பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.
வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சி திருவையாற்றைச் சேர்ந்த 5 சந்தேக >> 24

## நல்லூரில் கடை மீது பெற்றோல் குண்டு வீச்சு இருவருக்கு வாள்வெட்டு

***9 பேர் கொண்ட கும்பல் அடாவடி***



யாழ்ப்பாணம், ஜன. 31
நல்லூர் அரசடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு நேற்று இரவு 7 மணியளவில் 4 மோட்டார் சைக்கிளில் வந்த 9பேர் கொண்ட கும்பல் >> 04

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஜூனுக்கு முன்னர் நடக்காது

*கட்சிகளின் கூட்டத்தில் கூறினார் அமைச்சர் பைசர் முஸ்தபா*

கொழும்பு, ஜன. 31
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜூன் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கு சாத்தியமில்லை என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்றுத் தெரிவித்தார்.
தேர்தல்கள் செயலகத்தில், தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில், அரசியல் கட்சியின் செயலாளர்களுடன் சந்திப்பு நடைபெற்றது. இதன் போதே அவர் >> 23

# வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் கைது

## 6 வாள்களும் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 31
வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இளைஞர்கள் 5 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து 6 வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பொலிஸார் தேடி வந்தனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7.30 மணியளவில், அரியாலையிலுள்ள சந்தேகநபரின் வீட்டைப்பொலிஸார் முதலில் முற்று கையிட்டனர். அவரது வீட்டில் 6 வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங் கள் இருந்தன. அவற்றையும்மீட்டதுடன், சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கல்வியங்காடு, யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்த ஏனைய சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத் தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5-106)

# கிராம அலுவலர் கைதாகி பிணையில் விடுவிப்பு

வவுனியா, ஜன.31
வவுனியாவில் கிராம அலுவலர் ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று வவுனியாவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் நிறுவனம் ஒன்று மேற்கொண்ட முறைப் பாட்டின் அடிப்படையில் கிராம அலுவர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா நீதிவான் மன்றில் நேற்று பிற்பகல் அவர் முற்படுத்தப்பட்டார். அவரை 75ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்வதற்கு மன்று அனுமதியளித்தது. கிராம அலுவலர் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகளை மார்ச் 27ஆம் திகதிக்கு மன்று ஒத்தி வைத்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

# முகநூலில் கவிதை எழுதிய ஆசிரியருக்கு நேர்ந்த கதி

*கொழும்பு, ஜன. 31*
கவிதைகளை எழுதி முகநூல் பக்கத்தில் வெளியிட்ட ஆசிரியருக்கு எதிராக, கல்வி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. குருநாகல், குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் எச்.எம். குசான் சாலிக ஹேரத் என்ற ஆசிரியருக்கு எதிராகவே கல்வி அமைச்சின் மோசடிப் பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் மோசடிப் பிரிவு அதிகாரிகள் கடந்த 23 ஆம் திகதி திடீரெனக் குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயத்துக்குள் நுழைந்து ஆசிரியர் கவிதை எழுதியமை மற்றும் அதனை பகிரங்கப்படுத்தியமை தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

ஆசிரியராகச் செயற்பட்டுக் கவிதை எழுதியமையினால் குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயத்துக்கும், கல்வி அமைச்சுக்கும் அவமதிப்பு ஏற்படுத்தியுள்ளதாக விசாரணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கவிதை எழுதுவது ஏன் எனவும், அவற்றினை முகநூலில் பதிவிடுவது ஏன் என்பது தொடர்பிலும் கேள்வி எழுப்பியுள்ள விசாரணைக் குழு பாடசாலையின் மேலும் சில மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளது. (த-5)

# உள்ளூராட்சி தேர்தலிலாவது மகிந்தவால் வெல்ல முடியுமா?

*பிரதி அமைச்சர் அபயசிங்க சவால்*

கொழும்பு, ஜன. 31
முடிந்தால் இந்த வருடம் ஆட்சியைக் கவிழ்த்துக் காட்டுங்கள். ஆகக் குறைந்தது எதிர் வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையாவது வென்று காட்டுங்கள் என்று மகிந்தவுக்குச் சவால் விடுத்துள்ளார் பிரதி அமைச்சர் அசோகா அபயசிங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த வருடம் ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாக மகிந்த அணியினர் கூறிக் கொண்டு அலைகின்றனர். இது எப்படிச் சாத்தியம்? 2020 இல்தான் தேர்தலே வரும். தேர்தல் ஒன்று இல்லாத நிலையில், எப்படி இவர்களால் ஆட்சியைப் பிடிக்க முடியும்? வேறு ஏதும் சதித் திட்டம் வைத்திருக்கிறார்களா? 2020 வரைக்கும் தேர்தலை நடத்த முடியாது என்று இந்த நாட்டின் சட்டம் - 19 ஆவது திருத்தச் சட்டம் மிகத் தெளிவாகச் சொல்லும்போது அதை மறைத்து மக்களை ஏமாற்றுவதற்கு இவர்கள் முயற்சி செய்கின்றனர். இவர்களின் ஏமாற்று நாட கத்தில் மக்கள் சிக்கக் கூடாது - என்றார். (த-5)

# மகிந்த ஆண்டிருப்பின் இலங்கையை ஆப்கான் முந்திச் சென்றிருக்கும்

## கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஜன. 31
இலங்கையை விடப் பொருளாதாரத்தில் தற்போது பின்தங் கியுள்ள ஆப்கானிஸ் தான்கூட, மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்திருந்தால் இலங்கை யைவிட முன்னேறியிருக்கும்.



இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அநுராதபுரத்தில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:
சீன முதலீட்டுத்திட்டங்களின் மூலம் அம்பாந்தோட்டையையும், கொழும்பு நிதி நகரத்தையும் அபிவிருத்தி செய்வது போலவே, திருகோணமலை மாவட்டத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுத்து வருகின்றது. திருகோணமலைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டால் அனுராதபுரம், ஹொரவ பொத்தானை இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற முடியும்.

எந்த எதிர்ப்புகள் வந்தாலும், சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படும். ராஜபக்ச அரசு பெற்றுக் கொண்ட பெரிய கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சீன அரச தலைவருடன் பேசி, சீனாவின் உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக் கப்படுகின்றன. அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தவர்களே இன்று அதனை எதிர்க் கிறார்கள்.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார நிலைகளைப் பொறுத்தவரையில், கம்போடியா, லாவோஸ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் தான் இலங்கையை விடப் பின் தங்கி இருக்கின்றன.

மகிந்த ராஜபக்ச இன்னொரு தடவை ஆட்சிக்கு வந்திருந்தால் ஆப்கானிஸ்தானும் கூட இலங்கையை முந்திக் கொண்டு போயிருக்கும் - என்றார். (த-5)

# ஊடகங்கள் திரிவுபடுத்துகின்றனவாம்

கொழும்பு, ஜன. 31
படையினரிடம் சரணடைந்து காணாமற் போனவர்கள் தெரடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை தொடர்பில் திரிவுபடுத் தப்பட்ட செய்திகள் ஊடகங்களில் வெளியாகின்றன. இது தொடர்பில் மன்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டமா அதிபர் திணைக்கள மன்றாடியார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்றுக் கோரிக்கை முன்வைத்தார்.

ஆள்கொணர்வு மனு மீதான வழக்கு விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டது. மன்றில் முன்னிலையான சட்டமா அதிபர் திணைக்கள மன்றாடியார் குமாரநந்தன, வழக்குத் தொடர்பில் ஊடகங்களில் திரிவு படுத்தப்பட்ட செய்திகள் வெளிவந்துள்ளன. இது தொடர்பில் மன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அத்துடன் பத்திரிகைச் செய்திக் குறிப்புக்களையும் மன்றில் சமர்ப்பித்தார்.

நீதிபதி, இது தொடர்பில் நீங்களே நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சட்டமா அதிபர் திணைக்கள மன்றாடியாருக்கு கட்டளை பிறப்பித்தார். (வ-5)

# இலங்கையர் ஊடுருவலை தடுக்க இந்தியா நடவடிக்கை

கொழும்பு, ஜன 31
இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குள் ஊடுருவபவர்களைத் தடுப்பதற்காக, இந்தியப் பாதுகாப்புத் தரப்பினர், பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி, அரிச்சல்முனையில் இருந்து இலங்கை தலைமன்னார் வரையிலான கடற்பகுதியில், ஏராளமான மணல் திட்டுகள் உள்ளன. இவற்றில் ஐந்து மணல் திட்டுகள், இந்தியக் கடல் எல்லைக்குள் அமைந்துள்ளன. ஏனையவை, இலங்கைக் கடல் எல்லைக்குள் அமைந்துள்ளன.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகப் படகுகளில் செல்பவர்கள், இந்திய எல்லைக்குள் உள்ள மணல் திட்டுகளில் இறக்கி விடப்படுகின்றனர். இவர்களை, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சில மீனவர்கள், தங்கள் படகுகளில் அழைத்துச் செல்கின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மணல் திட்டுகள் வழியாக, இந்தியாவுக்குள் இலங்கையர்கள் ஊடுருவுவதைத் தடுக்கும் விதமாக, இந்தியக் கடற்படையினரால் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் வளைகுடா, தனுஷ்கோடி, அரிச்சல்முனை, இந்திய எல்லை மணல்திட்டு ஆகிய பகுதிகளில், இந்தியக் கடற்படையினர், தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (நி)

# சிவானந்த வித்தியாலயத்தின் கட்டடத் திறப்பு விழா நேற்று

வவுனியா, ஜன.31
செட்டிகுளம் மெனிக்பாம் அருவித்தோட்டம் சிவானந்த வித்தியாலயக் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கட்டடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம் வன்னி பல்கலைக் கழகமாக தரமுயர்த்தப்படவுள்ளது. ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெறுகின்றன. தற்போது 25 ஆயிரமாகக் காணப்படுகின்ற பல்கலைக்கழக



அனுமதி 50 ஆயிரமாக மாற்றப்படவுள்ளது. வடமாகாணத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் அதிகளவான மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் செல்ல வேண்டும் - என்றார்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.தியாகராஜாவும், கௌரவ விருந்தினராக செட்டிகுளம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.யேசுதாசனும் கலந்து கொண்டனர். (ற)

# மாட்டுத் திருடர்களை துரத்திப் பிடித்தார் பிரதியமைச்சர்



கொழும்பு, ஜன. 31
மாட்டுத் திருடர்களைத் துரத்திப் பிடித்தார் பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும. இதன்போது குழி ஒன்றில் தவறி விழுந்த அவர் காலில் படுகாயமடைந்தார்.

இறைச்சிக்காக மாடுகளைத் திருடிச் செல்வதாகக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, பிரதியமைச்சர் பாலித தெவ ரப்பெரும, மேலும்சிலருடன்இணைந்து, அலுத்கம நகரத் துக்குச் சென்றார். அங்கு மாடு களைப்பாரவூர்தியில்ஏற்றிச் செல்வதாகத் தெரிவிக்கப் பட்டது. அதனை மடக்கிப் பிடிப்பதற்காக, பாலித தெவரப்பெருமவும் அவரது சகாக்களும் துரத்திச் சென்றனர்.

மாடுகளை ஏற்றிச்சென்ற பாரவூர்தியைப் பிரதியமைச்சர் நிறுத்தி, அதன் சாரதியை வெளியே இழுத்து வீழ்த்தினார். பாரவூர்திக்குள் இருந்து இறங்கிய சிலர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டனர். தப்பிச் சென்றவர் களைப் பிடிப்பதற்காக பின் தொடர்ந்த தெவரப்பெரும, அரு கில் இருந்த கால்வாய் ஒன்றில் வீழ்ந்தார். அவரது காலில் அடி பட்டது.

பிரதி அமைச்சருடன் சென் றவர்கள், சந்தேகநபர்கள் அனைவரையும் பிடித்தனர். பின்னர், சந்தேகநபர்கள் பேருவளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர். பாரவூர்தியும் பொலி ஸா ரால் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள், மதுகம, முன்ஹென்ன பகுதியைச் சேர்ந் தவர்கள் எனத் தெரிவிக்கப் பட் டது. இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-5)

# எதிரிக்குப் பிறப்பித்த பிடியாணையில் வழக்காளியைக் கைது செய்த பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜன. 31
எதிராளிக்கு நீதிமன்று பிடியாணை பிறப்பித்திருக்க, வழக்காளியான பெண்ணைக்கைதுசெய்துபொலிஸ் நிலையத்தில் ஒரு நாள் முழுவதும் தடுத்து வைத்திருந்து மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தியதால் பொலிஸாரை நீதிமன்று கடுமையாக எச்சரித்ததோடு பெண்ணுக்கு ஏற்பட்ட அலைக் கழிவுக்காக 10 ஆயிரம் ரூபா வழங்குமாறும் உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தால் தனக்கு அவமானமும் மன உளைச்சலும் அலைக்கழிவும் ஏற்பட்டதாக குறித்த குடும்பப் பெண் நீதிமன்றில் கவலை தெரிவித்தார்.

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குடும்பப் பெண் ஒருவர் தனது கணவனுக்கு எதிராக தாபரிப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளார். எதிராளி நீதிமன்றுக்குச் சமுகமளிக்கவில்லை. அதனால் அவருக்குப் பிடியாணை பிறப்பித்தது நீதிமன்று.ஆனால்இளவாலைப் பொலிஸார் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குடும்பத் தலைவரைக் கைது செய்யாது, வழக்குத்தாக்கல் செய்த பெண்ணை அவரது வீட்டுக்கு நேற்றுமுன்தினம் சென்று கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்திருந்துள்ளனர். வழக்குத் தாக்கல் செய்தது தான் என்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது தனது கணவனுக்கு என்றும் குறித்த பெண் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். எனினும் பொலிஸார் அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. அதனால் தனக்கு அவமானமும் மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட பெண் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

அதற்கு நீதிமன்று பொலிஸாருக்குக் கடுமையாக எச்சரித்தது. அவருக்கு ஏற்பட்ட அலைக்கழிவு செலவுக்காக 10 ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும்உத்தரவிட்டு குறித்த பெண்ணை நீதிமன்று விடுவித்தது. (வ-4)



## சீன பல்கலையில் பயில தயாராகிறார் கோத்தா

கொழும்பு, ஜன. 31
சீனப் பல்கலைக்கழகத்தில் அரசியல் தொடர்பான மூன்றாண்டு கற்கைநெறி பயில்வதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச முடிவு செய்திருப்பதாக ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்றாண்டு அரசியல் கற்கைநெறியைப் பயில்வதற்கு, முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட நடத்தும், பாத்பைண்டர் என்ற அரச சார்பற்ற நிறுவனம் மூலமாக, கோத்தபாய ராஜபக்சவுக்கு, சீன அரசு அழைப்பு விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசியல் முகாமைத்துவம் தொடர்பாக, பாத் பைண்டர் நிறுவனம், சீனாவின் தற்கால அனைத்துலக உறவுக ளுக்கான நிறுவகத்துடன் உடன்பாடு செய்துள்ளது.

இந்த நிலையிலேயே, மிலிந்த மொறகொடவும், ஊடக நிறு வனம் ஒன்றின் தலைவரும், சீனாவில் அரசியல் கற்கைநெறியைக் கற்குமாறு கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆலோசனை கூறியுள்ளனர் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# தமிழ் அரசியல் கைதி வைத்தியசாலையில்

## தொடர் உணவு ஒறுப்பு போராட்டத்தினால்

கொழும்பு, ஜன. 31
பூசா தடுப்பு முகாமில் தொடர்ச்சியாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் இருவரில் ஒருவர் கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சுகவீனமுற்ற நிலையில் அவர் நேற்றுமுன்தினம் மாலை வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டதாக தேசிய வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

அரசியல் கைதியின் உடல் நிலையில் தற் போது முன்னேற்றம் காணப்படுகின்றது. அவருக்கு தேவையான சிகிச்சைகள் வழங் கப்பட்டுள்ளன என்று தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டார். தங்கவேலு நிமலன் என்ற தமிழ் அரசியல் கைதியே தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரும் அவரது மனைவியும் கொழும்பு இரத்மலானையில் வசித்து வந்தபோது 2009ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். 2013ஆம்ஆண்டுமனைவி விடுதலை செய்யப்பட்ட போதிலும், 8 வருடங்களாகியும் நிமலனுக்கு விடுதலை கிட்டவில்லை. கைதுசெய்யப்பட்ட நிமலன் கொழும்பு மகசின், காலி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு தற்போது பூசா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அவரின் தந்தை தெரிவித்தார்.

பூசா தடுப்பு முகாமிலிருந்து தங்களை வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் இரண்டு பேர் கடந்த 25ஆம் திகதி முதல் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ள நிலையில் மற்றுமொருவர் தொடர்ந்தும் உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்றார்.

வவுனியா கணேசபுரத்தைச் சேர்ந்த ஒருவரும், முல்லைத்தீவு முள்ளியவளையை சேர்ந்த ஒருவருமே பூசா தடுப்பு முகாமில் போராட்டத்தில் ஈடுபட்டனர். (வ-4)

# ட்ரம்பின் நெருங்கிய சகா விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, ஜன 31
அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்புக்கு மிக நெருங்கியஒருவரான சலாடா சல்யகுமார் என்பவர் விரைவில் இலங்கை வர வுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது. அவர்ஒருகைத்தொழில்துறை சார்ந்த வியாபாரி.

இவர் இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் தரன் ஜித் சிங் சந்துவின் நண்பர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தி)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு புதிதாக 4 ஆயிரம் வீடுகள்

கொழும்பு, ஜன 3
சமுர்த்திப் பயனாளிகளுக் காகச் சுமார் நான்காயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

சமுர்த்திக் குடும்பங்களுக்கு 3,972 வீடுகளை நிர் மாணித்துக் கொடுக்க தீர் மானிக்கப்பட்டுள்ளதாகச் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் செய லாளர் மகிந்த செனவிரட்ன தெரிவித்தார்.

மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் சமுர்த்தி உதவிகளைப் பெறும் ஒரு குடும்பம் வீதம் தெரிவுசெய்யப்பட்டு இந்தவீடுகள் கட்டிக்கொடுக்கப் படும். சமுர்த்தி லொத்தர் ரிக் கெட் விற்பனை மூலம் இதற் கான நிதி பெற்றுக்கொள்ளப் படும். இதனடிப்படையில் மாதமொன்றுக்கு 331 வீடுகள் நிர்மாணிக்கப்படும். ஒரு வீட்டுக்கான நிர்மாணப் பணிகளுக்கு மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாவை அரசு வழங்கும்-என்றார் அமைச்சர். (தி)

# இளைஞர்கள் கடத்திக் கொலை

## 14 சிப்பாய்களின் மறியல் நீடிப்பு

சிறுப்பிட்டி கொலை வழக்கில் சந்தேக நபர்களான 14 இராணுவத்தினரின் விளக்கமறியலை யாழ்ப்பாண நீதிவான் மன்று மேலும் 14 நாள்களுக்கு நீடித்தது.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிவான் சி.சதீஸ்தரன், 14 இராணுவத் தினரையும்எதிர்வரும்13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

***பின்னணி***

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இருவரும் 1997ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி மயிலங்காடுக்கு உறவினருடைய திருமணத்துக்காகச் சென்றிருந்தபோது சிறுப்பிட்டி, புத்தூர் வாதரவத்தையில் இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர் என்று இருவரின் பெற்றோரால் குற்றஞ் சாட்டப்பட்டுஅச்சுவேலிப்பொலிஸில் முறையிடப் பட்டது.

அச்சுவேலி பொலிஸாரால் அந்தக் காலப் பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவச் சிப்பாய்களுக்கும் எதிராக யாழ்ப்பாண நீதிவான் மன்றில் வழக்கு தொடரப் பட்டது. (வ-4,ரி)

## 23 மாவட்டங்களில் சுதந்திர தின நிகழ்வு

கொழும்பு, ஜன 31
தேசிய ஒற்றுமையை தொனிப் பொருளாக கொண்டு பெப்ரவரி 4ஆம் திகதி காலி முகத்திடலில் இடம்பெறும் தேசிய சுதந்திர நிகழ்வுக்கு மேலதிகமாக 23 மாவட் டங்களில் சுதந்திர தின நிகழ்வுகள் இடம் பெறுவதாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அந்த நிகழ்வுகளில் மாவட்டச் செயலாளர்கள், மாகாண முதலமைச் சர்கள், மாகாண செயலாளர்கள் மற்றும் மக் கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வதாக அமைச்சர் மேலும் கூறினார்.

வெளிநாடுகளில் அமைந் துள்ள இலங்கைத் தூதர கங்களை மையப் படுத்தியும் சுதந்திர நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாகவும் அவர் கூறினார். (தி)

# சுதந்திர தின அணிவகுப்பில் 7,888 பாதுகாப்புப் படையினர்

பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ள இலங்கையின் 69 ஆவது சுதந்திரதின வைபவத்தின் அணிவகுப்பில் 7,888 பாதுகாப்புப் படையினர் கலந்துகொள்ளவுள்ள தாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்தது. 4,156 இராணுவத்தினர், 916 கடற்படையினர், 1,125 விமானப் படையினர், 664 சிவில் பாதுகாப்புப் படையினர், 927 பொலிஸார், 100 தேசிய மாணவர் செயலணியினர் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். காலிமுகத்திடலில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த வைபவத்தில் நாட்டு மக்களுக்கான அரச தலைவரின் உரை காலை 9.48 மணிக்கு ஆரம்பமாகும் எனவும், கொழும்பிலுள்ள 11 பாடசாலைகளின் 110 மாணவர்கள் தேசிய கீதத்தையும் மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 25 மாணவர்கள் ஜயமங்கள கீதத்தையும் இசைக்கவுள்ளதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் கூறினார். (தி)

# பொறுப்பற்ற சாரத்தியம் குடும்பத் தலைவரின் உயிரைப் பறித்தது

யாழ்ப்பாணம், ஜன. 31

கண்பார்வைக் குறைபாடுடைய சாரதி, ஹன்ரர் வாகனத்தைச் செலுத்திச் சென்று சாலையின் ஓரமாகத் துவிச்சக்கர வண்டியில் சென்றவரை மோதித் தள்ளினார். இந்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பத்தலைவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஹன்ரர் சாரதியின் சாரத்திய அனுமதிப்பத்திரம் புதிப்பிக்கத் தேவையில்லை என்று கூறப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

இந்த விபத்து வடமராட்சி வல்லையில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது. படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்தார். புத்தூர் கலைமதி வீதியைச் சேர்ந்த வைரவன் குணசிங்கம் (வயது - 43) என்பவரே உயிரிழந்தார். மீன் விற்றுப் பிழைப்பு நடத்தும் அவர் பருத்தித்துறைக்கு மீன்வாங்கிச் சென்று விற்பனையில் ஈடுபடுபவர். அவ்வாறு சென்றிருந்த போதே விபத்து இடம்பெற்றது. அவருக்கு 4 பிள்ளைகள்.

வீதியால் தன்பாட்டில் சென்றுகொண்டிருந்தவரை அவரின் பின்புறத்தே சென்று மோதி அவரைச் சுமார் 30 மீற்றர் தூரத்துக்குக் ஹன்ரர் இழுத்துச் சென்றது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாரதி கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர், 'தனக்கு 1972ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளது. குறித்த வருடத்தை அண்மித்த காலங்களில் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் புதிப்பிக்கத்தேவையில்லை. எனக்குக் கண்பார்வை குறைவு. குறித்த குடும்பத் தலைவர் வீதியில் சென்று கொண்டிருந்ததைக் காணவில்லை. கண் பார்வை குறைவு' என்று அவர் விசாரணையில் கூறியுள்ளார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

# சிவாஜியின் வீட்டில்தான் குடியிருக்க வேண்டிவரும்

## இப்படிச் சொல்கிறார்கள் நாவற்குழியில் குடியேறிய சிங்கள மக்கள்

யாழ்ப்பாணம், ஜன.31

எங்களுக்கு வீடுகளை வழங்ககக் கூடாது எங்களை வெளியேறுங்கள் என விரட்டினால், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றுதான் நாங்கள் குடியிருக்க வேண்டிவரும்.

இவ்வாறு நாவற்குழியில் குடியேறிய சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நாவற்குழியில் குடியமர்ந்துள்ள தமிழ், சிங்கள மக்களுக்கான தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றையதினம் நடைபெற்றது.

இதன்போது வீட்டுத்திட்டம் தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

பல வருடங்களுக்கு முன்னர் நாங்கள் யாழ்ப்பாணத்தில் குடியிருந்தோம். அன்றைய போர்ச் சூழல் காரணமாக பல தடவைகள் இடம் பெயர்ந்தோம். அவ்வாறு இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று பின்னர் மீண்டும் எங்கள் சொந்த இடமான யாழ்ப்பாணத்துக்கு 2010ஆம் ஆண்டுவந்தோம். இங்கு நாங்கள் வந்து பல மாதங்களாக வீடு வாசல்கள் அற்ற நிலையில் தவித்தோம். பல பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கினோம். அதே நேரம் இங்கிருக்கின்ற சில அரசியல் தரப்பினர்கள் எதிர்ப்புக்களை வெளியிட்டனர். ஆனால் அவர்கள் ஏன் அவ்வாறு எதிர்க்கின்றனர் என்று தெரியவில்லை.

இவ்வாறு எதிர்ப்புக்களை வெளியிடுகின்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஐயா அவர்களை நாங்கள் சந்திக்க விரும்புகின்றோம். அவருடன் பல விடயங்கள் பேச வேண்டி இருக்கின்றது. அவரை எங்கள் இடத்துக்கு வருமாறும் அழைப்பு விடுகின்றோம். அதே நேரம் நாங்களும் சென்று அவரைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம்.

எங்களுக்கு வீடுகளை வழங்கக் கூடாது, எங்களை வெளியேறுங்கள் என்றால் எங்கள் சொந்த இடத்திலிருந்து நாங்கள் எங்கு செல்வது. அவ்வாறு எங்களை விரட்டினால் சிவாஜிலிங்கம் வீட்டுக்குச் சென்றுதான் இருக்க வேண்டிவரும்.

அதே போல் சொந்த இடத்துக்குத் தற்போது வந்திருக்கின்ற போதும் இங்குள்ள அரசியல் தரப்பினர்களால் பாதிக்கப்படுகின்றோம். இவ்வாறு தான் எங்கள் நிலைமைகள் இருக்கின்றபோது தென்னிலங்கை சென்றால் அங்கும் பிரச்சினை வடக்கிற்கு வந்தால் இங்கு பிரச்சினை என்றதொரு நிலையில் இரு இடங்களிலும் ஒரு மிருதங்கமாகவே நாங்கள் பார்க்கப்படுகின்றோம். எனவே இந்த நிலை மாற வேண்டும் - என்றனர். (வ-8)

# உயிரிழந்த எருமை மாடுகளின் எண்ணிக்கை 21ஆக உயர்வு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து மொரட்டுவை நோக்கிப் பயணித்த பேருந்து ஏ9 சாலையில் கொல்லர்புளியங்குளம் பகுதியில் நேற்று முன்திணம் இரவு சாலையைக் கடந்த மாட்டுப் பட்டியுடன் மோதுண்ட விபத்தில் உயிரிழந்த எருமை மாடுகளின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் கனகராயன்குளம் பொலிஸார் பேருந்தின் சாரதியை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-10)

# தவறான முடிவெடுத்த இளம் பெண் சாவு

எந்தநேரமும் அலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்த பிள்ளையைக் கண்டித்த பெற்றோர் அலைபேசியைப் பறித்தெடுத்துவிட்டனர். இதனால் விரக்தியடைந்த இளம் பெண் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் புன்னாலைக் கட்டுவன் ஈவினை தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மதியாபரணம் சிவசக்தி (வயது - 17) என்பவரே தவறான முடிவு எடுத்தார்.

கொழும்பிலுள்ள தையல் தொழிற் சாலை ஒன்றில் பணிபுரிந்துவந்த இளம் பெண் 3 மாதங்களுக்கு முன்னர் வீட்டுக்குத் திரும்பினார். பின்னர் ஒருவருடன் எந்தநேரமும் அலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்ததால் பெற்றோர் மகளை கண்டித்துள்ளனர். அவரிடமிருந்து நேற்று அலைபேசியைப் பறித்து மறைத்துவைத்துவிட்டு பெற்றோர் கூலி வேலைக்குச் சென்றுள்ளனர். இளம் பெண் நேற் றுப் பிற்பகல் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டியுள்ளார். எரிகாயமடைந்து ஆபத்தான நிலையில் அவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மாற்றப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுற்பகல் அவர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

# வீடு கட்ட வெட்டிய குழியில் வெடிகுண்டு

தென்மராட்சி, ஜன. 31

வீடு அமைப்பதற்கு வெட்டிய குழியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட வெடிகுண்டை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் அப்புறப்படுத்த சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

நாவற்குளி தெற்குப் பகுதியில் காணி உரிமையாளரால் வீடு அமைப்பதற்காகக் காணியில் குழி வெட்டியபோது, அங்கே வெடிக்காத நிலையில் வெடிகுண்டு காணப்பட்டது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்படவே பொலிஸார் அங்கு விரைந்து வெடிகுண்டு காணப்பட்ட இடத்தில் பாதுகாப்பை ஏற்படுத்தினர்.

வெடிகுண்டை சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் அப்புறப்படுத்தி செயலிழக்க வைக்குமாறு கோரி பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவானின் அனுமதி கிடைத்ததையடுத்து சிறப்பு அதிரடிப் படையினர் வெடிகுண்டை மீட்டு எடுத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

# வாகனத்தில் மாற்றம் செய்வதாயின் உரிய அனுமதி பெறப்படவேண்டும்

*சாவகச்சேரி நீதிவான் அறிவுறுத்து*

சாவகச்சேரி, ஜன. 31

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் மாற்றம் செய்வதாயின் ஆணையாளர் அலுவலகத்தின் எழுத்துமூலமான அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டும். அதனை மீறி மாற்றம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இவ்வாறு வாகனத்தின் நிறம் மாற்றி போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனச் சாரதியை எச்சரிக்கை செய்தார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான்.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்தவர் தனது பாரவூர்திக்கு போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தின் அனுமதி பெறாமல் நிற மாற்றம் செய்துள்ளார். அவர் பாரவூதியை நெடுஞ்சாலையில் போக்குவரத்தில் ஈடுபடுத்திய வேளையில் கொடிகாமம் பொலிஸாரால் பிடிக்கப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார்.

போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனத்தை குறித்த வாகனத்தின் சாரதியாக அல்லது வாகன உரிமையாளராக இருந்து பெருந்தெருக்களில் செலுத்தும்போது ஆணையாளர் அலுவலகத்தின் எழுத்து மூலமான அனுமதியின்றி மோட்டார் வாகனமொன்றுக்கு புதிதாக நிர்மாணம் செய்தல் மற்றும் உரு மாற்றம் செய்யக்கூடாது. வாகனத்தை மேற்படி பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்டதற்கு மாறாக மாற்றியமைத்து செலுத்துவது அல்லது செலுத்துவதற்கு இடமளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று மன்று கட்டளையிட்டது.

வாகனச் சாரதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான், இது தொடர்பான உரிய பத்திரங்கள் ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பியமைக்கான ஆதாரங்களை வாகனச் சாரதி நீதிமன்றில் சமர்ப்பித்தார். சாரதி வழக்கிலிருந்து மன்றால் விடுவிக்கப்பட்டார். (வ - 9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பாது காப்பை...

தான் உணர்த்துகின்றது. இவ்வாறு ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடை பெற்ற பத்திரிகையா ளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவும், ஏனைய புலனாய்வுப் பிரிவுகளும், நிலமையை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், புலிகள் இயக்கத்தை மீளமைப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், படைப் பிரிவுகளை அகற்றல் என்று அரசின் பாதுகாப்பு வலையமைப்பைப் பலவீனப் படுத்துவதற்கு அனைத்துலக அரசுகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் முயற்சிக்கின்றன. போர் இல்லாத நிலையில் படைகளைக் குறைக்கக் கொடுக்கப்பட்ட அழுத்தங்களை நாம் எதிர்த்தோம். இதன் மூலம், படுகொலை முயற்சியைத் தடுக்க முடிந்துள்ளது.

ஈழக்கனவை நனவாக்குவதற்காகப் பலர் காத்திருக்கின்றனர். போரின் கருநிழல்கள் இன்னமும் கலையவில்லை. இன்னமும் அபாயம் உள்ளது. பாதுகாப்பை மேலும் பலப் படுத்தவேண்டும் என்ற பாடத்தை அண்மைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன - என்றார். (த-5)

### நல்லூரில்...

வர்த்தக நிலையத்தில் நின்றவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்கு தலை மேற்கொண்டதோடு, பெற்றோல் குண்டு மூலம் கடையையும் தீயிட் டுக் கொளுத்திவிட்டுத் தப்பியோடியது என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் தாரிகள் பலாலி சாலையில் திருநெல்வேலிச் சந்தி திசையில் இருந்து மிக வேகமாக வந்து அர சடிப் பகுதியில் உள்ள குறித்த வர்த்தக நிலையம் மீது தாக்கு தலை நடத்தி விட்டு மீண்டும் தப்பிச் செல்லும் போது கொண்டு வந்த வாள் வீதியில் தீப் பொறி பறக்க இழுத்துச் சென்றனர்.

இந்த வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட தீயை அயலவர்கள் ஒன்றுகூடி அணைத்ததோடு தீ அணைப்பு சேவையின் உதவியும் நாடப்பட்டது. தாக்குதலில் வாள் வெட்டுக்கு இலக்காகி இருவர் படுகாயமடைந்தனர். அதில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார். படுகாயமடைந்த இருவரும் உடனடியாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடை உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக எந்தவித முற்பகைகளும் தமக்கு இல்லை. ஏன் இவ்வாறான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று தெரியாதென்றும் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை தாக்குதல்தாரிகள் வந்த பலாலி சாலையில் உள்ள பல வர்த்தக நிலையங்களின் முன்பாகவும் சீ.சீ.ரி கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று விசா ரணையில் தெரிவிக்கப்பட்டது. (வ-101,106)

# நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்கு உதவித் திட்டங்கள் கிடைப்பதில்லை

## பாதிக்கப்பட்டோரின் முறைப்பாடு குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 31

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பலாலி வடக்கு பிரதேசத்தை சேர்ந்த மக்களுக்கு உதவித் திட்டங்கள் கிடைக்கப் பெறாமை தொடர்பில் அரச அதிகாரிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையேயான கலந்துரையாடல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

பொலிகண்டி நலன்புரி முகாமில் தங்கியுள்ள பலாலி வடக்கைச் சேர்ந்த 12 குடும்பங்கள் தங்கள் மீள்குடியமர்வில் உள்ள தடங்கல் மற்றும் உதவித் திட்டங்கள் வழங்கப்படாமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை ஆராய்ந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண இணைப்பாளர், இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் முறைப்பாட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

பலாலிவடக்குப்பகுதியில்மக்கள்மீள்குடியமர்த்தப்படவேண்டிய பகுதிகளுக்குப் பொறுப்பான தெல்லிப்பழை பிரதேச செயலக அதிகாரிகளும், தற்போது முகாம் அமைந்துள்ள பகுதிக்குப் பொறுப்பான பருத்தித்துறை பிரதேச செயலரும்பாதிக்கப்பட்டமக்களும்கலந்துரையாடலில்பங்கேற்றனர்.

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறான வழியில் தீர்வைப் பெறமுடியும் என ஆராயப்பட்டது. இது தொடர்பில் விரைவில் மீண்டுமொரு கலந்துரையாடலை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது என்று மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவித்ததாவது:

பலாலி வடக்குப்பிரதேசத்தில் நாங்கள் வாழ்ந்து வந்தோம். உள்நாட்டுப் போர் காரணமாக எங்களின் சொந்த பிரதேசங்களை விட்டு இடம்பெயர்ந்து பருத்தித்துறை பொலிகண்டி போன்ற இடங்களில் வசித்து வருகின்றோம். அன்றைய காலங்களில் இருந்து நாங்கள் முகாம்களிலும் தற்காலிக குடியிருப்புக்களிலும் வாழ்ந்து வருகின்றோம்.


இந்தநிலையில் எமது முகாம்களுக்கு பொறுப்பாக இருந்த முகாம் பிரதிநிதிகள் சில குடும்பங்களின் பெயர்விவரங்களை இணைக்காது அதிகாரிகளிடம் அனுப்பி வைத்துள்ளனர். இதனால் எங்களுக்குக்கிடைக்க வேண்டிய உதவித் திட்டங்கள் கிடைக்காமல் போய்விட்டன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துக் கூறினோம். எனினும் அதிகாரிகள் இன்றுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்காதமையால், நாம் மனித உரிமை ஆணைக் குழுவை நாடியுள்ளோம்.

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளும் எங்களையும் பிரதேச செயலர்கள், மற்றும் அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடினார். அத்துடன் மீண்டும் விரைவில் இது தொடர்பில் கலந்துரையாடுவதாக தெரிவித்தனர் - என்றனர். (வ-8)

## மரண அறிவித்தல்

### தாவீது அந்தோனிப்பிள்ளை

(சின்னத்தம்பி)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாவீது அந்தோனிப்பிள்ளை (சின்னத்தம்பி) 28.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான தாவீது - சுவக்கினம் தம்பதியரின் அன்பு மகனும் யசிந்தாவின் (ராணி) அன்புக் கணவரும் தரன்ஸ் (பிரான்ஸ்), டிறோய், ரஞ்சித் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கியுறிட்டாவின் அன்பு மாமனும் திரேசம்மா, அருளப்பு, மாசில்லாமணி, யோசேப்பு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஸ்வினின் பாசமிகு பேரனும் சௌந்தரம், ரோசி, இராசசிங்கம், சரஸ், தாசன், நோனி, காலஞ்சென்றவர் களான சலமன், பாவிலு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (31.01.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித யூதா ததேயு ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் யூதாததேயு சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இளவாலை. குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14
04
1931

மறைவு
12
02
2016

### அமரர் நகுலேஸ்வரி சுப்பிரமணியம்

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேந்திய எம்மிதயத் தெய்வமே
ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்.

என்றும் நினைவில்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். குடும்பத்தினர்.
021 205 3967

# புதுமைமாதா ஆலய வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.30

குருநகர் புதுமைமாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கான நவநாள் வழிபாடுகள் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெற்று வருகின்றன.

நற்கருணைத் திருவிழா நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். நாளைமறுதினம் 2ஆம் திகதி வியாழக்கிழமை திருவிழாத் திருப்பலிகளும் திருச்சொரூப பவனியும் நடைபெறும். அன்றைய தினம் அதிகாலை 5.15 மணிக்கு முதலாம் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு கூட்டுத்திருப்பலியும் மெழுகுவர்த்தி மந்திரித்தலும் நடைபெறும். மாலை 4.30 மணிக்கு அன்னையின் திருச் சொரூப பவனி நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்தது. (வ-51)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் **திருமதி றமணி ஜெயந்தன்** மற்றும் ஆசிரியராகக் கடமையாற்றும் **திருமதி றதினி றோய்லன்ஸ்** ஆகியோரின் பாசமிகு தாயார்

திருமதி **மேரி சிசிலியா இராய்ப்பு**

(ஓய்வுநிலை பிரதிஅதிபர் சில்லாலை றோ.க.த.க பாடசாலை)

அவர்களின் திடீர் பிரிவினால் (28.01.2017) ஆழ்துயரம் அடைந்திருக்கும் ஆசிரியர்களுக்கு அவர்களது உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா நித்தியமும் இறைவனில் சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.
யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**திரு. ப.லவக்காந்**

அவர்களின் அன்புத் தாயார்


**பவளநாதன் கௌரிமனோகரி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம். (J/9432) (22,17)

## ஈரவிழிகளுடன் ஆறாம் ஆண்டு

### கனகரத்தினம் குமாரசாமி (சங்கானை)



(சோதிடர், ஓய்வு பெற்ற நடத்துநர்.இ.போ.ச)


மலர்வு 11.01.1943
உதிர்வு 07.02.2011

திதி : சதுர்த்தி 31.01.2017 செவ்வாய்க்கிழமை

குடும்பத்தின் குல விளக்காய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் – நற் பண்புகளுடன்
எமை வழிநடத்தி எமக்காகவே வாழ்ந்து.....
ஆறாண்டுகள் ஓடி மறைந்துவிட்டதென்று நம்ப முடியவில்லை !
எம் மனதில் சோகம் அலைகடல் போல் இருந்தாலும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில் அகல்விளக்காய் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள் எங்கள் அப்பாவே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

நீகரை வீதி,
சங்கானை. (J 9435) (14,17,18)
உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### அரியரத்தினம் பிரபாகரன்

தாய் மடியில்
11.07.1950

ஆண்டவன் அடியில்
10.02.2008

திதி: சதுர்த்தி

கண்ணிலே நீர் கலங்கி நிற்கிறோம்
காணவில்லை உங்கள் திருமுகத்தை
மண்ணில் நீங்கள் வாழ்ந்த காலம்
மீளவும் வரும்மோ அப்பா

விமானநிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (J/ 9433)(12)
துயரில் வாழும்
குடும்பத்தினர்.

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 10, கச்சேரி, நல்லூர் வீதி, ஆதன இல.106 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சுப்பிரமணியம் பெண் வள்ளிப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் சிவியாதெரு மேற்கு, சிற்றம்பலம் கந்தையா பெண் சின்னம்மா தனது மரண சாதன இல.208/1952.08.14 ஆம் திகதியில் பிரசித்த நொத்தாரிஸ் க.தில்லையம்பலம் மூலம் வட மாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறையிலிருக்கும் 'கந்தன் வளவு' நில.பர. இல.3 என்னும் காணியில் தென்புறமாக அரைவாசியை பொன்னம்பலம் கனகரத்தினத்துக்கும், வடபுறமாக அரைவாசியை பொன்னம்பலம் புண்ணிய மூர்த்திக்கும் ஈகை செய்கின்றார். தற்போது இவ்வாதனத்தைப் பிரசித்த நொத்தாரிஸ் S.S. இராசநாயகம் முகதாவில் 2193/26.06.2004 ஆம் இலக்க வெளிப்படுத்துகை உறுதி மூலம் யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கச்சேரி, நல்லூர் வீதி 106ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பரமநாதன் குகதாச னும் பெண் சற்குணவதியும் 2004ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20ஆம் திகதி நிலஅளவையாளர் பி.தனராசாவினால் 2534ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பெற்ற 1,2,3 எண்களால் சுட்டப்பெற்ற துண்டுகள் நில. பர.3, குளி. 16.13 அதற்குச் சேர்ந்தவைகளும் தங்களின் பேரனும் பேர்த்தியு மாயிருந்து காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்பலமும் பெண் வள்ளிப் பிள்ளையும் சொந்தக்காரராயிருந்து தங்களுக்கு 1963ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணப் பகுதியின் பிரசித்த நொத்தாரிஸ் க.தில்லையம்பலம் முகதா வில் சீதன உறுதி நிறைவேற்றப்பட்டு அவ் உறுதி காணிக்கந்தோரில் பதியப்பட்டு மூலப்பிரதி கைவசம் இருந்துள்ளதென்றும், நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போதும், இடப்பெயர்வு காரணமாகவும் தொலைந்த படியால் காணிக் கந்தோரில் தேடுதல் செய்யப்பட்டு கண்டு பிடிக்க முடியாது போய்விட்டதாக வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் என்.தில்லை விநாயகம் முகதாவில் 5909 / 2005.08.21 ஆம் இலக்க பிரிவிடுதல் உறுதியில் பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதியும் முதலாம் புறத்தாரும், அவ்வூர் தர்மலிங்கம் கருணாகரன் பெண் கேமாவதியும் இரண்டாம் புறத்தாரும் சீதன சாதனங்களின்படி 2004.05.20 ஆம் திகதி 2534A இலக்கத்தில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.தனராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட படத்தின் படி நில.பர.3 குளி.16.62 இல் வடக்குப் புறமாக சீதனம் கொடுக்கப்பட்ட நில.பர.1. குளி 13.50 ஆகும்.

**இந்த நிலப்பரப்புக்கும் எல்லை**

**கிழக்கு:-** சுப்பிரமணியம் இராசையா, **வடக்கு:-** செல்வமாணிக்கராஜா பெண் சந்திராவதி, **மேற்கு:-** கச்சேரி, நல்லூர் வீதி, **தெற்கு:-** குறித்த படத்தில் 2 ஆம் இலக்கத்தால் சுட்டிய கருணாகரன் பெண் கேமாவதி.

தற்போது இவ்வாதனத்தைப் பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதி யும் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண் ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாரா வது இருப் பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும், உரிமை கோராதவிடத்துக் குறித்த ஆதனமானது பரமநாதன் குகதாசனும் பெண் சற்குணவதி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்புக்கும் யாழ்ப் பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை யும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(AJA/IN/00541)(11,17)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 08 கடற்கரை வீதி ஆதன இல 1005/7 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் சிவதாஸ் பெண்இந்திராணி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் துண்டி றோட்டைச் சேர்ந்த சைமன் அக்னேஸ் பிரசித்த நொத்தாரிஸ் வே.நடராசா முகதாவில் நிறைவேறிய 1893 இலக்க 1983.11.23 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தனது மகள் சிவதாஸ் இந்திராணிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் க.சேவகன் முகதாவில் 13511 ஆம் இலக்க 2012.08.26 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை. துண்டி றோட்டு இல.999 இராசநாயகம் உதயகுமாரும் பெண் உஷாந்தினியும் தனது மாதா காலஞ்சென்ற சிவதாஸ் பெண் இந்திராணி பெயரில் 1893/23.11.1983 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியின்படி தத்துவம் எடுக்க வேண்டிய பணத்தொகைக்கும் குறைவான மரணச்சொத்துக்களை விடுத்தும் தமது சொந்தங்களுக்கு ஏகஉரித்தாளியாக அவர்களின் ஒரே ஒரு பிள்ளையான எங்கள் 2ஆம் பெயரை விட்டு இறக்க மாதா வழி முதுசமாக வந்தடைந்தது என்று வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இல 9023/2.3.2013 மூலம் கொழும்புத்துறை. துண்டி வீதி. இல 1005/7 ஐ சேர்ந்த இராசநாயகம் உதயகுமாரும் பெண் உஷாந்தினியும் இல.149. 14 ஆம் குறுக்குத்தெரு. உதயபுரம் அரியாலை தென்கிழக்கைச் சேர்ந்த சிங்கராஜா அன்ரன் மரியசீலனிற்கும் பெண் ஜெயமரியரெட்ணத்திற்கும் அறுதியாக வழங்கி யுள்ளார்.

ஆதன விபரம் : வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை " கொள்ளுப்பிட்டி அல்லது மறவன் தோட்டம் " இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களின் வரைபட இலக்கம் 6013/2013.03.01 இல் துண்டு 01 எனக் காட்டப்பட்ட நில.பர.1 குளி 13.50 ஆகும் இதற்கு எல்லை.

கிழக்கு : கபிரியல் வெலிச்சோர் ஜெயபதியின் ஆதனம்

வடக்கு : ஒழுங்கை

மேற்கு: பாலசுப்பிரமணியம் பெண் பிறேமா யோகேஸ்வரி

தெற்கு : துண்டு 2

தற்போது இவ்வாதனத்தை சிங்கராஜா அன்ரன் மரியசீலனும் பெண் ஜெயமரியரெட்ணமும் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிங்கராஜா அன்ரன் மரியசீலன் பெண் ஜெயமரியரெட்ணம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

# கட்டாயக் கல்வி விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜன. 31

கட்டாயக்கல்வி விழிப்புணர்வுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித் தியாலயத்தில் நடைபெறும் என்று பாடசாலை அதிபர் அறிவித்தார்.

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடை பெறவுள்ளது. பாடசாலை அதிபர் வே.சிவ சக்திவேல் தலைமையில் நடைபெறும் கூட் டத்தில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல் விப் பணிப்பாளர் ந.காண்டீபனும், உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கனகேஸ்வரனும், முறைசாராக் கல்விச் செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜனும், சிறுவர் உரிமை மேம் பாட்டு அலுவலர் எஸ்.பத்மராஜாவும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜன. 31

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி யின் மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் இடம்பெறும் என்று பாடசாலை அதிபர் அறி வித்தார்.

பாடசாலை அதிபரும் மாணவர் நாடாளு மன்ற செயலாளர் நாயகமுமான வணபிதா கே.ஜேம்ஸ் சிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் ரி.அகிலனும், கௌரவ விருந்தினராக தீவக வலய கல்விப் பணிப் பாளர் எஸ். சுந்தரசிவமும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

கல்வியாண்டு 2017 - மாசி மாதத்திற்கான அனுமதிகள்
சர்வதேசத் தரம் வாய்ந்த Pearson HND பாடநெறியினால்
உங்களுக்குப் பிரித்தானியக் கௌரவப் பட்டமொன்று!



REGISTER NOW FOR THE FIRST STEP
PEARSON BTEC HND
- Software Engineering
- Computer Networking
- Computing
- Business Administration
- Marketing
- Accounting & Finance
- Hospitality Management
- Travel & Tourism Management
- Civil Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronic Engineering
- Quantity Surveying

SUBJECTS STREAMS & DEGREES WE OFFER
2017 மாசி மாதத்திற்கான பதிவுகள் தற்போது ஆரம்பம்
Duration: 18 months

வழங்கப்படும் பட்டப்பாடநெறி

From School of Computing
B.Eng (Hons) in Software Engineering
B.Eng (Hons) in Computer Networking
B.Sc (Hons) in Computing

From School of Hospitality Management
BA (Hons) in Hospitality Management
BA (Hons) in Travel & Tourism Management

From School of Business
BA (Hons) in Business Administration

From School of Engineering
B.Sc (Hons) in Civil Engineering
B.Sc (Hons) in Mechanical Engineering
B.Eng (Hons) in Electronic & Communication Engineering
B.Sc (Hons) in Quantity Surveying

FREE

for all Registrations

University Partners
Awarded By:
LONDON METROPOLITAN UNIVERSITY
Kingston University London
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிபெற்ற பல்கலைக்கழகம்

தவணை அடிப்படையிலும் செலுத்தலாம்
மாதாந்தக் கட்டணம் ரூ.12,500 மட்டும்

பட்டத்திற்கான முன்னோக்கிய பயண வழி
After O/Level → Foundation Diploma → HND → UK DEGREE (Final Year)
After A/Level → HND

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka | 021 222 4142 | 077309 9 308
HOTLINE
021 7 572 572
077 309 2626
இலங்கையின் மிகப்பாரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு

# மட்டக்களப்பில் 1,762 பேருக்கு காணிப்பத்திரங்கள்

## அரச தலைவரின் வருகையின் போது வழங்கப்படும்

மட்டக்களப்பு,ஜன.31
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 762 பேருக்கு காணி அனுமதிப் பத்திரங்கள், 962 வீடுகள், 10 ஆயிரம் மரக்கன்றுகள் என்பன அரச தலைவரின் ஏறாவூர் பயணத்தின் போது வழங்கி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அரச தலைவரின் ஏறாவூர் வருகையையொட்டி செய்யப்படவேண்டிய முன்னேற்பாடுகள் சம்பந்தமான கூட்டம் ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் அனைவரும் அபிவிருத்தியை நோக்கி செயலாற்றுகின்ற அதே வேளை சமூகத்தில் காணப்படும் போதைப் பொருள் பாவனை, சுற்றாடல் மாசு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சமூகம் கவனம் செலுத்த வேண்டும்.

27 சதவீதமாக இருக்கின்ற வளப்பகுதிகள் 32 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலர் இலக்கு வைத்துள் ளார்.

நாம் நமது சுற்றாடலில் உள்ள மரங்களை அழித்து விட்டு கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றோம். இந்த மனோநிலையை மாற்ற வேண்டும்.

சேதனப் பசளையைக் கொண்டு விளைவிக்கப் படுகின்ற உற்பத்திப் பொருள்களுக்கான மவுசு மேற் கத்தேய நாடுகளில் அதிகரித்துள்ளது.


கிழக்கு மாகாண சபை மரநடுகையை அதன் 2017ஆம் ஆண்டின் ஒரு செயற் திட்டமாக்க எண்ணியுள்ளது.

புல்மோட்டையிலிருந்து பொத்துவில் வரை வீதியோரங்களில் மரம் நடும் பணியை ஆரம்பித்து பசுமைச் சூழலை வஹர்க்கவுள்ளோம். பூங்கன்றை வீட்டில் வளர்ப்பவர்கள் மாங்கன்றையும் வளர்க்க வேண்டும்.

அரச தலைவரின் வருகையோடு பிரதேச அபிவிருத்திக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

கிழக்கில் 45 பிரதேச செயலக பிரிவிலும் பெரிய உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைக்கப் படும். முதற்கட்டமாக தற்போது சம்மாந்துறை, சீனவெளி ஆகிய இடங்களில்அமைக்கப்பட்டு வரும் தொழிற்சாலைகள் இன்னும் ஓரிரு மாதங்களில் அவற்றின்உற்பத்திகளைத் தொடங் கும்.

ஏறாவூர் மற்றும் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் வரும் மட்டக்களப்பு-கொழும்புநெடுஞ் சாலையில் கிரான் தொடக்கம் தன்னாமுனை வரை வடிகாலமைப்பும் கழிவு நீர் வெளியேற்றத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இவற்றுக்கென சுமார் ரூ.200 மில்லியன் ரூபா செலவு செய்யப்படும்.- என்றார். (ஐ)



> “ கிழக்கில் 45 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பெரிய உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைக்கப் படும். முதற்கட்டமாகத் தற்போது சம்மாந்துறை, சீனவெளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் தொழிற்சாலைகள் இன்னும் ஓரிரு மாதங்களில் அவற்றின் உற்பத்திகளைத் தொடங்கும்.


### ஆட்டோ விற்பனைக்கு

Tvs பேக்கறி ஆட்டோ விற்பனைக்கு.
(நல்ல நிலையில் உள்ளது)
**077 549 0937**

### வேலையாள் தேவை

மோட்டார் சைக்கிள் திருத்துபவர் தேவை
NO.37 , புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 321 0626

### வேலையாள்கள் தேவை

Fresh யூஸ் தயாரிக்க கூடியவர்கள்.
சிற்றுண்டி தயாரிக்க தெரிந்த சமையலாளர்கள் தேவை.
(ஆண்.பெண்)
**077 175 1495**

### காணி விற்பனைக்கு

கைதடி தெற்கு, கைதடி நவணியா வத்தை வீதியில் உள்ள காணி விற்பனைக்குண்டு.
**077 653 1627**

## CONGRAGULATIONS !!

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின்பட்டமளிப்பு நிகழ்வில்
31.01.2017 இன்று
**பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு**
மண்டபத்தில்
“ முதுகல்வியியல் மாணி”
பட்டத்தைப் பெறுகின்ற
**கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின்**
**பிரதி அதிபர் திரு. சரவணமுத்து அகிலன்**
அவர்கள் அதிகூடிய G.P.A யுடன் தேசியமட்டத்தில்
முதன்மைநிலை பெற்றமையைப் பாராட்டி
உவகையுடன் வாழ்த்துகின்றோம்.
Best Wishes
திரு.திருமதி ஜெயக்குமார் தங்கேஸ்வரி
குடும்பத்தினர்.



## 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற

**‘ றோயல் குளுக்கோஸ்’**

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**“ றோயல் குளுக்கோஸ்”**

Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670

**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2567**




## வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

**மலேசியா**

**01. சுப்பர் மார்க்கட் (60 ஆண்)**
RM 1000 SR 40000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

**02. சைப்பிறஸ் பாம் (20 ஆண்)**
SR 80000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

**சவுதி**

**01. Milk (பால் கம்பனி) (20 ஆண்)**
RL 1100 SR 44000 + OT
உணவு, தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

**02. சேல்ஸ்மன் (20 ஆண்)**
RL 1900 SR 76000 + OT
தங்குமிட வசதி, மருத்துவ வசதிகள் உண்டு.

Tel No: 077 044 7386/ 077 346 8011
E - mail: asianlanka27@gmail.com

## சேவை நலன் பாராட்டு



அகவை அறுபதை நிறைவுசெய்து இன்று
(31.01.2017) சேவையிலிருந்து ஓய்வுபெறும்
சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை
**திருமதி இந்திராணி ஜீவேந்திரா**
(B.A. (Hons) Tamil P.G.D.G)
அவர்களின் சேவை நலன் பாராட்டு
கடந்த 19 ஆண்டுகளாக தமிழ் பாடத்தை மகிழ்வுடன்
கற்பித்து மாணவர்களின் முன்னேற்றத்துக்கு
அயராது உழைத்து ஓய்வுபெறும் ஆசிரியை
அவர்களை செருக்கல் விநாயகரின் அருள்வேண்டி
நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
Congratulations
வாழ்த்துவோர்: **சேவையாளர் சங்கம்**
**யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
**திரு.தி.கிருஷ்ணதாஸ்**
(B.A,BEd,P.G.D.in Ed(Merrit),
N.D.T(Science),MEd)
அவர்கள் இன்று (31.01.2017)
செவ்வாய்க்கிழமை கொழும்பு
BMICH இல் நடைபெறும் தேசிய
கல்வி நிறுவக பட்டமளிப்பு விழாவில்
கல்விமுதுமாணி ( MEd )
பட்டம் பெறுவதையிட்டுப் பாராட்டி
வாழ்த்துகின்றோம். மேலும் பல
பட்டங்கள் பெற்றுக் கல்விச்
சமூகத்துக்கு சேவையாற்ற
வேண்டுமென்று இறைவனை
வேண்டுகின்றோம்.
**யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை ஆசிரியர்கள்.**

aat SRI LANKA

## 2017 ஜூலை பரீட்சைக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

க.பொ.த. சாதாரண / உயர்தரப்
பரீட்சையை நிறைவு செய்து விட்டீர்களா?

இப்போதே உங்கள் எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள்.

அனைத்து மட்டங்களுக்குமான தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள் ஆரம்பம் **February 04** முதல்

- *தலைநகர் மற்றும் யாழ் மண்ணின் முன்னணி விரிவுரையாளர்கள்*
- *நிரூபிக்கப்பட்ட உயர்தரமான சித்தி விகிதங்கள்*
- *உயர் தொழில் மற்றும் உயர் கல்வி வாய்ப்புக்களுக்கான தெளிவான வழிகாட்டல்கள்*

உங்கள் எதிர்காலத்துக்கான பலமான அடித்தளத்தை அமைக்க தொழில்சார் கணக்கியல் துறையின் வட இலங்கையின் முன்னணி அமைப்பான IBM உடன் இணையுங்கள்.

**IBM**
No. 01, Second Lane,
Power House Rd, Jaffna
Phone : 021 222 4111
Hotline: 0777 83 66 53
Quality Learning for Quality Life

## யாழ்ப்பாணம் நீதிமன்ற பதிவாளரின் அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சான்றுப் பொருள்களை உரிமைகோரிப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் கலெக்சி வர்க்க J1 அலைபேசி, NPHX 2211 இலக்க TVS மோட்டார் சைக்கிள், 57161362 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 03EK2562, இலக்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, E610986 இலக்க ஆண்கள் துவிச்சக்கர வண்டி, LH611360 இலக்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, EPXI9206 இலக்க அப்பாச்சி வர்க்க மோட்டார் சைக்கிள், 69890671 இலக்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, 57160761 லுமாலா வர்க்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, இலக்கம் தெளிவற்ற ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 56100940 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, இலக்கம் தெளிவற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி, 69584168 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, NPVS 1028 இலக்க சுப்பர் கப் மோட்டார் சைக்கிள், 033AB 2211 இலக்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, NPPV7819 இலக்க பட்டா லொறி ஆகியன நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களுக்குரிய உரிமையாளர்கள் யாராவது இருப்பின், 2 மாத காலப்பகுதிக்குள் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்று பதிவாளர் தெரிவித்தார். (வ-10)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுச் சந்திப்பு

வவுனியா, ஜன.31

கடத்தப்பட்டு, கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய சந்திப்பு ஒன்று வவுனியாவில் நேற்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பு வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள 'அமைதியகம்' எனும் இடத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 23ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை தங்கள் உறவுகளின் நிலை தொடர்பில் பதில் வழங்குமாறு கோரி தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பாதுகாப்பு அமைச்சின் இராஜாங்க அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைக்கு மூன்று வாரங்களில் தீர்வு தருவதாக எழுத்து மூலம் வாக்குறுதி வழங்கியதையடுத்து அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சந்திப்பு நேற்றையதினம் இடம்பெற்றது. அரச தலைவரைச் சந்திப்பது தொடர்பாகப் பேசப்பட்டது. இறுதி முடிவு மற்றொரு கலந்துரையாடலின் பின்னரே தெரிவிக்கப்படும் என்று கடத்தப்பட்டு, கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடைய சங்கத்தினர் தெரிவித்தனர். (வ-21)

# காணாமற்போனவர்களை கண்டறிய சிறப்புத் திட்டம்

### வலியுறுத்துகிறார் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்

கொழும்பு,ஜன.31

கடந்த காலங்களில் காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கு அரசு விசேட திட்டமொன்றை வகுக்க வேண்டும் என்பதுடன், காணாமற்போனவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலப்பகுதியில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் - காணாமற்போயுள்ளனர். இவர்கள் தொடர்பில் நேர்மையான விசாரணைகளோ தீர்மானங்களோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமன்றி, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

அந்தக் குடும்பங்கள் தமது உறவுகள் இன்று வருவார்கள் - நாளை வருவார்கள் என்ற நம்பிக்கையுடனேயே வாழ்ந்து வருகின்றனர். காணாமற்போன பிள்ளையை நினைத்து தாயும், கணவனை நினைத்து மனைவியும், தந்தையை நினைத்து பிள்ளைகளும் ஏங்கிக் கதறும் நிலை வடக்கு- கிழக்கில் தினமும் காணமுடியும். எனவே, இந்த விடயத்தில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

காணாமற்போனோர் பிரச்சினை வடக்கு-கிழக்கில் மட்டுமின்றி, முழு நாட்டிலும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு இன்றியுள்ளது. விசேடமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இது பெரும் பிரச்சினையாக உள்ளது.

ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை முன்னாள் அதிபர் யூ.எல்.தாவூத் சேர், ஓட்டமாவடி தவிசாளர் புகாரி விதானே போன்ற சமூகத்தின் முக்கியமானவர்கள் பலர் கடத்தப்பட்டனர்.



அதுமட்டுமன்றி 'ஹஜ்' கடமையை நிறைவேற்றிவிட்டு காத்தான்குடி திரும்பிக் கொண்டிருந்த 150 மேற்பட்ட முஸ்லிம் யாத்திரிகர்கள் குருக்கள்மடம் பகுதியில் வைத்து கடத்தப்பட்டனர். அவர்கள் இருக்கின்றார்களா? இல்லையா? அவர்களுக்கு என்ன நடந்தது என எந்தத் தகவலும் இல்லை.

இவ்வாறு போர்க் காலப்பகுதியில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் - காணாமற்போயுள்ளனர். இவர்கள் தொடர்பில் நேர்மையான விசாரணைகளோ தீர்மானங்களோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. எனவே, இது தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். என்றார்.(ஐ)

## புதிய சட்டதிட்டங்களால் வாகன விற்பனையில் சரிவு

கொழும்பு, ஜன 31

வாகன இறக்குமதிக்கு அரசு அண்மையில் விதித்திருக்கும் புதிய சட்ட திட்டங்களால் அவற்றின் விற்பனை 40 வீதம் குறைந்திருப்பதாகவும், அதனால் வாகனவிற்பனையாளர்கள் பெரும்சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரியவருகின்றது.

அதிகரித்த தீர்வை மற்றும் வரிகள் காரணமாக வாகனங்களின் விலைகள் மிகவும் உயர்ந்திருப்பதால் அவற்றை விற்கமுடியாமல் இருப்பதாகவும், ஒரு சில வாகனக் காட்சிக் கூடங்களில் கடந்த நான்கு மாதங்களில் ஒரு வாகனமேனும் விற்கப்படவில்லை எனவும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிறப்பாக 2017 வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட புதிய வாகனக் குத்தகை (லீசிங்) நிபந்தனைகளே வாகன விற்பனையைப் பெரிதும் பாதித்திருப்பதாகவும், இந்த ரீதியில் சென்றால் தங்களது எதிர்காலம் மேலும் மோசமடையும் எனவும் சங்கத்தின் பேச்சாளர் கவலை தெரிவித்தார். (து)

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக கம்பஹா மாவட்ட நிர்வாக சேவைகள் சங்கம் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

அண்மையில், திவுலப் பிட்டிய பிரதேச செயலாளரிடம் தகாத வார்த்தைகள் பிரயோகித்தமையைக் கண்டித்தே இந்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளரிடம், பிரதி அமைச்சர் மன்னிப்புகோரவேண்டும்என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அண்மையில், திவுலப் பிட்டியப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப் பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## அரச அதிகாரிகளுடன் அணுகுமுறை; அரசியல் தலைவர்களுக்கு விரைவில் செயலமர்வு

அரச அதிகாரிகளுடன் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து அரசியல்வாதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது. அரசியலில் பிரவேசிக்கும் புதியவர்களுக்கு, அரச அதிகாரிகளுடன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, விரைவில் செயலமர்வு ஒன்றை நடத்த உள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விடயம் குறித்து தலைமை அமைச்சர் மற்றும் அரச தலைவருக்குத் தெளிவுபடுத்தியிருந்தேன். குறிப்பாக அரசியலுக்குவரும் புதியவர்கள் அரச நிர்வாக விடயங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து தலைமை அமைச்சர் தெளிவுபடுத்த உள்ளார். அரச அதிகாரிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும்.

ஏதேனும் தவறுகள் இடம்பெற்றால் அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும். துறைசார் அமைச்சர் என்ற ரீதியில் அரச அதிகாரிகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு. அதனை உரிய முறையில் நான் மேற்கொள்வேன்- என்றார். (ஐ)

மட்டக்களப்பில்

## மழையால் 12,195 பேர் பாதிப்பு

### இருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஜன.31

கடந்த சில நாள்களாகப் பெய்த அடை மழை காரணமாக மட்டக்களப்பில் 3 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 195 பேர் பாதிக்கப்பட்டதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் கடற்கொந்தளிப்புக் காரணமாகப் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளனர். போரதீவுப்பற்றில் ஒரு வீடும், மண்முனைப் பற்றில் 2 வீடுகளும், (பகுதியளவில்) மண்முனை வடக்கில் ஒரு வீடும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் 2ஆயிரத்து 185 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 564 பேரும், வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 77 பேரும், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 32 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 200 பேரும், மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 78 குடும்பங்களைச் சேர்ந்த 344 பேரும், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும், மண்முனைப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேரும், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிரான் பிரதேசத்திலுள்ள பூலாக்காடு, முறுத்தானை, கோராவளி, வடமுனை, ஊத்துச்சேனை திகிலிவெட்டை, பெரில்லாவெளி, குடும்பிமலை ஆகிய கிராமங்களுக்கான தரை வழிப் போக்குவரத்து வெள்ளம் காரண மாகத் துண்டிக்கப்பட்டிருந்தது எனவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஐ)

## மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புக்கள்

தென்மராட்சி ஜன. 31

சாவகச்சேரி - கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர், பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்களை நாளை முதலாம் திகதி முதல் ஆலய மண்டபத்தில் நடாத்தவுள்ளதாக அறிவித்தனர்.

கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் கல்வயல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் மாலை நேர வகுப்புக்களில் கலந்து கொள்ளமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் பாடத்திட்டத்துக்கு அமைவாக தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் நடனம், சங்கீதம், மிருதங்கம் போன்றவை கற்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (வ- 9)

# முடிவில்லாது தொடரும் கரந்தாய் மக்களினது காணிப் பிரச்சினை

கிளிநொச்சி, ஜன.31

தெங்குப் பயிர்ச் செய்கை சபையால் கைய கப்படுத்தப்பட்டுள்ள கரந்தாய் மக்களின் காணிகளை மீள வழங்குவதில் தொடர்ந்தும் இழுபறி நிலையே காணப்படுகின்றது. கடந்த ஜூன்மாதம்கிளிநொச்சிமாவட்டச் செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் மக்களிடம் காணி களை ஒப்படைப்பதற்கு தெங்கு பயிர்ச் செய்கைச் சபைக்கு இணைத்தலைவர்கள் காலக்கெடு விதித்தனர். எனினும் இதுவரை காணிகள் ஒப்படைக்கப்படவில்லை.

பளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ளது கரந்தாய் கிராமம். 1976ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் மக்களுக்கு அங்கு காணிகள் வழங்கப்பட்டன. போரால் இடம்பெயர்ந்த அவர்கள் மீளக்குடியமர்ந்த போதே பிரச்சினை ஏற்பட்டது.

பளை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை கடந்த 3 ஆண்டுகளாக அந்தக் காணி களுக்கு உரிமைகோரி வருகி றது. மக்கள் மீள் குடிய மர்வதற்காக தற்கா லிக இருப்பிடங்களை அமைக்க முயன்ற போது பொலிஸாரைக் கொண்டு கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த மன்று குறித்த காணி மக்களுடை யது என்பதற்கான ஆதாரங்களை மன் றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்து அவர்களைவிடுவித்தது.

**மக்களின் காணி**

இந்தவிடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் பலவற்றில் ஆராயப்பட்டது. 2015ஆம் ஆண்டு நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் அந்தக் காணிகள் மக்களுடையவை என்பதை பிரதேச செய லர் திட்டவட்டமாகக் கூட்டத்தில் தெளிவு படுத்தியிருந்தார். தெங்கு அபிவிருத்தி சபையினர் அத்துமீறியே மக்களை வெளி யேற்றினர் என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந் தார். மக்களுக்கு காணிகளை வழங்க வேண்டும் என்று இணைத்தலைவர்கள் பிரதேச செயலருக்குப் பணித்தனர். எனினும் காணிகள் வழங்கப்படவில்லை.

அதன்பின்னர் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினர் மக்களிடமோ, பிரதேச செய லரிடமோ அனுமதி பெறாது காணிகளுக்குள் தென்னங்கன்றுகளை நட்டனர்.

மூன்று மாதங்களின் பின்னர் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டது. அந்தக் கூட்டத்துக்கு காணி மறுசீரமைப்பு ஆணை யாளரும் வந்திருந்தார். காணிகளை மக் களுக்கு வழங்குவதில் எந்த ஐயமும் இல்லை என்று அவர் கூட்டத்தில் கூறினார். தென்னை பயிர்ச் செய்கைச் சபை சார்பாகக் கலந்து கொண்ட மாவட்ட முகாமையாளர் ஜூலை 15ஆம் (2016) திகதிக்குள் மக்கள் குடிய மர்த்தப்படுவார்கள் என்று உறுதியளித்தார்.

**தீராத பிரச்சினை**

கையகப்படுத்தப்பட்ட காணிகள் இதுவரை மக்களுக்கு வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் பல உதவித் திட்டங்களை இழக்கும் நிலை தற்போது தோன்றியுள்ளது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் எமக்குப் பொமிற் தந்தார்கள். 2015ஆம் ஆண்டு வரை பண மும் செலுத்தியுள்ளோம். காணியை விடு வார்கள் என்று பார்த்திருக்கின்றோம். வீட்டுத் திட்டத்துக்குப் பதிந்துள்ளோம். காணியை எம்மிடம் ஒப்படைக்காவிட்டால் வீட்டுத் திட்ட மும் கிடைக்காது. எங்களின் காணிகளை விடுவிக்க வேண்டும். நாங்கள் எங்கள் காணிகளில் வாழவே ஆசைப்படுகின் றோம்- என்று பாதிக்கப்பட்ட மக்கள் வேத னையுடன் கூறினர்.

**எமக்கு தெரியாது**

மக்களால் கோரப்படும் காணியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 320 ஏக்கர் காணியில் 163 ஏக்கர் காணியில்தான் பயிர்ச் செய்கை நடக்கின்றது. மீதிக் காணிகளை மக் கள்தான் வைத்துள் ளனர். இது தொடர் பாக மாவட்டச். செய லருக்குத் தெரியப் படுத்தியுள்ளோம். 320 ஏக்கருக்கும் காணி சீர் திருத்த ஆணைக் குழுவுக் குப் பணம் செலுத்து கின்றோம். இந்த விடயத்தில் காணி சீர்தி ருத்த ஆணைக் குழுதான் பதிலளிக்க வேண்டும். காணி களில் குடியிருந்த வர்கள் தொடர்பான விவரங்களை பச் சிலைப்பள்ளி பிர தேச செயலரிடம் கோரி யிருந்தோம். இது வரை கிடைக்கவில்லை- என்று தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் கூறினார்.

**முன்னேற்றம் இல்லை**

காணிகள் விடுவிப்பு தொடர்பில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஜனாதிபதி செயலகத்தால் காணி தொடர்பாக மாவட்டச் செயலகத்திடம் அறிக்கை கோரப்பட்டது. அதை அனுப்பியுள்ளோம். மீள்குடியேற்ற அமைச்சில் இருந்தும் தகவல்கள் கோரப் பட்டன. அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள் ளன. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்களின் காணிகளைக் கையளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அது நடை முறைப்படுத்தப்படவில்லை- என்று பச் சிலைப்பள்ளி பிரதேச செயலர் பி.ஜெய ராணி தெரிவித்தார்.

**ஜனாதிபதிக்கு கடிதம்**

காணிகளை கையளிப்பது தொடர்பாக ஜனா திபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன். நாடாளு மன்றில் இது தொடர்பாகப் பேசினேன். வடக்கு முதலமைச்சர் அல்லது கிளி. மாவட்ட செயலர் தலைமையில் குழு அமைத்து தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெங்கு அபிவிருத்தி அமைச்சர் கூறினார். விரைவில் தீர்வுக்கான நடவடிக்கை எடுக்கப் படும்.-என்று கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இணைத்தலைவர்களில் ஒருவருமான சி.சிறீதரன் கூறினார்.

(ற-21,6)

# வாழ்வாதாரம் இல்லை என்று அன்ரனிபுரம் மக்கள் கவலை

## உதவிகள் வழங்கப்படுகின்றன என தெல். பிரதேச செயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

அண்மையில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், தெல்லிப்பழையில் உள்ள அன்ரனி புரம் கிராமத்தில் எந்தவித தொழிலும் செய்ய முடியாத நிலை உள்ளது என்று அங்குள்ள மக்கள் விசனம் தெரிவித்தனர்.

பலாலி வடக்கில் ஜே 254 கிராம அலுவலர் பிரிவில் உள்ளது அன்ரனிபுரம். சில மாதங்களுக்கு முன் னர் அந்தக் கிராம மக்கள் மீள்குடியமர்வுக்கு அனு மதிக்கப்பட்டனர். இந்தக் கிராம மக்களின் வாழ் வாதாரத் தொழிலாக கடற்றொழிலே உள்ளது. தற் போது கடற்றொழில் செய்ய முடியாத நிலை காணப் படுகின்றது. வாழ்வாதாரத் தொழிலைச் செய்யக் கூடியவாறு இறங்குதுறை அமைக்கப்பட வேண்டும். இந்தப் பகுதிக்கான பாடசாலை இன்னமும் விடு விக்கப்படவில்லை. மாணவர்கள் கற்றலுக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. பேருந்துச் சேவைகள் எவையும் கிடையாது. படி ரக வாகனங் களில் மாணவர்கள் சிரமத்துடன் பாடசாலை செல்கின்றனர்.

பல குடும்பங்கள் உணவின்றியுள்ளதை அறிந்த ஒருவர் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 10 கிலோ அரிசி வழங்கினார். எமது வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்ள உதவ வேண்டும் - என்று அந்தக் கிராம மக்கள் கூறினர்.

அன்ரனிபுரம் கிராம மக்களுக்குப் பல உதவிகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வான்தோண்டும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. கிராமத்தைச் சேர்ந்த 108 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறு மதியான வலைகள் வழங்கப்பட்டன. 135 குடும் பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. குடி தண்ணீர் வழங்கும் நடவடிக்கையும் 25 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படுகின்றது.- என்று தெல்லிப்பழைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற-10)



# வெளிவாரி பட்டப் படிப்பு பட்டம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள் மற் றும் தொலைக்கல்வி அலகின் பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. 450 வெளிவாரி மற்றும் தொலைக் கல்வி பட் டங்களைப் பெற்ற பட்ட தாரிகளுக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் வசந்தி அர சரட்ணம் பதக்கங்கள் அணிவித்தார். "பழைய பாட விதானங்களைப் புதி தாக மாற்றுகின்றோம். பழைய பாட விதானங்களில் பதிவு செய்தவர் களின் பதிவுகள் குறிப்பிட்ட காலத் தின் பின்னர் நீக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பதிவு செய்த வர்கள் தமது பட்டங்களைப் பெறு வதற்கு ஆவன செய்ய வேண்டும்" - என்று பல்கலைக்கழக துணை வேந்தர் தெரிவித்தார்.

(ற)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நாகேந்திரம் பேரின்பநாயகம்

தோற்றம்:- 06.06.1947 திதி:- சதுர்த்தி மறைவு :24.01.2015

தோற்றமும் மறைவும் இயற்கை வகுத்த நியதி என்றாலும்
இன்பமும் துன்பமும் வாழ்வின் மேடையில் அரங்கேறும்
நாடகம் ஆனாலும்
பார்த்துப் பழகிய கண்களும், பேசிப்பழகிய வாயும், கேட்டு
மகிழ்ந்த காதுகளும்
நினைவுகள் பதித்த நெஞ்சும் ஐயகோ
அன்னாரின் பிரிவுத் துயரால் தவிக்கின்றதே குடும்பம்
நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமென மனங்களிலே வீசி நின்றீரே!
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணி மனம் வெதும்பியே வாடுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

பிரிவால் துயருறும்:- குடும்பத்தினர்.

# குடும்பத் தலைவர் விபத்தில் படுகாயம்

தென்மராட்சி, ஜன். 31

ரயர் வெடித்ததால் திடீரென சாலையை விட்டு விலகிச் சென்ற கார், அதே திசையில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும் பத் தலைவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கேரதீவு சங்குப்பிட்டிப் பாலத்தில் இடம்பெற்றது. மன்னார் நானாட்டானைச் சேர்ந்த செல்வராசா ஜெயச்சந்திரா (வயது - 37) என்பவரே படுகாயமடைந்தார். அவரின் கால் மீது கார்ச் சில்லு ஏறியதால் கால் முறிந்ததுடன் கால் தசையும் சிதை வடைந்தன. சாவகச்சேரி வைத்தியசா லையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தி யசாலைக்கு மாற்றப்பட்டார்.

(வ 9)



மகாத்மா காந்தியின் 69 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் யாழ். போதனா வைத்திசாலைக்கு முன்பாக உள்ள மகாத்மாகாந்தியின் சிலை அருகில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (ற-8)

# நில விடுவிப்பை இழுத்தடிக்கிறது இராணுவம்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, ஜன.31

வவுனியா, செட்டிகுளம் மெனிக் பாம் நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்ட 6 ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு வாக்குறுதி வழங்கியது. இதுவரை நிலம் விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

அவர் தெரிவித்ததாவது-

மெனிக்பாம் நலன்புரி நிலையம் அமைந்திருந்த நிலப்பரப்பு தற்போது வரை இராணுவத்தினர் வசமே உள்ளது. நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று மாவட்ட செயலாளர் ஊடாகப் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வவுனியாவுக்கு வந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நிலத்தை முழுமையாக மாவட்ட செயலரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இராணுவத்துக்கு அறிவுறுத்தினார். நிலத்தை விடுவிப்பதற்கு இராணுவமும் இணங்கியது.

இந்தப் பகுதி விடுவிக்கப்பட்டால் அந்தப் பிரதேசத்தைப் பூர்வீகமாகக் கொண்ட நிலமற்றவர்களுக்கும், அங்கு வாழ்பவர்களின் வாழ்வாதாரத்துக்கான பண்ணைகளுக்காகவும், மேய்ச்சல் தரவையாகவும் பயன்படுத்த எதிர்பார்த்திருந்தோம்.

இணக்கம் தெரிவித்து 6 மாதங்கள் கடந்துள்ளபோதும் இராணுவம் இதுவரை நிலத்தை விடுவிக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய அந்தப் பகுதி விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.(ற-101)

## காணாமல்போன முதியவர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஜன.31

புல் வெட்டச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த முதியவர் ஐந்து நாள்களின் பின்னர் வயலில் சடலமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டார்.

மிருசுவில் வடக்கு, மன்னங்குறிச்சியைச் சேர்ந்த மாப்பாணி நடேசபிள்ளை (வயது-64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அந்தப் பகுதி வயலில் காகங்கள் பறப்பதை அவதானித்துச் சென்று பார்த்தபோதே முதியவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

முதியவரின் சாவு தொடர்பாக நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிவானிடம் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தனர். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அருகில் உள்ள வயலில் புல் அறுத்து வருவதாகக் கூறி முதியவர் சென்றுள்ளார். அதன்பின்னர் அவரைக் காணவில்லை என்று அவரது குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். (ற-9)

## தொலைந்த தாய் பற்றி ஏதுமில்லை

முல்லைத்தீவு, ஜன.31

முல்லைத்தீவில் கடந்த மாதம் காணாமல்போனோர் என்று தெரிவிக்கப்படும் இரு பிள்ளைகளின் தாய் தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாந்தை கிழக்கு பாண்டியன்குளத்தைச் சேர்ந்த நிசாந்தன் யாழினி (வயது-32) என்பவரே கடந்த மாதம் 29ஆம் திகதி காணாமல் போயுள்ளார். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அந்தப் பெண்ணின் நிலைமை தொடர்பில் எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-21)

# நாவற்குழி வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.31

நாவற்குழி வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது. யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் அடிக்கல் நட்டார். வீடமைப்பு அதிகார சபையால் மானிய அடிப்படையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. 50 பெரும்பான்மையின குடும்பங்களுக்கும், 200 தமிழ்க் குடும்பங்களுக்கும் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

பெரும்பான்மையின வீட்டுத் திட்டத்துக்கு பௌத்த வழிபாட்டுடன் முதலில் அடிக்கல் நடப்பட்டது. தமிழ் மக்களுக்கான அடிக்கல் பின்னர் நடப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) எஸ். முரளிதரன், நாவற்குழி விகாராதிபதி, பொலிஸார், பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண சபையில் இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. முன்னர் வாழ்ந்த பெரும்பான்மையினக் குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பெரும்பான்மையின மக் களின் குடியேற்றத்துக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்த அவர் நாவற்குழி வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் விழாவின்போது எவரும் போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என்றும், வீட்டுத் திட்டம் தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், யாழ். மாவட்டச் செயலாளர் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டன என்றும் தெரிவித்திருந்தார். (ற-8)



## சைக்கிள் திருடனை மடக்கிய மக்கள்

தென்மராட்சி, ஜன.31

கொடிகாமம் நகரப் பகுதியில் சைக்கிள் திருட முற்பட்ட ஒருவரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

சந்தையில் பொருள்கள் வாங்குவதற்காக சைக்கிளை நிறுத்திப் பூட்டி விட்டு ஒருவர் சென்றுள்ளார். அதை வேறொருவர் எடுத்து செல்ல முற்பட்டதை அவதானித்த வர்த்தகர் ஒருவர் சத்தமிட்டுள்ளார். அங்கு கூடிய பொதுமக்கள் குறித்த நபரைப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸார் சாவகச்சேரி நீதிவானிடம் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-9)


## வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல் - 2017

வளலாய் கோழி இறைச்சிக்கடையினை 2017ஆம் ஆண்டிற்கு (15.02.2017 - 31.12.2017 வரை) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 01.02.2017– 09.02.2017 பி.ப 3.00 மணிவரை.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 13.02.2017 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 13.02.2017 பி..ப 02.30 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதியை **"செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை,தலைமை அலுவலகம்,புத்தூர்"**எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் ,எதிர்வரும் **13.02.2017ஆம்** திகதி பி.ப **02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ,அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி வளலாய் கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 10000.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

யுகராஜா ஜெலீபன்
செயலாளர்
வலி கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.
31.01.2017


## போசாக்கின்மை விவரங்கள் தென்மராட்சியில் சேகரிப்பு

தென்மராட்சி, ஜன.31

தென்மராட்சிப் பிரதேசத்தில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகள், சிறுவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. பிரதே செயலக கிராம அலுவலர்கள், சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள், கிராமிய போசாக்குக் குழுவினர் இணைந்து விவரங்களைத் திரட்டுகின்றனர்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட கர்ப்பம் தரிக்கக் கூடிய தகைமையுள்ள பெண்களில் 5 ஆயிரத்து 182 பேர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறுமை, குழந்தைப் பராமரிப்பு போதாமை, குழந்தைகளின் போசாக்கு, தொற்றாநோய், உணவுப் பாதுகாப்புத் தன்மை குறைவடைதல், நீர் மற்றும் சுகாதாரத் தன்மை போசாக்கு தொடர்பான அறிவு போதாமை, போசாக்கு ரீதியான ஆபத்து வகைகளான பிறப்பு நிறை குறைவு, குட்டை, நிறை கூடிய குருதிச் சோகை, கர்ப்பிணித் தாய் போன்றவற்றுடன் முன் கர்ப்பிணிப் பருவப் பெண் பிஎம்ஐ 18.5.க்கு குறைந்தது, முன் கர்ப்பிணிப் பருவப் பெண் பிஎம்ஐ 24.9க்கு கூடியது மற்றும் ஏதேனும் உதவி வழங்கப்பட்டிருந்தால் அதன் விவரம், சமுர்த்தி மாதாந்த உதவித் தொகை பெறுபவரா போன்ற விவரங்கள் திரட்டப்படுகின்றன.

கடந்த வருடம் பெறப்பட்ட விவரங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களின் நிறை மற்றும் உயரம் போன்றவை பார்க்கப்பட்டு கர்ப்பம் தரிக்கும் தகைமையற்றவர்களும் ஆய்விலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடத்துக்கான கிராமிய சுகாதார போசாக்குக் குழுக்களைச் சீரமைக்கும் பணிகளும் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## விபத்தில் மூவர் சாவு 19 பேர் காயம்

மட்டக்களப்பு,ஜன.31
அக்கரைப்பற்று - மட்டக்களப்பு பிரதான வீதி, சாய்ந்தமருதுப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று சிறுவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 19 பேர் காயமடைந்தனர்.

அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று அதற்கு எதிர்த் திசையில் வந்த் வானுடன் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 22 பேர் கல்முனை அஷ்ரப் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அதில் மூன்று சிறுவர்கள் உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)

# நல்லாட்சியும் எம் தலையில் மிளகாய் அரைத்து விடும்

## மனோ கணேசன் காட்டம்



கொழும்பு, ஜன. 31
சற்று அசந்தால் நமது நல்லாட்சியும் எமது தலையில் மிளகாய் அரைத்துவிடும். இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்

சாய்ந்தமருதில் இளைஞர் தலைமைத்துவ மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பான்மை இனத்துக்கும், மதத்துக்கும், மொழிக்கும் அடிமைப்பட்டுச் சேவகம் செய்வதுதான் தேசிய ஐக்கியம் என்று சிலர் நினைக்கின்றனர். சிறுபான்மையினராகிய நாம் பெரும்பான்மையினருக்கு கைகட்டி நிற்பதானது சரணடைவது போன்றதாகும். ஆண்டானுக்கும் அடிமைக்குமிடையில் ஒருபோதும் சமத்துவம் வராது. தேசிய ஐக்கியம் என்ற பெயரில் எங்களது மொழியை, மதத்தை, இனத்தை, கலாசாரத்தை, பண்பாட்டுவிழுமியங்களை விலைபேசி விற்க முடியாது.

கட்சிகளுக்கு மத்தியில் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால், இனம், மதம், மொழி என்று வரும்போது நாங்கள் ஒன்றுபட்டே ஆக வேண்டும். சிறுபான்மையினர் ஒன்று சேர்வது என்பது சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. பெரும்பான்மை சமூகத்தில் நேர்மையானவர்கள் அதிகம் இருக்கின்றனர். அவர்களுக்குள் இருக்கின்ற ஒருசிறு குழுவினர்தான் சிங்கள மக்களை தவறாக வழிநடத்த முற்படுகின்றனர் - என்றார். (5)



மன்னார் நாகதாழ்வு புனித தோமையர் ஆலயத்துக்காக வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒலி பெருக்கி சாதனங்களை நேற்று ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார். (ஐ-56)

## பண்பாட்டுப் பெருவிழா

கிளிநொச்சி,ஜன.31
கிளிநொச்சி-பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தின் பண் பாட்டு பெருவிழா இன்று பளை வேம்பொடுகேணி பாடசாலைவிழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பி.ஜெயராணி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், தலைமை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச செயலர் சி.சத்தியசீலன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் செ.வனஜா ஆகியோரும் கலந்கொள்வர்.

நிகழ்வில் இசை நிகழ்வுகளும், நூல் வெளியீடும், மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம் பெறும். (ஐ-6)

சிவமயம்

யாழ்.கோண்டாவில் கிழக்கு

அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

02.02.2017



தைத்திங்கள் 19 ஆம் நாள்(01.02.2017) புதன்கிழமை எண்ணெய்க்காப்பும், தைத்திங்கள் 20ஆம் நாள் (02.02.2017) வியாழக்கிழமை ஷஷ்டி திதியும், ரேவதி நட்சத்திரமும், மீன லக்கினமும் கூடிய காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை வரும் சுபமுகூர்த்த சுபவேளையில் மஹா கும்பாபி ஷேகமும் நடைபெறவிருப்பதால் அனைத்து வைபவங்களுக்கும் தாங்கள் வருகை தந்து சிறப்பித்து அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

03.02.2017 வெள்ளிக்கிழமை நாதஸ்வர இளைவரசன் பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர் இணைந்து வழங்கும்

நாதசங்கமம் இசை நிகழ்வும், கலை நிகழ்ச்சியும்

மாலை 6.00 மணிக்கு

(c/23852)(11,)

- ஆலய பரிபாலன சபையினர் -

# மகிந்தவின் அரசியல் பயணத்துக்கு புதல்வர்களால் மீண்டும் பாதிப்பு



கொழும்பு,ஜன.31
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர்களான நாமல் ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்சவினால் மீண்டும் மகிந்தவின் அரசியல் பயணத்துக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் தொடர்பில் எவ்வித அனுபவமும் அற்ற ஷிராந்தி ராஜபக்ச, தனது புதல்வர்களான நாமல், யோஷித மற்றும் அவர்களது ஆதரவாளர்களை முன்கொண்டுவருவதற்கு முயற்சிப்பதனால் தற்போது மகிந்தவும் அவரது அரசியல் நடவடிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அண்மையில் நுகேகொடயில் நடந்த பேரணி மூலம் அது உறுதியாகியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுவரையில் மகிந்தவுக்காக சிவில் சமூகத்தினர் மற்றும் சமூக ஊடகங்களில் பெரிய நடவடிக்கை மேற்கொண்டு வந்தவர்கள் நாமல் மற்றும் யோஷிதவின் நணபர்கள். சிங்கள பிரபல பாடகரின் குழு மற்றும் காஞ்சனா விஜேசேகர ஆகியோர் இணைந்து கடந்த நுகேகொட பேரணியில் ஆதிக்கம் செலுத்தி அனைத்தையும் தங்கள் கைக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதற்காக முழுமையான பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆரம்ப காலங்களில் இருந்தே மகிந்தவுக்கு நெருக்கமாக செயற்பட்ட இளைஞர் குழுவுக்கு நாமல் மற்றும் யோஷிதவின் நண்பர்கள் எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக கூட்டு எதிர்க்கட்சியினர் மீண்டும் மகிந்தவுக்கு ஆதரவு வழங்குவதா, என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய நிலைக்குள்ளாகியுள் ளனர். இதன்மூலம் பெருமளவான இளைஞர் குழுவினர் மகிந்தவை விட்டு விலக ஆயத்தமாகியுள்ளதாக குறித்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஐ)

# இலங்கையின் பொருளாதாரம் கடும் ஆபத்தில்

## ஒன்றிணைந்த எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.31
நாட்டின் பொருளாதாரம் பூகோள பொருளாதாரச் சுட்டிகள் பலவற்றில் கீழிறங்கியுள்ளது. இதனால் பொருளாதாரம் பெரும் ஆபத்தைச் சந்தித்துள்ளது. மத்திய வங்கியில் நடைபெறும் ஊழல்களே இதற்குக் காரணம் என ஒன்றிணைந்த எதிரணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்ததாவது:

புளூம்பேர்க்கின் பூகோள ஆபத்து அறிக்கையிடலிலும், ட்ரான்பரன்ஸி இன்டர்நனலின் பன்னாட்டு ஊழல் சுட்டெண் 2016 இலும், பூகோள பட்டினிச் சுட்டெண்ணிலும் பிற தரப்படுத்தலிலும், இலங்கையின் பொருளாதாரம் பின்தள்ளப்பட் டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரூபாயின் மதிப்பிறக்கத்தைத் தடுப்பதற்காக 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்டுள்ளன. நாட்டின் இருப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படும் நிலையிலேயே இது மேற்கொள்ளப்பட்டுள் ளது.

பன்னாட்டு நிறுவனங்களின் இந்த அறிக்கைகளைத் தொடர்ந்து, இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதா, இல்லையா என முதலீட்டாளர்கள் சிந்தித்து வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளமையை இந்த அறிக்கைகள் காட்டுகின்றன. பொருளாதாரம் பாதிக்கப்படவில்லை என அரசு திரும்பத் திரும்ப சொல்கின்றமைக்கு மத்தியிலேயே இது நடைபெற்றுள்ளது. நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமையைத் தொடர்ந்து, 2.6 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை, முதலீட்டாளர்கள் திரும் பப் பெற்றுள்ளனர். இதற்கு இந்த அரசே நேரடிப் பொறுப்பு. இந்த ஆபத்தை அரசு உணர்ந்துள்ளது. அதை மறைக்க முயல் கின்றது. இந்த இழப்பை ஈடுகட்டுவதற்காக நாட்டின் நிலங்களையும், ஏனைய அரச நிறுவனங்களையும் விற்கிறது-என்றார். (ஐ)

# மகிந்த அணி உறுப்பினர்களின் குடியுரிமையைப் பறிக்கச் சதி

பந்துல குணவர்தன குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.31
கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களது பிரஜாவுரிமையை ரத்துச் செய்ய முயற்சிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

புஞ்சிபொரளை சிறிவஜிராஸ் ரம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடக சந்திப்புக்களை நடத்தியதாகக் குற்றம் சுமத்தி கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்து, அவர்களின் பிரஜாவுரிமையை ரத்துச்செய்யும் திட்டமொன்றை அரசு முன்னெடுத்து வருகின்றது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை மௌனிக்கச் செய்ய அரசு கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமையை ரத்துச் செய்ய அடிப்படையற்ற காரணங்கள் பயன்படுத்தப்பட்டதனைப் போன்று கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களை முடக்கவும் முயற்சிக்கப்படுகிறது-என்றார். (ஐ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
இன்று (31.01.2017) செவ்வாய்க்கிழமை கொழும்பு BMICH இல் நடைபெறும்
பட்டமளிப்பு விழாவில்
கல்விமாணிப்பட்டம் (ஆரம்பக்கல்வி)
பெறும் எமது ஆசிரிய குழாத்தினரை மனமார வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் உயர்ந்த பட்டங்களைப் பெற்று வாழ்வில் உயர்ந்திட அன்புடன் வாழ்த்துகின்றோம்.



செல்வி சுதாமதி கனகரெத்தினம்
திருமதி ரஜனி சிவப்பிரகாசம்
திருமதி சிவகலா ஞானசேகரன்



திருமதி. வினோஷிராணி சக்திவேல்
திரு. சிவானந்தன் நவகாந்தன்
திருமதி சத்தியமலர் நந்தகுமார்

வாழ்த்துவோர்:- ஆசிரியர் கழகம் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

அரசின் சலுகைகளை மட்டும் எதிர்பாராமல்

# பெண்கள் சுயதொழிலில் ஈடுபட முன்வரவேண்டும்



கொழும்பு,ஜன.31
அரசால் இலவசமாக வழங்கப்படும் சலுகைகளை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிராமல், இயன்றளவில் சுயதொழிலை மேற்கொண்டு குடும்பத்தை பலப்படுத்துவதற்கு பெண்கள் முன்வர வேண்டும் என்று, தபாற் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச். ஏ.ஹலீம் தெரிவித் தார். அக் குறணை மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகிலுள்ள பல துறைகளில், பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. இலங்கையிலும் பலதுறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது.

இன்று எந்த ஓர் அரச நிறுவனத்தையோ அல்லது பாடசாலையையோ எடுத்துக் கொண்டால் அங்கு பெண்களே அதிகமாக உள்ளனர். எனவே அரசு பெண்களுக்கு அதிக சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது. பெண்களுக் காகவே ஓர் அமைச்சும் உருவாக்கப்பட்டுள்ளது. தேர்தல்களில், பெண் களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் 25 சதவீத இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசு ,பெண்களை ஊக்கு விப்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. எனவே பெண்கள் அரசால் இலவசமாக வழங்கப்படுபவைகளை மட்டும் எதிர்பார்க்காமல் தன்னால் இயன்ற சுயதொழிலை செய்து குடும்பத்தின் பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ஐ)

# நாணயங்களை கடத்த முற்பட்டவர் சிக்கினார்

கொழும்பு,ஜன.31
வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களை சட்டவிரோதமாக கடத்த முற்பட்ட ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 112 மில்லியன் ரூபா பெறுமதியான நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த நாணயங்களை சந்தேகநபர் டுபாய்க்கு கடத்த முற்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

# முல்லைத்தீவு விவசாயிகளுக்கு உர மானிய காப்புறுதி இழப்பீடு

முல்லைத்தீவு, ஜன.31

2016ஆம் ஆண்டு காலபோகச் செய்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அழிவடைந்த வயல்களுக்கு உரித்துடைய விவசாயிகளுக்கு உரமானியக்காப்புறுதி இழப்பீடு வழங்கப்படவுள்ளது. விவசாயி களின் விவரங்கள் கமக்கார அமைப்புகள் ஊடாகத் திரட்டப்படு கின்றன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் செ.புனிதகுமார் தெரிவித்தார்.

கடந்தவாரம் மழை பெய்திருந்தபோதும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை அழிவடைந் துள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது. விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித் துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே உதவிப் பணிப்பாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குட்பட்ட 10 கமநல சேவைகள் நிலையங்களிலும் வறட்சி காரணமாக 22 ஆயிரத்து 720 ஏக்கருக்கு மேல் நெற்செய்கை அழிந்துள்ளது. 8 ஆயிரத்து 683 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தந்தப் பகுதிக் கமக்கார அமைப்பின் ஊடாக விவசாயி களின் விவரங்கள் திரட்டப் படுகின்றன.

பயிர் அழிவைச் சந்தித்த விவசாயிகள், கமக்கார அமைப்புகளில் படிவங்களைப் பெற்று உரிய காலத்துக்குள் பூர்த்தி செய்து வழங்கினால் காப்புறுதியைப் பெற முடியும் - என்றார். (ற-21,7)

## மனிதாபிமானம் வளர்க்கும் நிகழ்வு

இராணுவத்தினருக்கு மனிதாபிமானத்தை வளர்க்கும் சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. அனைவரும் மனிதர்கள் என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பொது மக்களுடனான இராணுவத்தினரின் போக்குகள், நடவடிக்கைகள் என்பன தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. சமூகப் பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய வகையில் மக்களை எவ்வாறு அணுகுவது என்பது குறித்த அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (ற-எ)

# வல்வை. சிதம்பரக் கல்லூரியில் மரம் வெட்டப்பட்டதால் சர்ச்சை

*அதிபர், வட மாகாண சபை உறுப்பினர் மீது அதிருப்தி*

யாழ்ப்பாணம், ஜன.31

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ள கூடைப்பந்தாட்டத் திடலுக்காக மரங்களை வெட்டக் கூடாது என்று பாடசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதை மீறி அதிபர் மரங்களை வெட்டியுள்ளார் என்று பாடசாலை ஆசிரியர்களாலும், பெற்றோராலும் குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை வடக்குக் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

கூடைப்பந்தாட்டத் திடல் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்குரிய இடம் பாடசாலையின் முன்புறத்தில் தெரிவு செய்யப்பட் டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முதற்கட்டமாக 3 லட்சம் ரூபா நிதி வழங்கினார்.

பாடசாலையின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் கலந்து கொண்டார். கூடைப்பந்தாட்டத் திடல் தொடர்பாக அதில் ஆராயப்பட்டது.

பாடசாலையில் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கு இடம் போதுமானதாக இல்லை. முன்புறம் அமைப்பதாயின் பிள்ளை நேயப் பாடசாலை என்ற எண்ணக் கருவுக்கு மாறாக பழைமை



யான மரங்களை வெட்ட வேண்டி வரும். தெரிவு செய்யப்பட்ட இடம் சரியானது அல்ல. பாடசாலையின் பின்புறம் உள்ள காணியில் கூடைப்பந்தாட்டத்திடலை அமைக்கலாம் என்று ஆசிரியர்களும், பெற்றோரும் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு மரங்கள் வெட்டப்பட மாட்டாது என அதிபர் தெரிவித்திருந்தார்.

தற்போது எவருக்கும் தெரியாது கூடைப்பந்தாட்டத் திடலை முன்னர் திட்டமிட்ட இடத்தில் அமைப்பதற்காக அங்குள்ள பழைமையான மரம் வெட்டப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரதும், வடக்கு மாகாண சபை உறுப்பினரதும் ஏற்பாட்டின் படியேமரம்வெட்டப்பட்டது என்று கூறப்படு கின்றது. இதனால் பாடசாலை ஆசிரியர்களும், பெற்றோரும் அதிருப்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக பருத்தித்துறை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பெற்றோர், ஆசிரியர்களால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கேட்டபோது மரம் தறித்தமை தொடர்பான விசாரணை நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. எந்தவிதமான பதிலும் கூற முடியாது - என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

மரம் தறிப்பது தொடர்பாக பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்று பாடசாலை அதிபர் கூறவில்லை. பாடசாலை அதிபரின் கோரிக்கையின்பேரில், பாடசாலையின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சகலரின் அனுமதியுடனும்தான் இந்த மரம் வெட்டப்பட்டது - என்று மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ற-10,26)

## பயிற்சி நெறிக்கு மாணவர் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

தமிழ்மொழியில் எந்திரவியல்சார் கைப்பணிகளுக்கான பயிற்சியில் தேசிய சான்றிதழ் இலத்திரனியல் பயிற்சி நெறிக்கு மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

எந்திரவியல் தேசிய சான்றிதழ் இலத்திரனியல் முழு நேரம் 2வருட (NVQமட்டம் 4) பயிற்சி இலவச மாக வழங்கப்படும்

நாடு தழுவிய ரீதியில் தமிழ்மொழி மூலம் கற்கை நெறியைத் தொடர விரும்புவோர் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மாணவர்களின் குடும்ப வருமானத்துக்கு ஏற்ப நாளொன்றுக்கு 50 ரூபா வீதம் மொத்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படும். பயிற்சி முடிவில் 6 மாத தொழிற் பயிற்சிக்கு உரிய ஏற்பாடு செய்யப்படும்.

கற்க விரும்புவோர் சான்றிதழ்களுடன் உடன் நேரில் வர முடியும் என்றும், 0112324177 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-50)

## காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் உண்மை தேவை

*ஜனநாயக மக்கள் முன்னணி வலியுறுத்து*

கொழும்பு, ஜன. 31

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உண்மைகள் மூடிமறைக்கப்படாமல் , உண்மை கண்டறியப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச்செயலாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான சண்.குகவரதன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது-

போர்க் காலத்திலும் அதன் இறுதிக் கட்டத்திலும் அதன் பின்னர் நாட்டில் நிகழ்ந்த நிழல் போரின் போதும் வடக்குப் பகுதியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். சிலர் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டனர். சிலர் கைதுசெய்யப்பட்டனர். பலர் கடத்தப்பட்டனர். அவர்களில் முன்னாள் போராளிகளும், அப்பாவிகளும் அடங்குவர்.

போரின்போது பெருமளவான போராளிகள் தமது உறவினர்கள் முன்னிலையில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆட்சியாளர்களின் அரச தலைவரின் ஆணைக்குழுவிடம் சரியான விளக்கத்துடன் சாட்சியம் அளித்திருந்தபோதும் இதுவரை அந்த மக்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை.

போர் முடிந்து ஒன்பது வருடங்கள் ஆகப்போகின்றன. காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை தெரியவில்லை. காணாமல் போனவர்களின் உறவுகள் 'அவர்கள் வருவார்கள்' என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா? அல்லது கொல்லப்பட்டு விட்டார்களா? என்ற பட்டியலை அரசு வெளியிட வேண்டும்.

அரசு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில், அதனைக் கண்டறியாமல், மூடி மறைப்பதற்கு முயற்சிக்கின்றதா? அல்லது அரசு இனவாதிகளின் சிறைக் கூண்டில் சிக்கிக்கொண்டதா? எனத் தமிழர்களின் சிந்தனைகள் திசை திருப்பப்பட்டிருக்கின்றன - என்றுள்ளது. (ற-4)





## மலேசியப்படகுவிபத்து; 25 பேர் மீட்கப்பட்டனர்

கோலாலம்பூர், ஜன. 31
மலேசியாவில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற படகு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாயமானது. படகில் 31 பேர் இருந்தனர் என்றும் அவர்களின் நிலை குறித்தும் அச்சம் வெளியிடப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 25 பேர் மீட்கப்பட்டனர்.
படகைத் தேடும் பணியில், மலேசிய கப்பல்கள் மற்றும் உலங்குவானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டன. நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் மீட்கப்பட்டனர். படகு விபத்துக்குள்ளானது என்று உத்தியோகபூர்வ மற்ற தகவல்கள் உலாவுகின்றன. 6 பேரைக் காணவில்லை. தேடும் பணி தொடர்கிறது. அவர்களின் நிலை தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டது. (ம-எ)


## டயானாவுக்குச் சிலை

லண்டன், ஜன. 31
பிரிட்டன் இளவரசி டயானா இறந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அவரது சிலையை நிறுவ இளவரசர் வில்லியமும், இளவரசர் ஹரியும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.
இளவரசி டயானாவின் முன்னாள் இல்லமான கென்சிங்டன் அரண்மனையின் பொது வளாகத்தில் இந்தச் சிலை நிறுவப்படவுள்ளது. சிற்பக்கலைஞர் இன்னும் முடிவுசெய்யப்படவில்லை. எனினும் வேலைப்பாடுகள் விரைவில் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.
எங்களுடைய அம்மா இறந்து 20 ஆண்டுகள் கடந்துவிட்டன. நிரந்தரமாக ஒரு சிலையை நிறுவி, அவருடைய தாக்கத்தை பிரிட்டனிலும், உலக நாடுகளிலும் அங்கீகரிக்க செய்ய இது சரியானநேரம்என்று இளவரசர்கள் வில்லியமும், ஹரியும்வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டனர். (ம-எ)



# கனடா மசூதியில் சூடு; 6 பேர் உ...

ஒட்டவாவா, ஜன.31
கனடா கியுபெக் நகர மசூதியில் மர்மநபர்கள் சிலர் நேற்றுமுன்தினம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 2 நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பிலான தகவல்கள்வெளியிடப் படவில்லை.
முன்னதாக கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ருடே அகதிகளை வரவேற்று உரையாற்றிருந்தார். அகதிகள் விடயத்தில் ட்ரம்பின் முடிவுக்கு கண்டனத்தையும் தெரிவித்தார். அவரின் உரை முடிவடைந்த ஒரு மணிநேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
2015 ஆம் ஆண்டில் இருந்து கனடா இதுவரை 39 ஆயிரத்து 670 அகதிகளை நாட்டினுள் அனுமதித்துள்ளது என அரசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஜஸ்ரின், இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்தார். இது இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-எ)





# ஏற்க முடியாதது ட்ரம்பின் முடிவு

## மோர்க்கல் கொதிப்பு

பெர்லின், ஜன. 31
ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன் ஆகிய 7 நாடுகளைச்சேர்ந்தவர்களுக்கு நுழைவிசைவு வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிட்டார் ட்ரம்ப். அகதிகளுக்கு எதிராகவும் அவர் கடும் நடவடிக்கையை எடுத்து வந்தார். ட்ரம்பின் இந்த முடிவு ஏற்க முடியாதது என்று ஜேர்மன் அதிபர் மெர்க்கல் தெரிவித்தார்.
ட்ரம்பின் இந்த முடிவை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபை கருத்துத் தெரிவித்தது. உலகத் தலைவர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர். தவிர அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரான மலாலா, முகப்புத்தக நிறுவுநர் மார்க், கூகுள் தலைமை அதிகாரி சுந்தர்பிச்சை ஆகியோரும் அகதிகளை ட்ரம்ப் ஆதரிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். இந்த வரிசையில் தற்போது மெர்க்கல் இணைந்தார்.
உலகப் பயங்கரவாதம், உள்நாட்டுப் பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு எதிரான போரில் இருந்து உயிர்தப்பி அடைக்கலம் தேடிவரும் மக்களை கைவிடுதல் சிறப்பானதன்று. ட்ரம்பின் இந்த முடிவையும் அதன் பின்னணியில் இருக்கும் நியாயங்களையும் ஏற்க முடியாது என்று மெர்க்கல் தெரிவித்தார்.
கிட்டத்தட்ட 11 லட்சம் அகதிகளை ஜேர்மன் உள்வாங்கியுள்ளது. இது அந்த நாட்டின் சுயபாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ட்ரம்ப் முன்னதாக விமர்சித்தார். இதற்கு ஈராக், சிரியா நாடுகளில் அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளே அகதிகளைத் தோற்றுவித்தது என்று ஜேர்மனின் தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் ஜேர்மன் - அமெரிக்கா இடையே அகதிகள் விடயத்தில் நேரெதிர் நிலைப்பாடும் கருத்து முறுகல்களும் உள்ளன. (ம)

# மடகஸ்க...
## 47 பேர் ச...

அண்டனனரிவோ,ஜன.31
மடகஸ்கார் தீவில், திருமணமான தம்பதிகள் அவர்களின் உறவினர்கள் ஆகியோரை ஏற்றிச் சென்ற பஸ் ஆறு ஒன்றில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 47 பேர் உயிரிழந்தனர்.
உயிரிழந்த 47 பேரில் 10 குழந்தைகளும் திருமணமான தம்ப... களும் உள்... டங்குகின்றனர் 22 பேருக்கு ப... காயம் ஏற்ப... டது.
அவர்களில் ப... ரின் நிலை... கவலைக்கிடமா... உள்ளதால் உ... ரிழப்பு மேலு... அதிகரிக்கலா... என்று அச்ச... வெளியிடப்ப... டது. (ம-எ)

## உள்நாட்டில் ஆதரவை இழக்கிறார் கிம் யோங்

பியாங்யாங், ஜன. 31
வட கொரிய ஜனாதிபதி கிம்யோங் உன்... உள்நாட்டில் எதிர்ப்புகள் அதிகரித்துள்... என அந்த நாட்டுக்கான பிரிட்ட... முன்னாள் அயலுறவுத்துறை அமை... யொங் ஹோ தெரிவித்தார்.
உலக நாடுகளுக்கெதிராக போராடும் வல்... இராணுவ பலத்தை அதிகரித்தல் ஆகி... றில் கிம் ஆரம்பத்தில் பெரும் ஆதரவை... றிருந்தார். அவரது முடிவுகள் வரவே... பட்டன. அவரது நகர்வுகள் பாராட்டப்ப... எனினும், காரணமற்ற பதவி விலக்கல்... அதிகார நகர்வுகள், ஐக்கிய நாடுகள்... யினதும் உலக நாடுகளினதும் எதிர்ப்... சம்பாதித்தல் ஆகியன வடகொரிய மக்க... வெறுப்பைத் தூண்டியுள்ளன. என ... ஹோ மேலும் தெரிவித்தார்.



# பாகிஸ்தானையும் தடைசெய்வதற்குப் பரிசீலிக்கிறாராம் டொனால்ட் ட்ரம்...

வொஷிங்டன், ஜன. 31
பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் நுழைவிசைவு வழங்குவதற்கு தடை செய்ய ட்ரம்ப் பரிசீலித்து வருகிறார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது.
ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன் ஆகிய 7 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு நுழைவிசைவு வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிட்டார் ட்ரம்ப். அகதிகளுக்கு எதிராகவும் அவர் கடும் நடவடிக்கையை எடுத்து வந்தார்.
இதற்கு உலகெங்கும் இருந்து எதிர்ப்புக்கள் வலுத்து வருகின்றன. இந்த வரிசையில் பாகிஸ்தானையும் இணைப்பதன் மட்டில் அவர் பரிசீலித்து வருகிறார் என்று அறிய வருகிறது.
வெள்ளை மாளிகையின் தலைமை அதிகாரி ரின்ஸ் பிரிபஸ் இந்தத் தகவலை தெரிவித்தார். 7 முஸ்லிம் நாடுகளுக்கு எதிராக ட்ரம்ப் தடை உத்தரவை நடைமுறைப்படுத்தியுள்ளார். அது போன்று பாகிஸ்தான், ஆப்கா... தான் உள்ளிட்ட வேறுசில ... களுக்கும் தடை விதிப்பது கு... முடிவு பரிசீலிக்கப்பட்டு வருகிறது... அவர் பன்னாட்டு ஊடகங்க... மேலும் தெரிவித்தார்.

...யிரிழப்பு



# அடையாளம் அம்பலம்

சென்னை, ஜன. 31
ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் வன்முறையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இரு பொலிஸார் அடையாளப்படுத்தப்பட்டனர்.
ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இறுதிநாளில் கலவரமாக மாறியது. இளைஞர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. சில வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பொலிஸாரே வாகனங்களைத் தீ வைத்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டு கண்காணிப்புக் கமராக்களின் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர்.
அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சில வேளைகளில் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படலாம் என்றும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம-எ)



நடப்பு வருடத்துக்கான மிஸ் யுனிவெர்சல் அழகிப் போட்டியில் பிரான்ஸைச் சேர்ந்த ஐறிஸ் மிற்றென்னறே பட்டத்தை வென்றார். 65 ஆவது தடவையாக நடைபெறும் இந்தப் போட்டி, இம்முறை பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் இடம்பெற்றது: 86 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்துகொண்டனர். (ம-எ)

# ...காரில் கொடூர விபத்து; ...சம்பவ இடத்திலேயே சாவு






எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

## பதினைந்தாம் ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி



மலர்வு 14.04.1947 — உதிர்வு 17.01.2002

மண்கும்பானின் மைந்தன்

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர் - மைதிலி நகைமாடம்)

திதி: 31.01.2017 (தைமாத வளர்பிறை சதுர்த்தி)

ஆண்டுகள் பதினைந்து சென்றுவிட்டன – தங்களின்
ஆனந்த முகத்தைக் கண்டு!
சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க
ஆவலாய் நிற்கின்றோம் !
அனுதினமும் தங்களின் நினைவுடன் – நாம்
அலைமோதி நிற்கின்றோம் !
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் !
மறுபடி உங்களைக் காண்போம்
இறைவனின் வருகையிலே!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் நினைவுடன் ...

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை...

மைதிலி நகைமாடம்,
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7902

யாழ்.மைதிலி ஜுவ... ர்ஸ்,
79 Z, செட்டியார் ... ரு,
கொழும்பு – 1...
தொ.பே. 011 239 ...239

(C 23853) (14)




## மின்னஞ்சல் சேவையில் புதிய மாற்றங்கள் அறிமுகம்


### பாவனையாளர் நலன் கருதி ஏற்பாடு




கூகுள் தேடுதல் தளத்தின் மின்னஞ்சல் சேவையில் யாவா எழுத்துப்பிரதிகளின் இணைப்பினை நிறுத்திக் கொள்வதான தகவலை கூகுள் வெளிப்படுத்தியுள்ளது.
இந்த நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மெல்வேர் தாக்குதல்களை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக கூகுள் வலைபக்கத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் ஈமெயிலில் யாவா எழுத்துப்பிரதிகளின் இணைப்புத் தரவுகளை பரிமாற்றம் செய்ய முடியாது. இவை தவிர இ. எக்ஸ். இ. (EXE), எம்.எஸ்.சி.(MSC) மற்றும் பி.ஏ.ரி. (BAT) தரவுகள் ஈ–மெயில் ஏற்கனவே முடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தரவுகளை முடக்குவதாக கூகுள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக பெப்ரவரி 13 ஆம் திகதியின் பிற்பாடு நாம் பதிவேற்றம் செய்ய முற்பட்ட தரவுகள் ஏன் முடக்கப்பட்டுகிறது என்பதை விளக்கும் வகையிலான கூகுள் தகவல் திரையில் வெளிப்படுமெனவும் அதில் “இதை நீங்கள் பார்க்கப் பல்வேறு காரணங்கள் உள்ளது. இந்த தரவுகள் முடக்கப்பட முக்கிய காரணம் என்பது இதில் இருந்து வருகின்ற பாதுகாப்பு குறைபாடே. சில தரவுகள் தீங்கு விளைவிக்கும் வைரஸ்களை பரப்புவதால் ஈ–மெயில் இது போன்றதான தரவுகளை முடக்குகிறது” என்பதான தெளிவுதரல் வழங்கப்படுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
மேலும் கூகுள் ரைவ், கூகுள் கிளவுட் ஸ்டோரேஜ் உள்ளிட்ட சேவைகளை பயன்படுத்தி தரவுகளை பரிமாறிக் கொள்ள முடியும் என கூகுள் தெரியப்படுத்தியுள்ளது.
யாவா எழுத்துப்பிரதிகளின் இணைப்பைப் பயன்படுத்தி மெல்வேர்களை பரப்பும் முறை அதிகளவு பயன்படுத்தப்படுவதால் கூகுள் இவற்றை தடுப்பதான தகவல் சொல்லப்படுகிறது.பொதுவாக மெல்வேரில் இருக்கும் தரவுகளை பாவனையாளர்கள் தங்கள் கணினிகளில் திறக்கும்போது இணையத் திருடர்கள் பாவனையாளர் சார்ந்த முழுத் தகவல்களையும் திருடிக் கொள்ள முடியும் என்பது நோக்கத்தக்கது.

# ‘டிம் குக்கின்’ ஊதியம் 15 சதவீதத்தால் குறைப்பு

## அப்பிள் அதிதிறன் பேசிகளின் விற்பனை வீழ்ச்சியே காரணமென சுட்டிக்காட்டு



அப்பிள் கைபேசிகளின் விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான டிம் குக்கின் ஊதியத் தொகையை 15 சதவீதத்தால் குறைத்துள்ளதாக அப்பிள் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.
இதன்படி கடந்த பதினைந்து வருடங்களுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டில் மிகப் பெரிய விற்பனை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக குறைந்தளவான புதிய வரவுகளும் அவ்வாறு வெளியான கைபேசிகளின் பிந்திய சந்தை வரவுகளில் காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாகவும், இந்த விற்பனை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
2014/ 15 நிதியாண்டில் 10.3 மில்லியன் டொலர்களை மொத்தச் சம்பளமாகப் பெற்றிருந்த டிம் குக், கடந்த நிதியாண்டில் 8.7 மில்லியன் டொலர்களையே ஊதியமாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.
அத்துடன் கடந்த நிதியாண்டில் அப்பிள் நிறுவனத்தின் மொத்த விற்பனையில் 8 சதவீதம் அண்ணளவாக 216 பில்லியன் டொலர்கள் குறைவடைந்தமையும் அதே போன்று மொத்த இலாபத்தில் 16 சத வீதம் அண்ணளவாக 60 பில்லியன் டொலர்கள் குறைவடைந்துள்ளமையும் நோக்கத்தக்கது.
இந்த மதிப்பீடுகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் அப்பிள் நிறுவனம் கண்டு கொண்ட மிகப் பெரிய சரிவாக கருதப் படுகிறது.

# யாழில் றோஸ் வில்லா ஓய்வு வீட்டுத் திட்டம் அறிமுகம்

## நீண்டகால முதலீட்டுடன் நிர்மாணிக்கப்படுகிறது



யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக நீண்டகால முதலீட்டுடன் கூடியதான ‘றோஸ் வில்லா’ ஓய்வு இல்லத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி மேற்படி திட்டமானது சிறந்த பாரம்பரியங்கள் கொண்டதான இல்லத்தை முதலீட்டாளர்களுக்கு வழங்கவுள்ளது. இரு திட்டங்களாக முன்னெடுக்கப் படவுள்ள ஏழு வீட்டுத் தொகுதிகளில் ஒரு கட்டமானது ஓய்வுத்திட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆரோக்கியமான சாதாரணமான மற்றும் அமைதியான சூழலில் நிர்மாணிக் கப்படவுள்ள வீடுகள் நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் ஆடம்பரமான ஓய்வு வீடுகளாக அமையவுள்ளதான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையிலே மேற்படி திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கில் உடுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள 6710 சதுரமீற்றர்கள் பரப்பளவு கொண்ட விவசாய நிலமானது தற்போது இருப்பிடமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது.
ஒவ்வொரு வீட்டுத்தொகுதியும் 89 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் 6 சதவீத நிலப்பரப்பளவை ஒவ்வொரு வீடும் கொண்டுள்ளது. பெரியளவிலான படுக்கையறையுடன் கூடிய குளியலறை, நவீன சமையலறையுடன் கூடிய வரவேற்பறை, சமயலறை என்பவற்றை உள்ளடக்கியுள்ளதுடன் நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு ஏற்றதான சூழலையும் கொண்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமனம்

### வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சு நடவடிக்கை

உள்நாட்டு சந்தைகளில் பொருள்களின் கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பிலான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளை இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சு நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி 62 புதிய கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் நாடு முழுவதுமாக மொத்தமாக 250 அதிகாரிகள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன், நுகர்வோரைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை இவர்கள் முன்னெடுக்கவுள்ளதாகவும் தகவல் கூறப்பட்டுள்ளது.
நுகர்வோர் சார்ந்து, ஆண்டுக்கு 21 மில்லியன் ரூபாவை கண்காணிப்பு சார் நடவடிக்கைகள் மூலமாக சேமிப்பாக மீதப் படுத்திக் கொள்வதாகவும் அமைச்சுத் தெரியப்படுத்தியுள்ளது.

**வணிகம்**

## தேசிய லொத்தர் சீட்டுக்கான விலை நிர்ணயம் குறைக்கப்பட்டது

### 20 ரூபா விலை நிர்ணயம் மீண்டும் அறிமுகம்




தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு லொத்தர் சிட்டைகளுக்கான விலை நிர்ணயத்தை 30 ரூபாவிலிருந்து மீண்டும் 20 ரூபாவாக்கும் தீர்மானம் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலை நிர்ணயம் குறித்தான வர்த்தமானிப் பிரசுரம் பெப்ரவரி மாத முதல் வாரத்தில் வெளிவரவுள்ளது.
மேற்படி தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுத்துவதில் இருந்து வந்த தாமதம் என்பது, இதுவரை நாள் லொத்தர் சீட்டுக்களின் விற்பனைச் செயற்பாட்டில் 40 வீதமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதான தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அரிசி மீதான இறக்குமதி வரி குறைப்பு

### வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களம் தெரிவிப்பு

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி மீதான வரி விதிப்பை தற்போதைய விதிப்பனவின் தொகை நிர்ணயத்திலிருந்து குறைத்துக்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதான தகவலை நிதியமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.
இதன்படி இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான விதிப்பனவாக இருந்துவரும் 15 ரூபா விசேட வரியை மேலும் 5 ரூபாவால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தற்போது இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளான சிவப்பரிசி, நாட்டரிசி மற்றும் சம்பா ஆகியவற்றின் மீதான வரி விதிப்பனவே குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய அரிசி வகைகளுக்கான வரி குறைக்கப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.
மக்கள் நலன் சார்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கலாநிதி பா.தனபாலன்

# அபிவிருத்திக்கான சக்தி மிக்க கருவி கல்வி

## ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வடமாகாணப் பாடசாலைகள் படிநிலை வளர்ச்சி

மாற்றத்துக்கும் அபிவிருத்திக்குமான மிகவும் சக்திமிக்க கருவி கல்வியாகும். முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் தொடக்குவதற்கும் அடைவதற்கும் நிலைத்திருக்கச் செய்வதற்கும் கல்வி சிறந்த உத்தியாகக் கருதப்படுகின்றது. கல்வியால் சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைத் தணிக்க முடியும். முரண்பாடு தீர்த்தலில் கல்வி ஒரு முக்கிய சக்தியாகும். இந்தவகையில் இலங்கையில் ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சை உயர் கல்விப்பாதைக்கான முக்கிய மைற் கல்லாகத் திகழ்கின்றது. அத்தோடு தொழிற்கல்விப் பட்டங்களுக்கும் தொழில்களைப் பெறுவதற்குமான அடிப்படையாக இருப்பதுடன் பாடசாலைக் கல்வியின் நிறைவாகவுமுள்ளது. 2016 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வெளியான நிலையில் சென்ற வருடத்தை விட இந்த வருடம் பொதுவாக வடக்கு மாகாணம் முன்னிலை அடைந்துள்ளது.

**அட்டவணை - 1**

க.பொ.த. (உயர்தர) பரீட்சை - 2016
மகாண ரீதியில் பாடசாலை பரீட்சார்த்திகளது பெறுபேறு
தகுதியான வீதாசார இறங்குமுகரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது

| மாகாணம் | | தோற்றியோர் எண்ணிக்கை | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்றோர் | | 3ஏ சித்தி பெற்றோர் | | சகல பாடங்களிலும் சித்தி பெறாதோர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தொகை | வீதாசாரம் | தொகை | வீதாசாரம் | தொகை | வீதாசாரம் |
| 1 | சப்ரகமுவ | 20,498 | 13,648 | 66.58 | 654 | 3.19 | 1,487 | 7.25 |
| 2 | வடக்கு | 12,327 | 7,955 | 64.53 | 256 | 2.08 | 948 | 7.69 |
| 3 | மேல் | 57,254 | 36,860 | 64.38 | 2.426 | 4.24 | 4,645 | 8.11 |
| 4 | தெற்கு | 29,620 | 18,894 | 63.79 | 1.056 | 3.57 | 2,637 | 8.90 |
| 5 | ஊவா | 14,393 | 9,110 | 63.29 | 310 | 2.15 | 1,115 | 7.75 |
| 6 | கிழக்கு | 14,979 | 9,292 | 62.03 | 248 | 1.66 | 1,255 | 8.38 |
| 7 | மத்திய | 26,654 | 16,524 | 61.99 | 636 | 2.39 | 2,202 | 8.26 |
| 8 | வடமேல் | 23,833 | 14,661 | 61.52 | 615 | 2.58 | 2,120 | 8.90 |
| 9 | வடமத்திய | 12,307 | 7,294 | 59.27 | 267 | 2.17 | 1,293 | 10.51 |
| நாடுதழுவிய ரீதியில் | | 211,865 | 134,238 | 63.36 | 6.468 | 3.05 | 17,702 | 8.36 |

இதன்படி ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகளில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர் வரிசைப்படுத்தலில் மாகாண ரீதியில் இலங்கையில் வடமாகாணப் பாடசாலைகள் இரண்டாம் இடத்தைப்பெற்றுபடிநிலை உயர்ச்சி கண்டுள்ளன. பல்வேறு பிரச்சினைகளும் விமர்சனங்களும் உள்ள நிலையிலும் இந்தநிலை பாராட்டப்பட வேண்டியதாகும். மூன்று ஏ எடுத்தவர்கள் தொகை குறைவாக இருப்பினும் எல்லாப் பாடங்களிலும் சித்தி எய்தத்தவறியோர் வீதம் குறைவாகவுள்ளது. இந்த முறை கணிதத் துறையில் பெரும் எழுச்சி காணப்படுகின்றது.

### விருத்திக்கான எழு வினாக்கள்

ஜி.சீ.ஈ.உயர்தரப் பெறுபேறு வடமாகாணத்தில் படிப்படியாக உயர்வதற்கு மாகாணக் கல்வியமைச்சு, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் வலய கோட்டமட்ட மேற்பார்வைகள் ஓரளவு கைகொடுத்துள்ளன.

இங்கு குறிப்பாகப் பாடசாலை அதிபர்கள் உயர்தரக் கல்வியில் மிகுந்த அக்கறை எடுக்க வேண்டும். பொருத்தமான ஆசிரியர்களை நியமித்து பாடசாலையில் உயர்தரக் கல்வியைக் கற்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறான சூழலை ஏற்படுத்தி பல அதிபர்கள் வெற்றி கண்டுள்ளார்கள். இன்னும் பலர் இவ்வாறான சூழலை ஏற்படுத்தாமல் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதையும் தடுக்கின்றார்கள். ஜி.சீ.ஈ.உயர்தரம் கற்கும் பல மாணவர்களுக்குப் பாடசாலை மீதான நம்பிக்கைகள் குறைவு என ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன.

2016 ஆம் ஆண்டு பாடசாலைப் பரீட்சார்த்திகள், தனியான பரீட்சார்த்திகளின் உயர்வான பெறுபேறுகளுக்கு தனியார் கல்வி நிலையங்கள் கணிசமான பங்களிப்பை வழங்கி யுள்ளன. அவர்களுக்கு ஒரு சபாஸ் தெரிவிக்கலாம். இன்று பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்களைப் போல் இயங்க தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைகள் போல் இயங்குகின்றன எனப்பல வகையான விமர்சனங்கள் காணப்படுகின்றன. எது எப்படியோ மாணவர்களுக்குப் பயன் கிடைத்தால் போதும்.

**அட்டவணை - 2**

மாவட்ட ரீதியில் வடமாகாண மாவட்டங்களில் பாடசாலை, தனியார் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது பொதுவாக எல்லாப் பாட நெறிகளையும் சேர்த்ததாகும். ஒப்பீட்டுக்கல்வி ஆய்வுக்கு இப்பெறுபேறுகள் பல செய்திகளை எமக்குத் தருகின்றன. இலங்கையில் பரவலாகக் கல்வி வாய்ப்புக்கள் விரிவடைந்ததன் பயன்கள் படிப்படியாகப் பரவலான கல்வி அபிவிருத்திகளை எடுத்துக்காட்டுகின்றன. போரால் பாதிப்படைந்த வடகிழக்கு மாகாணங்கள் படிப்படியாக உயர்ந்த நிலைக்கு வர எத்தனித்தாலும் வளர்ச்சி நிலை இன்னும் விரிவாக்கப்பட வேண்டும். பாடசாலை மட் டத்தில் பல அபிவிருத்தி சீர்திருத்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். இந்த அட்டவணைப்படி பல்கலைக் கழக அனுமதி பெறுபவர்கள் 63.27 ஆகவும் கிளிநொச்சி 61.12 ஆகவும் மன்னார் 62.52 ஆகவும் முல்லைத்தீவு 60.61 ஆகவும் வவுனியா 57.34 ஆகவுமுள்ளது இந்த நிலைகளை இனிவரும் காலங்களில் மிகக் கடுமையாக உழைத்து உயர்விக்க வேண்டியுள்ளது. மாணவர்களுக்கு சரியான வழிப்படுத்தல்களையும் ஆலோசனை வழிகாட்டலையும் வழங்க வேண்டியுள்ளது. வெறும் ஏட்டுக்கல்வி பயிற்சி மட்டுமல்லாமல் மேலதிகமாக நுண்மதியை விருத்திசெய்கின்றமை மற்றும் உண்மையான ஆற்றல் உள்ளவர்களே இனி வரும்காலங்களில் வெற்றி கொள்ள முடியும்.இதற்கான ஆளுமை விருத்தி சுயமதிப்பீட்டு வழிமுறைகள்தேவையாகவுள்ளன. ஊக்குவிப்புக்கள்பெற்றோர்விழிப்புணர்வுகளும் அவசியமாகின்றது.

க.பொ.த (உயர்தர) பரீட்சை - 2016 *அட்டவணை - 2*
க.பொ.த உயர்தரம் மாணவர் அடைவு - மாவட்ட ரீதியாக
பாடசாலை மற்றும் பாடசாலைக்கு வெளியே பரீட்சை எழுதியோர்

| மாவட்டம் | | பரீட்சையில் தோற்றியோர் | பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றோர் | | எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாதோர் | |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகை | வீதாசாரம் | தொகை | வீதாசாரம் |
| 1 | இரத்தினபுரி | 13.801 | 9.449 | 68.47 | 902 | 6.54 |
| 2 | மொனராகல | 5.943 | 3.867 | 65.07 | 431 | 7.25 |
| 3 | மாத்தறை | 12.238 | 7.963 | 65.07 | 1.037 | 8.47 |
| 4 | அம்பாந்தோட்டை | 9,043 | 5.952 | 64.71 | 767 | 8.48 |
| 5 | கேகாலை | 11,558 | 7.405 | 64.07 | 920 | 7.96 |
| 6 | மாத்தளை | 6.088 | 3.877 | 63.68 | 470 | 7.72 |
| 7 | கொழும்பு | 29,711 | 18.885 | 63.57 | 2,460 | 8.28 |
| 8 | காலி | 15,321 | 9.709 | 63.37 | 1,322 | 8.63 |
| 9 | களுத்துறை | 14.029 | 8.890 | 63.37 | 1.257 | 8.96 |
| 10 | யாழ்ப்பாணம் | 7,985 | 5.052 | 63.27 | 628 | 7.86 |
| 11 | மன்னார் | 1,614 | 1.009 | 62.52 | 127 | 7.87 |
| 12 | நுவரெலியா | 7,473 | 4.625 | 61.90 | 648 | 8.67 |
| 13 | புத்தளம் | 7,514 | 4.644 | 61.80 | 630 | 8.38 |
| 14 | பதுளை | 12,135 | 7.443 | 61.33 | 987 | 8.13 |
| 15 | கம்பகா | 23,191 | 14.206 | 61.26 | 2.103 | 9.07 |
| 16 | கிளிநொச்சி | 1,448 | 885 | 61.12 | 128 | 8.84 |
| 17 | குருநாகல் | 21,711 | 13.224 | 60.91 | 1.998 | 9.20 |
| 18 | முல்லைத்தீவு | 1,290 | 782 | 60.62 | 133 | 10.31 |
| 19 | கண்டி | 18,597 | 11.121 | 59.80 | 1,638 | 8.81 |
| 20 | அநுராதபுரம் | 11,182 | 6.564 | 58.70 | 1,135 | 10.15 |
| 21 | மட்டக்களப்பு | 6,037 | 3.517 | 58.26 | 500 | 8.28 |
| 22 | பொலன்னறுவை | 4,371 | 2.514 | 57.52 | 468 | 10.71 |
| 23 | வவுனியா | 2,112 | 1.211 | 57.34 | 205 | 9.75 |
| 24 | அம்பாறை | 8,745 | 4.958 | 56.70 | 957 | 10.94 |
| 25 | திருகோணமலை | 5,056 | 2.866 | 56.69 | 540 | 10.68 |
| நாடுதழுவியரீதியில் | | 258,193 | 160520 | 62.17 | 22,392 | 8.67 |

**அட்டவணை - 3**

வர்த்தகத்துறையில் வடமாகாணம் ஓரளவான நிலையில் காணப்பட்டாலும் கலைத்துறையில் வீழ்ச்சி நிலையைக் காட்டுகின்றது. பாடசாலைகள் ரீதியான ஆய்விலும் இந்த முறை இது புலனாகின்றது. குறிப்பாக தமிழ்பாட அடைவுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எதிர்கால தொழிற்றுறை நிலமைகளை நோக்கிக் கலைத்துறை மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் என்ற நிலையிலும் கலைத்துறைப் பாடங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் ஆராயப்பட்டு தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். உரியவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

க.பொ.த. (உயர்தர) பரீட்சை - 2016 *அட்டவணை - 3*
மாகாண ரீதியில் பாடசாலை பரீட்சார்த்திகளின் தொடர்வு அடைவு மட்டம்

| மாகாணம் | | வர்த்தகம் | | |
|---|---|---|---|---|
| | | பரீட்சையில் தோற்றியோர் | தொகை | வீதாசாரம் |
| 1 | சப்ரகமுவ | 4,489 | 3.288 | 73.25 |
| 2 | தெற்கு | 6,341 | 4,548 | 71.72 |
| 3 | மேல் | 18,725 | 13,159 | 70.28 |
| 4 | வடக்கு | 2,252 | 1,579 | 70.12 |
| 5 | வடமத்திய | 2,563 | 1,769 | 69.02 |
| 6 | வடமேல் | 4,783 | 3,288 | 68.74 |
| 7 | மத்திய | 6,271 | 4,200 | 66.97 |
| 8 | கிழக்கு | 2,799 | 1,864 | 66.60 |
| 9 | ஊவா | 2,989 | 1,971 | 65.94 |
| நாடுதழுவியரீதியில் | | 51,212 | 35,666 | 69.64 |

| மாகாணம் | | கலைப்பிரிவு | | |
|---|---|---|---|---|
| | | பரீட்சையில் தோற்றியோர் | தொகை | வீதாசாரம் |
| 1 | சப்ரகமுவ | 7,866 | 6,003 | 76.32 |
| 2 | ஊவா | 5,918 | 4,275 | 72.24 |
| 3 | வடமத்தி | 4,644 | 3,310 | 71.27 |
| 4 | தெற்கு | 9,554 | 6,746 | 70.61 |
| 5 | வடமேல் | 9,616 | 6,746 | 70.15 |
| 6 | மத்திய | 9,981 | 6,978 | 69.91 |
| 7 | வடக்கு | 4,963 | 3,413 | 68.77 |
| 8 | மேல் | 14,668 | 9,999 | 68.17 |
| 9 | கிழக்கு | 6,775 | 4,526 | 66.80 |
| நாடுதழுவியரீதியில் | | 73,985 | 51,996 | 70.28 |

### சுமையான திசைப்படுத்தல்

இங்கு பொதுவான சில விடயங்களே விழிப்புணர்வுக்காக முன்வைக்கப்பட்டன. ஆனால் எமது மண்ணிலும் இலங்கையிலும் பொதுப் பரீட்சைகள் மாணவர், பெற்றோர், பாடசாலை ஆகியவற்றின் அளவுக்கு மிஞ்சிய கவனத்தைப் பெறுகின்றன. இதிலிருந்து விலக முடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன. இதனால் பெறுபேறுகள் குறைந்த அல்லது பல்கலைக் கழகத்துக்குத் தகுதி இருந்தும் கிடைக்காத பெருமளவு மாணவர்கள் பாதிப்படைகின்றனர். இது பொருத்தமற்ற சுமையான திசைப்படுத்தலாகவும் அமைந்துவிடுகின்றது. ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்கும் அனைத்து மாணவர்களும் மூன்று பாடங்களிலும் இலகுவாகச் சித்தியடைய பல்வேறு வழிகள் காணப்படுகின்றன.

1. ஜி.சீ.ஈ. உயர்தரப் பாடசாலையின் அதிபர் பாடத்துறை ஆசிரியர்கள் தமது பிள்ளைகள் போல உயர்தர மாணவர்களை எண்ணிச் சரியாக வழிகாட்டவேண்டும்.
2. நிறைந்த அனுபவமும் ஆற்றலும் தேர்ச்சியுமுள்ள எமது பல்கலைக்கழகத்துறை சார் பேராசிரியர், விரிவுரையாளர்கள் உயர்தர மாணவர்களுக்குப் பாடரீதியான நிபுணத்துவ வழிகாட்டல் மேற்கொள்வதை அதிகரிக்க வேண்டும். பல்வேறு செயலமர்வுகளை பயில்வுகளை வெளியீடுகளை மேற்கொள்ள வேண்டும். சிங்கள மொழிமூல மாணவர்களுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் கிடைக்கின்றது.
3. மாகாண வலய கோட்ட மட்ட கல்வி மேற்பார்வை அதிகாரிகள் உயர்தர மாணவர்களின் கல்வியின் பால் முழுமையான அக்கறை செலுத்தி வருமுன் காக்கும் உபாயங்களைப் பின்பற்றி அதிபர்களையும் ஆசிரியர்களையும் நேரான முகாமைத்துவத்தினூடாக வலுப்படுத்த வேண்டும். மாணவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களின்நிலையைஅறிந்து உரிய உதவி வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும்.
4. கல்வி அதிகாரிகள் அனைவரும் பாடசாலைக்குள் நின்று கொண்டு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உரிய உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கி ஒவ்வொரு மாணவனின் கல்வி - ஆளுமை விருத்தியடையத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.
5. மாணவர்கள் தமது ஆற்றல்களை வளர்த்துப் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களில் மட்டும் படித்தால் போதாது. இரவில் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களில் படித்ததை மீட்டல், அதிகாலையில் எழுந்து சுயமாகக் கற்றல் செயன்முறையை மேற்கொள்ள வேண்டும்.
6. பெற்றோர்கள் வீட்டில் பிள்ளைகள் கற்கக் கூடிய உயர்ந்த பட்ச சூழ்நிலையை வழங்க வேண்டும்

குண்டுகளால் சாதிக்க முடியாததைக் கல்வியால் தமிழினம் சாதிக்கும் நிலையை ஏற்படுத்தும் வல்லமையும் ஆற்றலும் மூளையும் சுய ஆளுமையும் எம்மிடம் உண்டு. அதனை முதலாக வைத்து உலகத்தையே எமது காலடிக்குக் கொண்டு வர கல்வியே முதன்மை ஆயுதம் என்பதை அனைவரும் உணர்ந்து உழைப்போம். கல்விக் கூடங்களான பாடசாலைகளைக் கடவுளின் கோயில்களாக்குவோம்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தேவையானது குற்ற விசாரணையே தவிர வெறும் அறிக்கை அல்ல

**போ**ர்க்குற்றங்கள் குறித்து, வடக்கு மாகாண சபை விசாரணை ஒன்றை முன்னெடுக்கவேண்டும் என்ற யோசனையை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்வைத்துள்ளார். "பன்னாட்டு நீதிபதிகளின் துணைகொண்டு, உண்மையறியும் ஆணைக்குழு ஒன்றையோ, செயற்குழு ஒன்றையோ நியமிக்க முடியுமா என்று ஆராயுங்கள். முடியுமானால் அதனை நெறிமுறைப்படுத்தி உண்மையை உலகுக்கு எடுத்துரைப்போம். நடந்தவற்றை நடந்தவாறே எடுத்துரைப்போம். எமது மக்கள் நீதிபெறவேண்டுமானால், இதுவொன்றே வழியெனப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார் அவர்.

முதலமைச்சர் குறிப்பிடும் உண்மை அறியும் ஆணைக்குழு எந்த வகையிலான விசாரணையை முன்னெடுக்கும் என்பதை அவர் தெரிவிக்கவில்லையாயினும், அத்தகைய ஆணைக்குழு ஒரு குற்றவியல் விசாரணையை இலங்கையில், கொழும்பு அரசை மீறி மேற்கொள்ள முடியாது என்பதே கள யதார்த்தம்.

தமிழ் மக்கள் தற்போது எதிர்பார்ப்பதோ ஒரு குற்றவியல் விசாரணையைத்தான். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றால் அது குற்றவியல் நீதி விசாரணை ஒன்றின் ஊடாகத்தான் முடியும். உண்மை அறியும் ஆணைக்குழுக்களால் உண்மையை வெளிப்படுத்தத்தான் முடியுமே தவிர நீதியையும் அதற்கான இழப்பீட்டையும் ஒருபோதும் பெற்றுக்கொடுக்க முடியாது.

இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்பதையும், அதில் தொடர்புபட்ட தரப்புக்கள் யார் என்பதையும், ஏற்கனவே பக்கச்சார்பற்ற தரப்புகள் விசாரித்து அறிக்கையிட்டுவிட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட வல்லுநர்கள் குழு 2011ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் செப்டெம்பர் 2014இலும், இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கையிட்டுள்ளன. போரில் ஈடுபட்ட இரு தரப்புகளுமே போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் இருந்தன என்று அந்த அறிக்கைகள் அறுதியிட்டுக் கூறுகின்றன. போரின் பின்னரும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும்கூட மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை கூறியிருக்கிறது.

கொழும்பு அரசின் ஒத்துழைப்பு இன்றி – அதன் படையினரிடம் நேரடியாக விசாரிக்க முடியாத – பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெற முடியாத – படைத்தரப்பிடம் இருக்கும் ஆதாரங்களை, ஆவணங்களைப் பரிசோதிக்க முடியாத ஒரு உண்மை அறியும் ஆணைக்குழுவால், இதுபோன்றதொரு அறிக்கைக்கு மேலதிகமாக எந்தத் தகவலையும் வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கப் போவதில்லை. இங்கே குற்றங்கள் நடந்தது என்பதும், அதில் அரச படையினர் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்பதும் ஏற்கனவே உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் மீண்டும் அதை வெளிப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

இப்போது தேவையானதெல்லாம் முறையான ஒரு குற்றவியல் விசாரணை. அத்தகைய ஒரு விசாரணையை கொழும்பின் ஆதரவின்றி இலங்கைக்குள்ளேயே அதன் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மேற்கொள்வது சாத்தியமாகாது. உதாரணத்துக்கு இன்னொருவர் சொல்லிக் கேள்விப்பட்ட ஒன்றை, இலங்கைச் சட்டங்கள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளாது. ஆனால் பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றில் அது ஒரு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, இலங்கைக்குள் மீண்டும் ஒரு உண்மை அறியும் ஆணைக்குழுவை நியமித்து, காலத்தையும் பணத்தையும் வீணடிப்பதைவிட, முறையான குற்றவியல் நீதி விசாரணையை நடத்துவதற்கான வழிவகைகளைத்தான் நாம் தேடவேண்டும். அதன் மூலமே குற்றங்களை நிரூபிக்கவும், அதற்குக் காரணமானவர்களைத் தெளிவாக அடையாளப்படுத்தவும் பாதிக்கப்பட்டவருக்கு நிகழ்ந்த கொடுமையை – உண்மையை – அப்பட்டமாக வெளிப்படுத்தவும் முடியும்.

முடிந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை பரிந்துரைத்துள்ள கலப்பு நீதிமன்றத்தின் ஊடான விசாரணை இடம்பெறுவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். இல்லையேல், பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இதுவே தமிழர்கள் எதிர்பார்த்து நிற்கும் நீதி.

# நாம் சரியாக எடுத்து விளக்கினால் தமிழர்கள் ஒற்றையாட்சி முறையை ஏற்பர்

## அத்துரலிய ரத்ன தேரர் பேட்டி

எம்.ஐ.முபாறக்



"சிங்களவர்களின் இணக்கப்பாடின்றிப் பெறப்படும் தீர்வு நிலையற்றது என்று தமிழர்கள் நம்புகின்ற இன்றைய சூழ்நிலையில், ஒற்றையாட்சியின் தன்மை பற்றி தமிழருக்கு நாம் சரியாக விளக்கம் கொடுத்தால், தமிழர்கள் அதை ஏற்பார்கள். இனவாதத்தைத் தூண்டி எம்மால் எதையும் சாதிக்கமுடியாது"–

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர், அத்துரலிய இரத்தின தேரர் சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது குறிப்பிட்டுள்ளார். அவரது நேர்காணலின் முழு விவரமும் இங்கு தரப்படுகின்றது.

**கேள்வி:** ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியல்மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட நீங்கள், இப்போது எந்தக் கட்சியையும் பிரதிநித்துவப்படுத்தாது தனித்துச் செயற்படுவதற்குத் தீர்மானித்தமைக்குக் காரணம், மகிந்தவை மீண்டும் ஆட்சிபீடம் ஏற்றுவதற்காகவே என்று சொல்லப்படுவது உண்மையா?

**பதில்:** நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் நான் அடைந்துள்ள அதிருப்தி காரணமாகவே தனித்துச் செயற்பட முடிவெடுத்துள்ளேன். அரசுக்குள் இருந்து கொண்டுதான் நான் சுயாதீனமாகச் செயற்படுவேன். நான் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு இனிமேல் நான் மட்டுமே பொறுப்பு. நான் சார்ந்துள்ள அரசு அதற்கு பொறுப்பல்ல.

மகிந்த ஆட்சியில்கூட , அந்த அரசுக்குள் இருந்துகொண்டே சில விடயங்களில் இவ்வாறு சுயாதீன நிலைப்பாட்டை எடுத்திருந்தேன்.கேசினோ சட்டமூலம் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட போது நான் அதற்கு எதிராக வாக்களித்தேன்.சில சட்டமூலங்களுக்கு வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொண்டேன்.

நான் இவ்வாறு தீர்மானம் எடுத்தமைக்குக் காரணம் எதிர்க்கட்சிக்கு செல்வதற்குத்தான் என்றும், மகிந்தவை ஆட்சிபீடம் ஏற்றுவதற்குத்தான் என்றும் கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை.

**நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தேரரால் துறக்க இயலுமா?**

**கே:** நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீங்கள் துறக்க வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்படுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்?


**ப:** நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது எனக்கு ஒரு பெரிய விடயம்அல்ல.அதைப் பறித்தாலும் ஒன்றுதான்; பறிக்காவிட்டாலும் ஒன்று தான். நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டுமா இல்லையா என்று மக்கள் தான்முடிவுசெய்ய வேண்டும். எவராவது என்னைப் பதவியில் இருந்து பலவந்தமாக விலக்க முடிந்தால் அதைச் செய்யட்டும்.

மாவிலாறு மோதல்வேளை முதல் இப்போதுவரை இந்த நாட்டினதும், மக்களினதும் நலன்களை நோக்காகக் கொண்டே நான் பேசி வருகின்றேன்.எனது குரலுக்குத் தனித்துவமான பலம் உண்டு என்று நான் நம்புகிறேன். அதற்காகத் தான் எனக்கு இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நாடாளுமன்றத்துக்குள் தனித்துச்செயற்படும் முடிவை எடுத்துள்ளேன்.

நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தால் எனது போராட்டம் இன்னும் வீரியமானதாக இருக்கும் என்று கூறி அப்படிச் செய்யுமாறு சிலர் என்னிடம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இது சம்பந்தமாக என்னால் தனித்து முடிவெடுக்க முடியாது. நான் தனி மனிதன் அல்ல. என்னுடன் பலர் இருக்கின்றனர். நான் பதவியைவிட்டு விலக வேண்டுமா இல்லையா என்று



> கூட்டமைப்புடன் மனம் திறந்து பேசினால், அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு முடிவுக்கு வரமுடியும். ஒற்றையாட்சியின் தன்மை பற்றி விளக்கினால் தமிழர்கள் அதை ஏற்றுக் கொள்வர். தெற்கைக் குழப்பி, ஒருபோதும் வடக்குக்குத் தீர்வைக் கொடுக்க முடியாது.அது நிலையான தீர்வாக அமையாது என்று தமிழ்த் தலைவர்களே என்னிடம் கூறியுள்ளனர். தெற்கின் இணக்கத்துடனேயே அவர்கள் வடக்குக்கான தீர்வை எதிர்பார்க்கின்றனர். வடக்கும் தெற்கும் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும். வடக்கு மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களுடன் இணைந்து அபிவிருத்தி செய்தால் அவர்களின் மனங்களை வெற்றி கொள்ளலாம். மாறாக,அவர்கள் விரும்பாத– அவர்களுக்குத் தேவையில்லாத அபி விருத்திகளை நாம் அவர்களிடம் திணிக்கக்கூடாது.

அவர்களும், மக்களும்தான் முடிவெடுக்க வேண்டும். இந்த நாட்டில் பெரியதொரு மாற்றம் ஏற்பட வேண்டும்.அதை இந்த அரசு செய்ய வேண்டும்.அப்படிப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை. பெரிய அளவிலான ஆபத்தை ஏற்படுத்தாமல் இருந்தால் போதும்.

**கே:**இந்த அரசின் செயற்பாடுகள் தொடர்பில் நீங்கள் விமர்சிக்கின்ற– உடன்பட மறுக்கும் விடயங்கள் எவை?

**ப:** நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் என்னால் உடன்பட முடியாது.இது அழகான நாடு.இந்த அழகைத் தக்க வைத்துக்கொண்டே நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும்.காடுகளை அழித்து கட்டங்களை எழுப்பி அபி விருத்தி செய்வதை ஏற்க முடியாது. அபி விருத்தி தொடர்பில் ஒரு தெளிவான திட்டம் இருக்க வேண்டும்.இருப்பதை அழித்து புதிதாக ஒன்றை உருவாக்க முடியாது.அது அபி விருத்தி அல்ல.

இந்த அரசு அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுக்கின்றது. அங்கு என்ன செய்யப் போகிறார்கள்; என்ன தொழிற்சாலை அமையப் போகின்றது என்று ஒருவருக்கும் தெரியாது.

**கே:** ஜனாதிபதிக்குத் தெரியாமல்தான் இதெல்லாம்நடக்கின்றது என்றா நீங்கள் சொல்ல வருகிறீர்கள்?

**ப:**ஆமாம்.அவருக்குத் தெரியாமல் அதிகமான வேலைகள் செய்யப் படுகின்றன.அமைச்சரவைக்கு வந்த தன் பின்புதான் ஜனாதிபதிக்குத் தெரிய வருகின்றது.பிரதமரும் ஜனாதிபதியும் இணைந்து பொருளாதாரக் குழுவொன்றை அமைத்தால், இவ்வாறான பிரச்சி னைகள் ஏற்படாது. உண்மையில் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான அரசு இன்னமும் உருவாகவில்லை.


**புதிய அரசமைப்புக் குறித்த தேரரின் நிலைப்பாடு**

**கே:** உங்களது பார்வையில் இந்த அரசு புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் உள்ளது?

**ப:** ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஒற்றை ஆட்சியின்கீழ்த்தான் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி, ஆட்சியைக் கைப்பற்றியதும் சமஷ்டி நிலைப்பாட்டுக்கு மாறிவிட்டது.
புதிய அரசமைப்பு தயாரிப்பு விடயம்தான் இப்போது சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.ஒற்றையாட்சியை மீறி அது அமைய முடியாது.அதை நாம் நாடாளுமன்றில் தோற்கடிப்போம்.இதைத் தோற்கடிப்பதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன.ஒன்று நாடாளுமன்ற வாக்கெடுப்பு அடுத்தது பொது வாக்கெடுப்பு. இந்த இரண்டையும் நாம் பயன்படுத்துவோம்.
சுதந்திரக்கட்சி ஆரம்பத்தில் சமஷ்டி என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தது. எமது முயற்சியால்தான் அந்தக் கட்சியை ஒற்றை ஆட்சி என்ற நிலைப்பாட்டுக்குக் கொண்டு வந்தோம்.
பொது வாக்கெடுப்பின்றி, அரசமைப்பை நிறைவேற்றப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அதேபோல் ,நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்படும்என்றும்அவர்கூறியுள்ளார். இதெல்லாம்எவ்வளவுதூரம்உண்மை என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**கே:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஒற்றையாட்சியை நிராகரித்து சமஷ்டியைத்தானே கேட்கிறது?

**ப:**கூட்டமைப்புடன் மனம் திறந்து பேசினால், அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு முடிவுக்கு வரமுடியும்.ஒற்றையாட்சியின் தன்மை பற்றி எடுத்து விளக்கினால் தமிழர்கள் அதை ஏற்றுக்கொள்வர்.
தெற்கைக் குழப்பி, ஒருபோதும் வடக்குக்குத் தீர்வைக் கொடுக்க முடி யாது.அது நிலையான தீர்வாக அமையாது என்று தமிழ்த் தலைவர்களே என்னிடம் கூறியுள்ளனர். தெற்கின் இணக்கத்துடனேயே அவர்கள் வடக்குக்கான தீர்வை எதிர் பார்க்கின்றனர்.
வடக்கும் தெற்கும் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும்.வடக்கு மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களுடன் இணைந்து அபிவிருத்தி செய்தால், அவர்களின் மனங்களை வெற்றிகொள்ளலாம். மாறாக, அவர்கள் விரும்பாத- அவர்களுக்குத் தேவையில்லாத அபிவிருத்திகளை நாம் அவர்களிடம் திணிக்கக் கூடாது.
அப்படி நடக்க முடிந்தால் நிச்சயம் இனவாதத்தை ஒழிக்கலாம்.ஆகக் குறைந்தது பரீச்சார்த்தமாக இப்படி ஒரு வருடமாவது செய்து பார்ப்போம். நிச்சயம் மாற்றத்தைக் காணமுடியும். இனியொரு போர் செய்ய முடியாது; இனவாதத்தைத் தூண்ட முடியாது. நல்லிணக்கம் ஊடாகவும், நல்ல அபிவிருத்திகளின் ஊடாகவுமேஇந்த நாட்டை வளர்ச்சிபெய வைக்கமுடியும்.அந்த அபிவிருத்தியில் இருந்து வடக்கைப் புறம் தள்ளிவிடமுடியாது. அதுமாத்திரமன்றி,சம்பந்தனோ, விக்னேஸ்வரனோ தெரிவிக்கும் கருத்துக்களுக்கு இனி எதிர்க்கருத்துத் தெரிவிப்பதில்லை என்று நான் தீர்மானித்துள்ளேன்.அப்படித் தெரிவிக்கும்போது எம்மை இனவாதிகளாகத் தமிழர்கள் பார்க்கின்றனர். இதை விட்டுவிட்டு எம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது எப்படி என்றே இனி நாம் பார்க்கவேண்டும். நாம் எதிர்பார்ப்பது, வடக்குத் தமிழர்களுடன் உறவுப் பாலம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தே.அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வொன்றை முன் வைப்பதன் மூலம்தான் இதைச் செய்ய முடியும்.



# வாசகர் திருமுகம்

## நீதி அமைச்சின் உறுதிப்படுத்தல் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுதல்

தற்போது வெளிநாடுகளில் வதியும் வடபகுதி மக்களுக்கான பல்வேறு ஆவணங்களை வெளிநாட்டு அமைச் சின் உறுதிப்படுத்தலுக்காக யாழ்ப் பாணம் கச்சேரியில் கன்சியூலர் பிரிவொன்று திறக்கப்பட்டதையிட்டு மகிழ்வு அடைகின்றோம். அதேசமயம், வெளிநாடுகளில் வதியும் எமது தாயக உறவுகளின் திருமணமாகாததை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் சமாதான நீதிவான் உறுதிப்படுத்தல் என்பவற்றை வடபகுதிமக்கள், கொழும்பில் உள்ள நீதியமைச்சின் உறுதிப்படுத்தல் அலுவலகத்தில் பெறவேண்டியதாகவுள்ளது. பல்வேறு சிரமங்களைச் சந்தித்து, பணச்செலவுசெய்தே கொழும்பு சென்றே குறித்த, உறுதிப்படுத்தல் பெறவேண்டியுள்ளது. குறித்த ஆவனங்களில், நீதிவான்கள், சம்பந்த மான உறுதிப்படுத்தலை, முதலில் நீதியமைச்சில் பெற்றுத்தான், பின்னர் வெளிநாட்டு அமைச்சு கன்சியூலர் பிரிவில் உறுதிப்படுத்தல் பெற முடியும். எனவே சமாதான நீதிவான்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில், நீதியமைச்சின் உறுதிப்படுத்தலை இலகுவாக, சிரமமின்றி, வடபகுதி மக்கள் பெறும் வகையில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத்தொகுதியில், உறுதிப்படுத்தக் கூடிய அதிகாரத்துடன், நீதியமைச்சு உபகாரியாலயமொன்றைத் திறந்து செயற்படுத்துமாறு தயவுடன் கேட்கின்றோம்.

*வ.க.ஜெயபாலன் ஜே.பி*
*கந்தர்மடம் ,யாழ்ப்பாணம்*

## இனத்தை ஈடுவைத்துச் சூதாடும் அமைச்சர்

பல்லாயிரக்கணக்கான இந்[illegible]யத் தமிழர்களது பிரஜாவுரிமை[illegible]யப் பறிக்க 1948இல் பிரதமர் [illegible]ஸ். கொண்டுவந்த சட்டத்தை [illegible]க்காது தமிழ்த் தலைவர் ஜீ.ஜீ. [illegible]ம் காத்தார். அதேபோன்று த[illegible]மக்களது தலைகளில் பொரு[illegible] [illegible]டியடிக்க மு[illegible]ம் [illegible] அமைச்சர[illegible]த் தனத்தைப் பார்த்துக்கொ[illegible] எமது தமிழ்த் தலைமைகள் வா[illegible] [illegible]ணம் காத்த[illegible] நியாயம் தா[illegible]?

*தே.மாயன், [illegible]ரிநொச்சி.*

**மேடம்:** பொது இடங்களில் விவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். மாணவர்கள் அக் கறையுடன் படிப்பது நல்லது.

**இடபம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். அரச வகையில் எதிர் பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** அக்கம்பக்கத்தினர் மத்தியில் செல் வாக்கு கூடும். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு உரு வாகலாம்.

**சிங்கம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் வியாபாரத்தில் மூல தனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் அதிகரிக் கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடு படுவர். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.



**கன்னி:** தாமதமான பணியும் கூட நிறைவேற வாய்ப்புண்டு. தொழில் வியாபாரத்தில் வருமா னம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறு வர். அரசு வகையில் அனுகூலம் உண்டாகும்.

**துலாம்:** சிலரது பேச்சால் மன சங்கடத்துக்கு ஆளாவீர்கள். பணியாளர்கள் பணிச்சுமை யால் அவதிப்படுவர். பெண்கள் விலைமதிப் புள்ள பொருள்களை கவனமாக கையாளவும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

**விருச்சிகம்:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச் சிக்கான வாய்ப்பு கிடைக்கும். சேமிக்கும் விதத் தில் வருமானம் உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில் வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளி யூர் செல்வர். பெண்கள் ஆடம்பரச் செலவு களைத் தவிர்க்கவும்.

**மகரம்:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர் கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் உண்டாகும். பணவரவும் நன் மையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் உறவினர் மத்தியில் செல் வாக்குடன் திகழ்வர்.

**மீனம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் பணியாற்றுவர். பெண் கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | | | |
| | | 9 | 6 | | | 7 | | |
| | | 2 | 1 | | | | 5 | 9 |
| | | | | 6 | | | 8 | 5 |
| | | | 9 | | 8 | | | |
| 9 | 6 | | | 4 | | | | |
| 4 | 7 | | | | 2 | 8 | | |
| | | 1 | | | 7 | 6 | | |
| | | | | | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 2 | 1 | 7 | 6 | 4 | 9 | 8 |
| 9 | 4 | 7 | 3 | 8 | 5 | 6 | 1 | 2 |
| 1 | 8 | 6 | 2 | 4 | 9 | 7 | 3 | 5 |
| 7 | 2 | 5 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 |
| 3 | 1 | 9 | 7 | 2 | 4 | 5 | 8 | 6 |
| 8 | 6 | 4 | 9 | 5 | 1 | 2 | 7 | 3 |
| 6 | 5 | 3 | 4 | 9 | 8 | 1 | 2 | 7 |
| 2 | 9 | 1 | 5 | 3 | 7 | 8 | 6 | 4 |
| 4 | 7 | 8 | 6 | 1 | 2 | 3 | 5 | 9 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான் எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறு வனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப்பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.













# மகா சிவராத்திரியில்




'சைத்தான்' படத்தை தொடர்ந்து, விஜய் ஆண்டனி நடிப்பில் வெளியாகவிருக்கும் படம் எமன். இந்தப் படத்தை நான் பட புகழ் ஜீவா சங்கர் இயக்கியுள்ளார். லைக்கா புரடெக்ஷன் நிறுவனமும், விஜய் ஆண்டனியின் விஜய் ஆண்டனி பிலிம் கார்ப்பரேசன் நிறுவனமும் இணைந்து இந்தப் படத்தை தயாரித் துள்ளன.
இந்தப் படத்தில் விஜய் ஆண்டனி அர சியல்வாதியாக நடித்துள்ளார். மியா ஜார்ஜ் கதாநாயகியாக நடித்துள்ளார். இவர்களுடன் முக்கிய கதாபாத்திரத்தில் இயக்குநரும், நடிகருமான தியாகராஜ னும் நடித்துள்ளார். இந்தப் படத்தின் முற்காட்சி சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ள நிலையில், விரை வில் பாடல்களை வெளியிடவுள்ளனர்.
படத்தின் வெளியிட்டுத் திகதியை படக் குழுவினர் தற்போது அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளனர். அதன்படி, வருகிற மகா சிவராத்திரியை முன்னிட்டு பெப்ரவரி 24ஆம் திகதி வெளியாகும் என அறி விக்கப்பட்டுள்ளது. விஜய் ஆண்டனி நடிப்பில் வெளிவரும் படங்கள் எல்லாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதால் இந்த படத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



# கைரேகை சோதிடம்



மனிதனின் எதிர்காலம் மற்றும் அவனைப் பற்றிய தகவல்களை உள்ளங் கையின் அமைப்பு மற்றும் அதன் வரிகளைக் கொண்டு கணிக்க முடியும் என்பது கைரேகை சாஸ்திரம் கூறும் நிருபணம்.

கைகளில் உள்ள ரேகைகள் மட்டு மல்ல, கால்கள் மற்றும் நெற்றியில் இருக்கும் ரேகை அமைப்பையும் கொண்டு பலன் சொல்லுவது இந்த சாஸ் திரத்தின் கட்டமைப்பு. அதனால்தான் இதை கைரேகை சாஸ்திரம் எனக் கூறாமல் முன் னோர்கள் ரேகை சாஸ்திரம் என அழைத்தார் கள். ரேகை சாஸ்திரம் என்பது விஞ்ஞானம் அல்ல. ரேகை சாஸ்திரம் ஒரு கலை வடிவம். இங்கே நாம் கலைக்கும் விஞ்ஞானத்துக்கும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானம் என்பது கட்டமைக்கப்பட்ட விதிகளும், அதனை நிருபணம் செய்யும் சோதனைகளும் கொண்டது. கலை என்பது அடிப்படை அம்சங்களைக் கொண்டது. ஆனால், அதை பயன்படுத்துவோர் பொருட்டு மாறுபடும். உதாரணமாக சோடியம் குளோ ரைட்டு என்ற உப்பை நீரில் அமிழ்த்தினால் கரையும் என்பது விஞ்ஞானம் கூறும் விதி. இதை உலகின் எந்த மூலையில் எவர் செய்து பார்த்தாலும் நடைபெறும். காரணம் விஞ்ஞானம் மாறாதது.

ஓவியம் என்பது கலை அடிப்படையில் இப்படி ஓவியம் வரையலாம் என்றாலும், உலகில் ஒரே போல ஓவியங்கள் இல்லை. கலாசாரம், சூழலுக்கு ஏற்ப அது பெரும் கலை வடிவமாகத் திகழுகிறது.

ரேகை சாஸ்திரம் என்பதும் ஒரு கலைவடிவம் தான். அடிப்படை விதிகளை உணர்ந்துகொண்டு பயன் படுத்த துவங்கினால் ஓவியம்போல பல வண்ணக் கலவையான மனிதர்களையும் அவர்களின் வாழ்க்கை நிலையையும் வெளிப்படுத்தும்.

மனித இனத்தின் தனித்துவமான அடையாளம் உடலில் உள்ள ரேகைகள். கைரேகைகள் ஒருவருக்கு இருப்பதுபோல மற்றொருவருக்கு அச்சு வார்த்தால்போல இருக்காது..! இதனால்தான் மனித அடையாளக் குறியாக ரேகைகள் எடுத்தாளப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனின் மனோநிலை, செயல் நிலை க்கு ஏற்ப ரேகைகள் மாறுபடுகிறது. இதை உணர்ந்து ரேகை சாஸ்திரம் உருவாகியது. வேடிக்கையான விடயம் என்னவென்றால் ரேகை சாஸ்திரத்தை உண்டாக்கியவர்களும் அதன் மூலவேராக இருந்தவர்களும் தமிழர்கள்.

**கைரேகைப் பலன்கள்:**

பொதுவாக கைரேகைப் பலன் அறிய ஆண்களுக்கு வலக்கை ரேகையையும், பெண்களுக்கு இடக்கை ரேகையையும் பார்க்க வேண்டும் என கைரேகை நிபுணர்கள் கூறி வருகின்றனர். ஆண்களுக்கு வலக் கை ரேகையையும், பெண்களுக்கு இடக் கை ரேகையையும் அதிக சக்தி வாய்ந்தது. இனி சாதாரண மாக ஒரு கைரேகை பார்க்கும்போது வெறும் ரேகைகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்ப்பதில்லை. கையில் இருக்கும் ரேகை, விரலில் வளைவு கையில் உள் பாகத்தில் இருக்கும் மேடு பள்ளம், நகம், விரலின் நீளம் என பலதரப்பட்ட விடயங்களை ஆராய்ந்து பார்க்கின்றனர்.


**கைரேகைப் பலன்கள் ஜோதிடம் வலதுகை**
**கைரேகை சாஸ்திரத்தின்படி கையில் இருக்கும் சில ரேகைகள்**

1. ஆயுள் ரேகை, 2. தலை ரேகை, 3. இதய ரேகை, 4. வெள்ளியின் சுற்றுவட்டம்,
5. சூரிய ரேகை, 6. புதன் ரேகை, 7. விதி ரேகை

**இப்போது ஒவ்வொரு ரேகையாக விரிவாக பார்ப்போம்.**
**இதய ரேகை கைரேகைப் பலன்**

இதய ரேகை என்பதுதான் கைரேகை பார்ப்பவரால் பார்க்கப்படும் முக்கிய ரேகைகளில் முதன்மையானதாக இருக்கிறது. இது விரல்களுக்கு அடியில் உள்ளங்கையின் மேற்புறம் காணப்படுகிறது. சில கைரேகை சாஸ்திரத்தில், இது நுனிவிரலுக்கு அடியில் உள்ளங் கையின் ஓரத்தில் இருந்து தொடங்கி, கட்டை விரலை நோக்கி ஓடும் ரேகையாக இருக்கிறது; வேறு சில சாஸ்திரங்கள், விரல்களுக்கு அடியில் தொடங்கி உள்ளங்கையின் விளிம் புக்கு வெளியே ஓடுவதை இதய ரேகையாக குறிப்பிடு கின்றன.

(தொடரும்)




**நாளை** தை-19
புதன்கிழமை -01.02.2017
திதி: பஞ்சமி பி.இ. 02.38
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ.10.30
ராகுகாலம்:12.36-02.06 வரை
சுபநேரம்:05.06-06.36 வரை

# எனது நாடும் எனது மக்களும்

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் னர் உலகின் பல்வேறு பகுதிகளில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. வணிக, இன, பாலின ரீதியில் இந்த மாற்றங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. தனி மனி தன் ஒருவரது ஆட்சி, உலக அரசியலில் பெரும் பரபரப்பைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்காவை மீண்டும் உயர்த்துவேன் என்ற தொனிப்பொருளில் இயங்கும் ட்ரம்ப், அமெரிக்காவுக்கு மட்டும் சாதக மான ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறார். அவரது தேர்தல் பரப்புரை களில் முன்வைத்த விடயங்களில், மெக்சிக் கோவின் எல்லையில் சுவர் எழுப்புவேன், சீனா, ஜப்பான் நாடுகளுடனான ஒப்பந் தத்தை முடக்குவேன், ஓரினச் சேர்க்கை திருமணங்களுக்குத் தடை, அகதிகளுக்குத் தடை ஆகியவை உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தின. இவற்றை ட்ரம்ப் சாத்திய மாக்குவாரா? என்ற கேள்வியை பன் னாட்டு ஊடகங்கள் எழுப்பியிருந்தன. ஆனால், பதவியேற்ற முதல்வாரத்திலேயே ட்ரம்ப் அதிரடியான தடையையும், புதிய ஒப்பந்தங்களையும் மேற்கொண்டார். குறிப்பாக மெக்சிக்கோவின் எல்லையில் சுவர் எழுப்புவது என்பது பலருக்கும் சிம்ம சொப்பனமாக இருந்தது. பல பில்லியன் செலவை எவ்வாறு ஈடுகட்டு வார் என்ற கேள்விகள் எழுந்தன. ஆனால், ஆரம்பத்தில் இருந்தே மெக்சிக்கோ எல்லையில் எழுப்பப்படப் போகும் சுவ ருக்கான முழுச் செலவையும் அந்த நாடே ஏற்றுக்கொள்ளும்-என்றார்.

மெக்சிக்கோவின் பல ஏற்றுமதிப் பொருள் கள் அமெரிக்காவில் சந்தைப்படுத்தப் படுகின்றன. இதன் மூலம் மெக்சிக்கோ வருடாந்தம் 50 பில்லியன் டொலர் களை இலாபமாக ஈட்டி வருகின்றது. அவற்றில் இருந்த ஒரு தொகையை அமெ ரிக்கா வரியாக அறவிடத் திட்ட மிட் டுள்ளது என வெள்ளை மாளிகை தகவல் வெளியிட்டது.

இந்த அறிவிப்பு பன்னாட்டுச் சமூகத்தைச் சிந்திக்க வைத்தது. அத்துடன், பசுபிக் நாடுகளுடனான வணிக ஒப்பந்தம் தடை செய்யப்பட்டதும், ஓரினச் சேர்க்கைத் திருமணத்துக்கு தடை விதிக்கப்பட்டதும், அகதிகளுக்கு தடை விதித்தமையும் பல் வேறு அதிர்வுகளை ஏற்படுத்தின. உலக வரலாற்றில் வாக்குறுதிகளை மிக விரை வாக நடைமுறைப்படுத்தும் தலைவர் என்ற விமர்சனத்தை ட்ரம்ப் பெற்றார். ஆனா லும், பொது மக்கள் பார்வையில், சிலருக் குச் சாதகமாகவும் பலருக்குப் பாதகமாக வும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால், அமெரிக்கர்களின் பாதுகாப் பையும், உறுதிப்பாட்டையும் கருத்தில் கொண்டு ட்ரம்ப் பல ஒப்பந்தங் களை மேற் கொண்டு வருகின்றமை வெளிப்படை.



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள மெடிக்கல் பக்கல்ரிக்கு (**Medical Faculty**) முன்பாக உள்ள **A/G/A Office** இற்கு அருகில் 2 1/2 பரப்புக் கொண்ட சுற்றுமதிலுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 077 5269 182 ,077 2935 095**

## மரண அறிவித்தல்

### திருமதி அரியமலர் (மலர்) மாசிலாமணி



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் தற்போது 205 **A.V** வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் (மலர்) மாசிலாமணி 30.01.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தாய் மாமனான பரமு அவர்களின் அன்பு மருமகளும் அரும்பலம் தேவி அவர்களின் அன்புச் சகோதரியும் பலாலியில் வசித்து காலஞ்சென்ற செல்லர் தெய்வானை தம்பதியினரின் மருமகளும் மாசிலாமணியின் அன்பு மனைவியும் சேகர்,சுசிலா,மாலா,மோகன் (அப்பன்), ஆகியோரின் அன்புத்தாயும் பரிமலாதேவி, செல்வராஜா, மகேந்திரம்,சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.01.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பால்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**மகன் மோகன் (அப்பன்)**
**077 952 2546.**

**இல. 205, A.V.வீதி ,**
**தபால் பெட்டி சந்தி,**
**அரியாலை.**

## விற்பனைக்குண்டு

வெண் கிளுவன் கதியால் .கப்பல் வாழைக்குட்டி என்பன விற்பனைக்குண்டு.

**தொடர்பு:**
**077 111 5360 ,076 802 5826**

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினர்
**நடராசா இராஜமனோகரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**செல்லையா நடராசா**
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை**

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி வரதலிங்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர்)



நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி வரதலிங்கம் நேற்று (30.01.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தங்கமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கார்த்திகேசு வரதலிங்கத் தின் (ஓய்வுநிலை கடற்படை உத்தியோகத்தர்) அன்புமனைவியும் கயல்விழியின் பாசமிகு தாயாரும் இராஜாராமின் அன்பு மாமியாரும் சகானாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2017) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"நாகேஸ்தான்"**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 732 4996, 077 480 9821**

## இறுதிப்...

படைத் தலைவராலேயே வன்புணரப்பட்டார். இவ்வாறு கேட்பார் இன்றிக் கொலை, வன்புணர்வு, சித்திரவதை என்பன தொடர்ந்து நடைபெற்று வந்தன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கண்டல் கிராமத்தில் இடம்பெற்ற படுகொலையின் 32ஆவது நினைவுதினம், வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நேற்று திங்கட்கிழமை நினைவுகூரப்பட்டது. வட்டக்கண்டல் கிராமத்தில் 1985 ஆம் ஆண்டு மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் வி.சுந்தர மூர்த்தி மற்றும் ஆசிரியர்களான ரி.மகேந்திரன் மற்றும் எஸ்.இரட்ணதுரை ஆகியோர் பாடசாலை வளாகத்தினுள் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளதோடு பாட சாலை மாணவர் களும் பொது மக்களும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இதன் 32ஆவது நினைவு தினத்தில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

2009ஆம் ஆண்டில் போரின் இறுதிக்கால கட்டத்தில் எமது மக்களுக்குச் சொல்லொணாக் கொடூரங்கள் இழைக்கப்பட்டன. அதற்காகத்தான் தற்போது போர்க்குற்ற விசாரணை ஜெனிவாவில் இருந்து முடுக்கி விடப்பட்டுள்ளது. அந்தக் கால கட்டங்களில் மதகுருமார் பலர் அவர்கள் சமயம் சார்ந்தவர் கள் என்று தெரிந்தும் கூடக் கொல்லப்பட்டார்கள். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையில் இவ்வாறான படுகொலைகள் நடைபெற்றுள்ளன. அது மட்டு மல்லாமல் ஒரு கத்தோலிக்க கன்னியாஸ்திரி 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு முகாமின் படைத் தலைவராலேயே வன்புணரப்பட்டார். கேட்போர் இன்றி கொலை, வன்பு ணர்வு, சித்திரவதையாகியன தொடர்ந்து நடைபெற்று வந்தன - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் வினோநோகராத லிங்கம், வடக்கு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மீன்பிடி அமைச் சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ரிப்கான் பதியுதீன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5-56)

## மரண அறிவித்தல்



பிறப்பு
25 . 12 . 1951

இறப்பு
30 . 01 . 2017

### திருமதி தர்மராணி சண்முகம்

பலாலியைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, வேம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மராணி சண்முகம் நேற்று (30.01.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நடராஜா காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா-சின்னாச்சி தம்தியரின் அன்பு மருமகளும் சண்முகத்தின் பாசமிகு மனைவியும் ஸ்ரீ, ஜெயா, விஜிதா, ஜெனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் கலைச்செல்வி, பவிதா, விஜீபன், இமயணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தருஷ்ணவி, தஸ்வின், சதுர்சன், தக்சயன், ப்ரீத்தி, பிரவீன், கிருராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விஜயராஜா, வரதராஜா, சதானந்தராஜா, காலஞ்சென்ற யோகராஜா (அப்பன்) மற்றும் விஜயராணி, புஸ்பராணி, சந்திர வதனம், மஞ்சுளா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2017) செவ்வாய்க் கிழமை சாவகசசேரி, தபாலகநதோர் வீதியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**078 880 3050, 077 586 6709**
**0044 74 5029 7931 - ஜெயா**

**தபால கந்தோர வீதி,**
**சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

### திருமதி கௌரிமனோகரி (கௌரி) பவளநாதன்

(ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியை, திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயம்)



யாழ்ப்பாணம், திருநெல்வேலி காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கௌரிமனோகரி பவளநாதன் (ஆங்கில ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) - (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பவளநாதனின் அன்பு மனைவியும் லவகாந்த் (நல்லூர் பிரதேச செயலகம்), கோபிநாத் (லண்டன்), செந்தூர்காந்த் (யாழ். பல்கலைக்கழக வணிகபீடம்) ஆகியோரின் அன்புத்தாயும் அதீபானின் (லண்டன்) அன்பு மாமியும் தணிகாசலம், தவராசா, திலகவதி, சத்தியலிங்கம் (இந்தியா), நந்தகுமார் (பிரான்ஸ்), பத்மநிதி, கலாநிதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலகௌரி, சாரதாதேவி, செல்வராசா, இந்திராணி, தபோநிதி (பிரான்ஸ்), தேவகுலசிங்கம் காலஞ்சென்ற மங்க ளேஸ்வரி மற்றும் கனகேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், கனகரத்தினம், பொன்னுத்துரை (பொறியியலாளர்) மற்றும் கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரஸ்வதி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) மற்றும் பொற்கொடி (கனடா), இராசபாக்கியம் ஆகியோரின் பெறாமகளும் பத்மநாதன், பாவநாசிவம் (கனடா) ஆகியோரின் சகலியும் றிஸ்விகனின் (லண்டன்) பேர்த்தியும் ரிஷிகேசன், ஷாருகேஷன், பிரதாபன் ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி,**
**பத்திரகாளி கோயிலடி,**
**திருநெல்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

**021 221 6900, 077 790 3612**

## தெற்கில்...

கொலை அச்சுறுத்தல்களை விடுப்பார்கள். தெற்கில் இனவாதம் எழுந்தால் வடக்கிலும் இனவாதம் எழும்.

இவ்வாறு மறுசீரமைப்பு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப் பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரி வித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்கள். இதுவொரு இன வாதத்தின் போக்கு. இவ்வாறான இனவாத நிழலுக்கு கீழ் நாங்கள் பங் கேற்பதில்லை.

வடக்கைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நாட்டைப் பிரிக்காத, பிரிவினைவாதமின்றி அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முன்வருகின்ற தமிழ்த் தலைவர்கள் இவர்கள். இந்த நாட்டில் தெற்கில் இனவாதம் மேலெழுகையில், வடக்கில் அதற்கு ஏற்ற அளவில் இனவாதம் தலை தூக்குகின்றது.

இந்த அரசில் இணைந்து இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற பேச்சு முன்னெடுத்துவரும்போது அது பிரி வினைவாதமற்றிருந்தால், பிரிவினைவாதக் கும்பல் இவ்வாறான ஜனநாயகவாத தலைவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பதை நாங்கள் கண்டிருக்கின்றோம்.

நோர்வேயிலுள்ள முன்னாள் போராளிகள் இந்த அச் சுறுத்தலை விடுத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. ஜனநாயகத்துக்காக நாங்கள் முன் வரும்போது வடக்கிலுள்ள தமிழ் மக்கள் ஜனநாய கத்துக்காக முன்வரக்கூடாதா?

நாங்கள் சரிவர செயற்படாமலும், சரியான அரசியல் தீர்வை வழங்கமாலும் இருந்தால் இனவாதிகளின் வேட்டைப் பகுதியாக வடக்கு மாறிவிடும். அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. மீண்டும் இந்த நாட்டை பிரிவினை வாதத்துக்கான அழுத்தம் ஏற்படும்.

தெற்கிலுள்ள தலைவர்களுக்கும் இதனையே கூறுகின்றோம். தெற்கில் இனவாதத் தைத் தடுக்க முயற்சி செய்யும் வகையில் வடக்கிலும் இனவாதம் தலைதூக்குவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வை கைவிட்டு பிரிப்பது குறித்து பேசுமாறு வடக்கில் கூறலாம். அதேபோல வடக் குக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுமாறு தெற்கில் எமக்குக் கூறலாம். இதனால் பயங்கர வாதம் புதியதொரு தோற்றத்தில் பரிணாமம் பெற்று மீள தலைதூக்கலாம். இவை அனைத்தையும் இந்த அரசின் நீடித்த ஆயுளைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் உள்ள சக்திகளே மேற்கொள்கின்றன. இவ்வாறு குழப்பங் களைத் தோற்றுவிக்க அவர்களுக்கே தேவை உள்ளது - என்றார். (வ-5)

## புராணம்...

நிலையில், அந்தஆவணத்தைச் சமர்ப் பிக்குமாறு கோரியதன் பின்னர் இதே பதிலை மன்றில் மூன்றாவது தடவையாக அவர் குறிப்பிட்டார்.

மறுவாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளின் பெயர்ப் பட்டியல் தவிர வேறு எந்தப் பட்டியலும் தம்மிடம் இல்லை என்று அவர் மன்றில் நேற்றுக் குறிப்பிட்டார். வழக்கு எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**பின்னணி**

வவுனியா மேல் நீதிமன்றத்தில் 2012ஆம் ஆண்டு ஆள்கொணர்வு மனு, காணாமற் போனோரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டது. 2009ஆம் ஆண்டு போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் கையளித்த - சரணடைந்த தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தினால், சம்பவம் இடம்பெற்ற பகுதி நீதிமன்றமாகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், பிரதிவாதிகளின் சாட்சியம் பதிவு செய்யும் நடவடிக்கை 2015ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தது. 58ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாணக்ய குணவர்தன, (தற்போது ஓய்வுபெற்றுள்ளார்) ஆள் கொணர்வு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எவரும் 58 ஆம் படையணியிடம் சரணடைந்ததற்கான பதிவுகள் எதுவும் தங்களிடம் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியம் மீதான குறுக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில், நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி இடம் பெற்றது. 58ஆவது படையணியின் கட்ட ளைத் தளபதியை, மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.என். ரட்ணவேல் குறுக்கு விசாரணை செய்தார். ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்தவர்களின் பெயர்கள் உங்க ளிடம் இல்லை என்பதை எதை வைத்துத் தெரிவித்திருக்கின்றீர்கள் என்று மனுதாரர் தரப்பு சட்டத்தரணியினால் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த கட்டளைத் தளபதி, சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் எம்மிடம் உள்ளது. அதில் ஆராய்ந்து பார்த்த போது மேற்படி பெயர்கள் இல்லை. அதனடிப் படையிலேயே தெரிவித்தேன் என்று பதிலளித்திருந்தார்.

இதன் போது மனுதாரர் தரப்பு சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல், சரணடைந்தவர்கள் தொடர்பான பட்டியல் இராணுவத்தினரிடம் இருந்தால் அதனை மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன், இராணுவத்தினரிடம் உள்ள சரணடைந்தவர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியலை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

**சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்**

ஜூலை மாதம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது. மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல் அந்த ஆவணத்தைப் பார்வையிட்டு, இதில் பெயர், முகவரிகள் இருக்கின்றன. சரணடைந்த திகதி இல்லை. இந்த ஆவணத்தை நாம் கோரவில்லை. இது மறுவாழ்வு ஆணையாளரினால் வெளியிடப்படும் ஆவணம். இதனை எவரும் பெற்றுக் கொள்ள முடியும். இதில் சரணடைந்து மறுவாழ்வு பெற்று வெளியேறியவர்களின் பெயர்கள்தான் இருக்கின்றன.

நாம் 2009ஆம் ஆண்டு மே 17, 18, 19 ஆம் திகதிகளில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர்களைத்தான் கோரினோம். இராணுவத்தினரிடம் இருப்பதாக பெப்ரவரி 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் படையணியின் கட்டளைத் தளபதி தெரிவித்த ஆவணத்தையே சமர்ப்பிக்கக் கேட்டிருந்தோம். இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் மனுதாரர்கள் தெரிவிக்கும் பெயர்கள் இல்லை. நாம் கோரிய ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்றார் ரட்ணவேல்.

58ஆவது படையணியின் கட்டளைத் தளபதி அவ்வாறான ஆவணம் இல்லை என்று தெரிவித்த போது, பெப்ரவரி 17ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது ஆவணம் இருப்பதாகத் தெரிவித்ததை மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

**உரிய ஆவணங்களுடன் வரவும்**

நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன், செப்ரெம்பர் 29ஆம் திகதிய வழக்குத் தவணையின் போது நீதிமன்றம் கோரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு பணித்தார். மன்றில் செப் ரெம்பர் 29ஆம் திகதி முன்னிலையான சாணக்ய குணவர்த்தன, தம்மிடம் வேறு எந்த ஆவணமும் இல்லை என்று தெரி வித்தார். இதன் பின்னர் நடைபெற்ற வழக்கு விசாரணையிலும் அவர் இந்தப் பதிலையே வழங்கியிருந்தார். நேற்றைய தினமும் இதே பதிலை மன்றில் தெரிவித்தார். (வ-5)

## உள்ளூராட்சி...

மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 'உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜூன் மாதத்துக்குப் பின்னரே நடத்துவதற்குச் சாத்தியம் உள்ளது. எல்லை நிர்ணய மறுசீரமைப்புத் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மொழி பெயர்ப்புக்கள் உரியவாறு இல்லை. தொழில்நுட்பத் தவறுகள் காணப்படு கின்றன. இவை நிறைவடைந்த பின்னரே தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்' என்று அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, மிகப் பெரிய நாடான இந்தியாவிலேயே.6 தேசியக் கட்சிகளும், 70 பிராந்திய கூட்டணிக் கட்சிகளுமே பதிவில் உள்ளன. ஆனால் எமது நாட்டில் தற்போதே 70 இற்கு மேற்பட்ட கட்சிகள் உள்ளன. எதிர்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் இவற்றில் எதையாவது கொண்டுள்ள கட்சியை மாத்திரம் பதிவு செய்வது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். அடுத்த மாதம் புதிய கட்சிகள் பதிவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (வ-5-101)

**தவறிவிட்டது**

இ. கிருபானந்தசர்மா என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன 25.01.2017 அன்று ஆரியகுளம் சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அறியத்தரவும்.

தொடர்பு - 077 294 4957

**தேவை**

நடமாடும் பாண் விற்பனை வாகனத்தில் பாண்விற்பனை செய்வதற்கு ஆள்கள் தேவை.

புதிய துர்க்கா வெதுப்பகம்
க்லைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1336
சீட்டிழுப்பு திகதி 2017.01.30
வெற்றி இலக்கங்கள்
11 18 22 51 H
ரூ. 16,612,675/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 609
சீட்டிழுப்பு திகதி 30.01.2017
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
09 24 29 49 M
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.48,462, 235/=

அபிவிருத்தி
இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 47
சீட்டிழுப்பு திகதி 2017.01.30
வெற்றி இலக்கங்கள்
39 40 45
11
2,517,890/=

**கண்ணீர்அஞ்சலி**



எமது கழக ஆர்வலர் **அமரர் சச்சிதானந்தம் சிவானந்தன்** (ஓய்வு பெற்ற நில அளவையாளர்- நோர்வே) அவர்களின் அன்பு மனைவியும் எமது கழக உறுப்பினர் **சிவானந்தன் சுரேஷ்** (நோர்வே) அவர்களின் அன்னையும் எமது கழக ஆர்வலரும், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி **தவராணி சிவானந்தன்**

அவர்கள் (26.01.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அவரது குடும்பத்தினர் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற எமது கழகத்தின் 50 ஆவது பொன்விழா நிகழ்வையொட்டி எமது பகுதி மக்களின் பாவனைக்கென **'படிப்பகம்'** நினைவுக் கட்டடம் ஒன்றைக்கட்டி தந்ததுடன் அவர்தம் கணவர், மக்கள், மருமக்கள் குடும்பத்தினர் எம்மால் பொருளாதார ரீதியில் பின் தங்கிய சிறார்களின் கல்வி அபிவிருத்திக்கு முன்னெடுத்து வரும் பணிகளுக்கு பல வருடங்களாக நிதி உதவி அளித்து வந்துள்ளனர்.

எமது மண்ணின் மீதும் மக்களின் மீதும் பாசமும் பரிவும்கொண்ட அழகிய ஒரு குடும்பத்தின் தலைவனின் இழப்பைத் தொடர்ந்து தலைவியின் இழப்பு எமது மண்ணுக்கும் எமது கழகத்தினருக்கும் பேரிழப்பு ஆகும். அன்னாரின் மறைவுக்கு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும்**
**வளர்மதி நிறைவாழ்வகமும்**
**சம்பியன் லேன், கொக்குவில்.**

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நயினாதீவு
5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
திரு. திருமதி
அம்பிகைபாகன்
நகுலேஸ்வரி
தம்பதியரின்
ஏகபுதல்வன்
ஸ்ரீராகவன்
25.01.2017
புதன்கிழமை
கொழும்பு
உயர்நீதி மன்றத்தில்
சட்டத்தரணியாக
சத்தியப் பிரமாணம்
செய்து கொண்டமையை
பாராட்டி உளமார
வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
திரு. திருமதி பரராசசிங்கம் லெட்சுமி
குடும்பத்தினர், நல்லூர்.

## எல்லை...

வெளியிடுவதற்கு இன்னமும் ஒரு மாத காலம் செல்லும் என்று உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டு வருகின்றமைக்கு எதிராக பவ்ரல் அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு, உயர்நீதிமன்றத்தில் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மேற்குறித்த விடயத்தை மன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'இன்னும் ஒரு மாத காலப் பகுதிக்குள் எல்லை நிர்ணய மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் அறிக்கையை வர்த்தமானியில் வெளியிடவுள்ளோம்' என்று அவர் மன்றில் தெரிவித்தார். மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. எல்லை நிர்ணய அறிக்கை கடந்த 17 ஆம் திகதி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம், ஆணைக்குழு உறுப்பினர்களால் ஒப்படைக்கப்பட்டது. ஜனவரி 31 ஆம் திகதிக்குள் அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்றும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வர்த்தமானிப் பிரசுரமும் வெளியிடப்படும் என்றும் அறிக்கை கையளிக்கப்பட்ட போது அமைச்சர் பைசர் முஸ்தபா குறிப்பிட்டிருந்தார் என்பது நினைவில் கொள்ளத் தக்கது. (த-5)

## தொடராது...

பாளர் நாயகம் லலித் சந்திரபால தெரிவித்தார்.

நாடு முழுவதும் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. 12 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். மழையுடன் கூடிய காலநிலை இன்னும்சில தினங்களுக்கு மாத்திரமே நீடிக்கும்.

இதன் பின்னர் நாடு முழுவதும் வறட்சியான காலநிலையே நிலவும். பருவப்பெயர்ச்சிக் கால நிலையின் கீழ், பெப்ரவரி மாதம் மழையை எதிர்பார்க்க முடியாது - என்றார். (த-5)

## பெரும்பான்மையின்...

சம்பிக்க ரணவக்க கொழும்பு ஊடகத்துக்குத் தெரிவித்தார்.

நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் கூட்டாட்சி முறைமை - அதி உயர் அதிகாரப் பகிர்வு என்ற நிலைப்பாட்டில் எதிர்க்கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) உள்ளது. அதற்காக அவர்களின் நிலைப்பாடு முழுமையானது என்ற முடிவுக்கு வர முடியாது. அவர்களின் நிலைப்பாடு சிறிய அளவினதாகும். பெரும்பான்மை நிலைப்பாடு அதுவல்ல. பெரும்பான்மை மக்களின் நிலைப்பாட்டை சிறுபான்மையினர் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

பெரும்பான்மையினரின் நிலைப்பாட்டை மீறிச் சிறுபான்மையினர் செயற்பட முடியாது. கூட்டாட்சி என்ற நிலைப்பாட்டில் அரசு இல்லை. அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பது வேறு. வடக்கு மாகாண சபை கோரும் அதிகாரப் பகிர்வு என்பது வேறு. மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு நாடு துண்டாடப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது - என்று சம்பிக்க குறிப்பிட்டார். (த-5)

## மகிந்தவுடன்...

நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபய குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக இன்று முழு நாடுமே எழுந்து நிற்கின்றது. அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று மக்கள் அனைவரும் தீர்மானித்துள்ளனர். எங்கு பார்த்தாலும் ஆர்ப்பாட்டங்கள், உணவு ஒறுப்புப் போராட்டங்கள், வேலை நிறுத்தப் போராட்டங்கள்.

ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் இவ்வாறு பெரிய எதிர்ப்பைச் சந்தித்த அரசு ஒன்று உள்ளது என்றால் அது இந்த அரசுதான். வாழ்க்கைச் செலவினம் உயர்ந்து விட்டது. ஆறுபேர் உள்ள ஒரு குடும்பம் மூன்று நேரம் சாப்பிடுவதற்கு ஆக்க குறைந்தது 50 ஆயிரம் ரூபா தேவை. இல்லாவிட்டால் வாழ்க்கை நடத்த முடியாது.

இந்த அரசு திறமையற்ற அரசு. இந்த அரசால் நாட்டை நிர்வகிக்க முடியாது. நாங்கள் செய்த ஒரு வீதத்தையேனும் இந்த அரசால் செய்ய முடியவில்லை. ஆட்சிக்கு வந்து அடுத்த மாதமே கொள்ளையடிக்கத் தொடங்கிவிட்டது.

அரசில் உள்ள பல அமைச்சர்களுக்குக்கூட இந்த ஆட்சியில் உடன்பாடு இல்லை. அவர்கள் எம்முடன் தொடர்பில் இருக்கின்றனர். இதனால் இந்த அரசு பயப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்படுகின்றனர். தினமும் அவர்கள் பின்னால் சுற்றுகின்றனர்.

மகிந்தவுடன் பேசுகிறார்களா ?, மகிந்த அணி நடத்தும் கூட்டங்களில் ஏறும் திட்டம் அவர்களின் உண்டா ?, மகிந்தவுடன் சேர்ந்து அரசைக் கவிழ்க்க திட்டமிடுகின்றனரா? என்றெல்லாம் இப்போது தேடிப்பார்க்கப் படுகின்றது. அப்படியானதொரு பரிதாபகரமான நிலைக்கு இந்த அரசு இப்போது தள்ளப்பட்டுள்ளது - என்றார். (த-5)

## மார்ச்சில்...

ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ச குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மார்ச் 13ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள பன்னாட்டு வெசாக் வலய நிகழ்வுகளில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அரசால் அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அவர் வருகை தரவுள்ளார். இறுதி நாளான 15 ஆம் திகதி, கண்டி சிறி தலதா மாளிகைக்கும் செல்லவுள்ளார்.

வெசாக் வலயத்தைப் பார்வையிடுவதற்காக 17 நாடுகளைச் சேர்ந்த அரச உயரதிகாரிகளும், 100க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் - என்றார்.

அமைச்சரான சம்பிக்க ரணவக்க தெரிவித்ததாவது:

நாடாளுமன்றை சூழவுள்ள வளாகத்தில் அமையவுள்ள இந்த பன்னாட்டு வெசாக் வலயமானது இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வாகக் காணப்படும். இதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசு தற்போதே மேற்கொண்டு வருகின்றது - என்றார். (த-5)

## போர்க்குற்ற...

மன்னார் -வட்டக்கண்டல் படுகொலை நினைவுதின நிகழ்வில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை பன்னாட்டுத் தக்க சட்ட நிபுணர்களை, நீதிபதிகளை வரவழைத்து எமது படுகொலைகள் போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை பெற சட்டத்தில் இடம் இருக்கின்றதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். எமது மாகாண எதிர்க்கட்சித் தலைவரே இதற்குப் பொருத்தமானவர்.

அரசு போர்க்குற்ற விசாரணையில் ஈடுபடும் என்று எதிர்பார்க்க முடியாது. கொடூரப் படுகொலைகள் பற்றி விசாரணை செய்யாத அரசுகள், நடந்தவற்றை நடந்ததா என்று ஆராயாமலே நடக்கவில்லை என்று கூறும் அரசுகள், எமது நாடு சுதந்திர நாடு. வெளியார் உள்ளீடுகள் பெறப்படாது என்று நீதியைத் திசை திருப்பப் பார்க்கும் அரசுகள் எவ்வாறு உண்மையான போர்க்குற்ற விசாரணைகளில் ஈடுபட முன்வரப் போகின்றன? வடக்கு மாகாணசபை பன்னாட்டு நீதிபதிகளின் துணை கொண்டு உண்மையறியும் ஆணைக்குழு ஒன்றையோ, செயற்குழு ஒன்றையோ நியமிக்க முடியுமா என்று ஆராயுங்கள். முடியுமானால் அதனை நெறிமுறைப்படுத்தி உண்மையை உலகுக்கு எடுத்துரைப்போம். நடந்தவற்றை நடந்தவாறே எடுத்துரைப்போம். எமது மக்கள் நீதி பெற வேண்டுமானால் இது ஒன்றே வழியென எனக்குப்படுகிறது.

அரசு நடந்தவற்றைக் கனவாக எண்ணுமாறு எம்மைக் கருத வைக்க கடினமாக உழைத்து வருகின்றது. அரசியல் ரீதியாக அதைத் தருவோம் இதைத் தருவோம் என்று எம்மவருடன் பேரம் பேசுகின்றது. இல்லை யென்றால் மகிந்த வந்து விடுவார் என்று பயம் காட்டப் பார்க்கின்றார்கள். ஆனால் அரசுக்குத் தமிழ் மக்கள் மீது கரிசனை இருக்கின்றதென்றால் பின்வருவனவற்றை முதலில் செய்து தரட்டும்.

மறுசீரமைப்பு முகாம்களை உடனே இழுத்து மூடி அவற்றுள் வசிப்பவர்களை எமது வடக்கு மாகாண சபைத் திணைக்களங்களுக்குத் தாருங்கள். நாங்கள் அவர்களுக்கு உரியவாறான பன்னாட்டு நியமங்களுக்கேற்ற மறுசீரமைப்பை அவர்களின் மிகுதிக் காலம் வரையில் அளிக்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளப் பெற்றுத் தற்போது சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை உடனே விடுவியுங்கள். போர்ப் படையின் தொகைகளைக் கணிசமாகக் குறையுங்கள். மக்களின் காணிகளைத் திருப்பிக் கொடுங்கள்.

மக்களுக்கு எதிராக நடந்து கொண்ட அலுவலர்களை அடையாளம் கண்டு அவர்களைச் சேவையில் இருந்து வெளியேற்றுங்கள். ஐ.நா. பிரேரணை இதற்கு வசதி அளிக்கின்றது. நான் அவர்களின் பெயர்களை இங்கு கூறமுடியாது. பலரை எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் முன்னைய அரசின் காலத்திலும் இப்பொழுதும் பதவியில் இருந்தும் வருகின்றார்கள். குற்றங்கள் இழைத்த அவர்களைத் தொடர்ந்து உயர் பதவிகளில் வைத்திருப்பது தற்போதைய அரசு மனம் மாறவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

மனித உரிமைகள் அமைச்சராக இருந்த ஒருவர், திருகோணமலையில் இராணுவத்தினர் கையால் கொல்லப்பட்ட மகன் பற்றி அவரின் தகப்பனாரான வைத்திய கலாநிதி பேசியபோது அவரைப் பெரிய அச்சுறுத்தலுக்கு உட்படுத்தினார் . மனித உரிமை அமைச்சரே இவ்வாறு நடந்து கொண்டிருந்தாரேயானால் நாங்கள் அரசிடம் இருந்து எவ்வாறு நீதியைப் பெற முடியும்? அரசு உண்மையாகத் தமிழ் மக்கள் மீதும் அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள் மீதும் அனுதாபம் கொண்டுள்ளதெனின் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராக இதுவரை நடந்து கொண்டு வந்த உயர் சிவில், இராணுவ அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் உடனே அடையாளம் கண்டு சேவையில் இருந்து வெளியேற்ற முன்வரவேண்டும்.

காணாமற்போனார் செயலகத்துக்கு என்னானது ? ஏன் அதனை முறையாக நடைமுறைப்படுத்த அரசு முன்வரவில்லை? சட்டம் வலுவற்றதாக இருந்தாலும் உண்மைகளை வெளிக் கொண்டுவர மேற்படி செயலகத்தை செயலாற்ற வைக்கவேண்டும்.

இதுவரை தொடர்ந்து வந்த அரசுகள் தமிழ் மக்களுக்கெதிரான மனிதப் படுகொலைகளைக் கண்டும் காணாத மாதிரியே இருந்து வந்துள்ளன. 32 வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு படுகொலையை நினைவு கூருகின்றோம் என்றால் அவை மனதில் விட்டுச் சென்ற வடு ஆறவில்லை, வலி ஆறவில்லை என்பதே அர்த்தம்.

இன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதைத் தடுத்து நட்ட ஈடு தந்து வேலையை முடிக்கப் பார்க்கின்றது அரசு. இதற்காகப் பன்னாட்டுச் சமூகத்திடம் இருந்து நட்ட ஈட்டுப் பணம் பெற விழைகின்றது. இதனால் தான் ஆயிரத்து 500 மில்லியன் டொலர்கள் சமாதான முன்னெடுப்புக்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அறிவித்தது.

அந்தப் பணம் ஏன் போர்க்குற்ற விசாரணையை நடைமுறைப்படுத்தப் பாவிக்கப்படவில்லை, போரினால் பாதிக்கப்பட்ட முன்னைய போராளிகளுக்குப் புதிய வாழ்வளிக்கப் பயன்படுத்தப்படவில்லை, வடக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை அப்புறப்படுத்த உபயோகிக்கப்படவில்லை, என்று நான் கேள்வி எழுப்பினேன். வெறும் கிணறுகள் வெட்டி, மலசலகூடம் மற்றும் வீடுகள் அமைத்து, தண்ணீர்த் தாங்கிகளைக் கட்டுவது சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் வழி வகுக்காது. போர்க்குற்ற விசாரணை உரிய முறையில், சந்தேகங்களுக்கு இடமின்றி நடைபெற்று குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதே வட்டக்கண்டல் படுகொலையில் தமது உறவுகளை இழந்த எமது சகோதரச் சகோதரிகளின் மனதைச் சற்றேனும் ஆசுவாசப்படுத்தக்கூடிய காரியம் - என்றார். (த-5)

## சந்தேகநபர்களிடம்...

நபர்கள் கடந்த 14 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

காராளசிங்கம் குலேந்திரன், வேலாயுதம் விஜயகுமார், முருகையா தவேந்திரன், லூசி மரியநாயகம் அஜந்தன், ஞானசேகரலிங்கம் ராஜ்மதன் ஆகியோர் மீது மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீதான முதல் அறிக்கையையும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் நேற்றுச் சமர்ப்பித்திருந்தனர். இவர்களிடமிருந்து மீட்கப் பட்ட சான்றுப் பொருள் களையும் பயங்கர வாத விசாரணைப் பிரிவினர் மன்றில் சமர்ப்பித்தனர். 'மஞ்சள் நிறப் பேப்பரினால் சுற்றிக் கவரிடப்பட்ட நிலையில் ஒரு பொருளுடன் இரு கண்ணாடிப் போத்தல்களும், ஒரு பேப்பர் வகையான தடயப் பொருள்களும்' மன்றில் முன்வைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார்.

'சந்தேகநபர்களை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதனால் உறவினர்கள் பார்வையிடுவது முதல் அனைத்தும் பெரும் சிரமமாக உள்ளது. சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றவேண்டும்' என்று, சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளான திருமதி ச.விஜயராணி, தில்லைநாதன் அருச்சுனா ஆகியோர் கோரிக்கை விடுத்தனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் அதனை மறுத்தனர். விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸார் வவுனியாவிலேயே இருப்பதால், சந்தேக நபர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருப்பதே பொருத்தமானது என்று அவர்கள் விடுத்த கோரிக்கை மன்றில் ஏற்கப்பட்டது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரினால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுப் பொருள்களை ஆய்வுக்காக பகுப் பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்ப நீதிவான் உத்தரவிட்டார். (த-5-101-6)

## சுமந்திரன்...

நாடகம். இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பைக் கொண்டுவந்து நாட்டை பிளவுபடுத்த ரணில் முயற்சிக்கின்றார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அந்த முயற்சியைத் தடுத்தார். இவ்வாறு ஒரு நாடகத்தை அரங்கேற்றுகின்றனர்.

சிங்களப் பௌத்தவாதிகள் என்ற போர்வையில் செயற்படும் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்த முடியும். நாடகத்துக்கு ஏற்ற வகையில் சம்பிக்க ஓர் ஆடையையும், விக்கிரமசிங்க இன்னுமோர் ஆடையையும், சிறிசேன மற்றொரு ஆடையையும், 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்துவோம் எனத் தெரிவிக்கும் நிமல் சிறிபாலடி சில்வா வித்தியாசமான ஆடையையும், தமிழ் இனவாதிகள் மற்றும் முன்னாள் போராளிகளிடம் இருந்து அச்சுறுத்தல் எனக் கூறி சுமந்திரன் புதிய ஆடை ஒன்றையும் நாடகத்துக்கு ஏற்றாற்போல அணிந்து கொள்கின்றனர்.

நாடகத்துக்கான நிகழ்ச்சி நிரல்கள் யாவும் மேற்குலகில் உள்ள தமிழ் பிரிவினைவாதிகளினால் தயாரிக்கப்பட்டதாகும். நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்போர் ஆர்.சம்பந்தன், விக்னேஸ்வரன், விக்கிரமசிங்க, சிறிசேன, சுமந்திரன், சம்பிக்க ரணவக்க உள்ளிட்டோருக்கு வித்தியாசமான கதாபாத்திரங்களைத் தயாரித்து வழங்குகின்றனர். அதற்கமையவே நாடக மேடைக்கு ஏறி மக்களை ஏமாற்றுவதற்கு தமது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். ஏனினும் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம். சுமந்திரன் தனது நாடகத்தைச் சரிவர அரங்கேற்ற தவறிவிட்டார். இந்த நாட்டுப் பற்றுடையோரின் உயிர்மூச்சு உள்ளவரை அவர்களது நாடகம் வெற்றியளிக்காது - என்றார். (த-5)



# தவறை உணர்ந்த முயல் குட்டி

ஓர் அடர்ந்த காட்டில், ஒரு குட்டி யானையும், ஒரு முயல் குட்டியும் வாழ்ந்து வந்தன. அன்று ஓர் இனிமையான காலை நேரம். குட்டி யானை குளத்தில் குளிக்கச் சென்றது.

முயல் குட்டியும் குளத்தில் தண்ணீர் அருந்த வந்தது. முயல் குட்டி யானையைப் பார்த்து, நீ மிகவும் பருமனாக இருக்கிறாய் - என்று கேலி செய்தது. அதைக் கேட்டதும் யானையின் முகம் வாடியது. உடனே அந்த இடத்தைவிட்டு ஓடிச் சென்றது.

அடுத்த நாள், திடீரென்று,குட்டி யானைக்கு அலறல் சத்தம் ஒன்று கேட்டது. அதனுடைய மனம் பதைபதைத்தது. பிறகு, அது அலறல் சத்தம் வந்த திசையை நோக்கி, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போலச் சென்றது. சத்தம் வந்த இடத்தை அடைந்ததும், அதற்கு அது கண்டது கனவா நனவா என்று புலப்படவில்லை.

எல்லா மிருகங்களும் அங்கும் இங்கும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தன. அந்த இடத்தில் காட்டுத் தீ எரிந்துக் கொண் டிருந்ததால், முயல் குட்டி தீயில் மாட்டிக்கொண்டது .

குட்டி யானை எதையும் பொருட்படுத்தாமல் அந்த குட்டி முயலைக் காப்பாற்றியது. மற்ற மிருகங்கள் ஆடாமல் அசையாமல் சிலைப் போல் நின்றன.

அந்த முயல் குட்டி தான் செய்த தவற்றை எண்ணி வருந்தியது. பின்,தனது நன்றியை யானையிடம் தெரிவித்தது. அந்த நாள் முதல், முயல் குட்டியும் , குட்டி யானையும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

இதில் இருந்து தெரிந்துகொள்வது; அநாவசியமாக எவரையும் கேலி செய்யக்கூடாது. அவருடைய உதவி எந்த நேரத்திலும் தேவைப்படலாம்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1950 - அணுக்குண்டை விட 1000 மடங்கு சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டுகளைத் தயாரிக்க அமெரிக்க அதிபர் ரூமன் அனுமதி வழங்கினார்.

1995 - மன்னர் அலெக்ஸாண்டரின் கல்லறை எகிப்துக்கு அருகே கண்டு பிடிக்கப்பட்டது.

- தஸ்லீமா நஸ்ரினுக்கு சுவிடிஸ் இலக்கியப் பரிசு.

1997 - இன மோதல்களைத் தூண்டும் சக்திகளைக் கண்டுபிடிக்க ஜனாதி பதி சந்திரிகா உத்தரவு.

1998 - புலிகளைத் தடை செய்யுமாறு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கோரிக்கை.

2000 - தனது நோயாளிகள் 15 பேரைக் கொலை செய்ததாக மருத்துவர் ஹறோல்ட் ஷிப்மனுக்கு பிரித்தானி யாவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2012 - உறை நிலைக் குளிரினால் கிழக்கு ஐரோப்பாவில் பலர் உயிரிழந்தனர்.

## தாத்தா! தாத்தா!

தாத்தா நீங்க என்னைப் போல
பாப்பாவாக இருந்தப்போ
எப்படி யெல்லாம் இருந்தீங்க
என்ன வெல்லாம் செஞ்சீங்க.
உங்க தாத்தா உங்களுக்கு
கதைகள் எல்லாம் சொன்னாரா?
சொன்ன கதையை எங்களுக்குச்
சொல்லித் தாங்க இப்போது
தாத்தாவாக நானும் ஆனா
சொல்லித் தருவேன்-பாப்பாவுக்கு!





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

# வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, செட்டிகுளம் பொதுச் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான ஒரே தடவைக் கட்டண மீள்கேள்வி அறிவித்தல் - 2017

**வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவு எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2017ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி தொடக்கம் கீழ்க்குறிப்பிடப்படும் மாதாந்த வாடகையின் அடிப்படையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான ஒரே தடவைக் கட்டண மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி, நேரம் :-31.01.2017 –20.02.2017 அலுவலக நாள்களில் மு.ப 9.00 - பி.ப.3.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி,நேரம் :- 21.02.2017 மு.ப.10.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி,நேரம் :- 21.02.2017 மு.ப.10.00 மணி

கேள்விப் பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், பிரதேசசபை,** வெங்கலச் செட்டிகுளம் என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் (கடை இல) தெளிவாக இடப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் 21.02.2017 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். மறுபிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 21.02.2017 ஆம் திகதிமு.ப.10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

## நிபந்தனைகள்

1. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமதுதேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதியுடன் விண்ணப்பதாரர் நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்கள் கீழக் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கப்படும் வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்துக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டால் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவாக கேள்வியைச் சமர்ப்பிப்பவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் போது கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ பார்வையாளராக சமுகமளிக்க முடியும்.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரணஅதிகாரம் உண்டு.
7. இக்கடைகளில் காய்ச்சி உருக்கும் ஆலை, வாகனத் திருத்தகம், சலூன் ஆகிய வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.
8. வாடகைத் தொகை சபையினால் தீர்மானிக்கப்படும் காலஒழுங்கில் 10% அதிகரிக்கப்படும்
9. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் அவரது வாரிசுகள் அனுமதிக்கப்படுவர். ( உ-ம் மனைவி, பிள்ளைகள்)
10. சபையுடனான ஒப்பந்த மீறல்கள் ஏற்படாத விடத்து சித்தியெய்தும் கேள்விதாரர் அவருக்குப் பின் அவரது இரத்த உரித்துடைய வாரிசுகள் இக்கடைக்கான சகல உரிமைகளையும் அனுபவிக்க முடியும்.
11. சபையின் அனுமதியின்றி எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
12. சித்தியெய்தாத கேள்விதாரர்களின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
13. சித்தியெய்திய கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒருவார காலத்துக்குள் அல்லது சபையினால் வழங்கப்படும் கால எல்லைக்குள் முழுத் தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
14. கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு சித்தியெய்தும் கேள்விதாரரே பொறுப்பாவார்.
15. பெற்றுக்கொள்ளப்படும் கடைகளுக்கான மின்சாரசபைக்குரிய மாதாந்த மின் பட்டியல் கட்டணம் வாடகைதாரராலே செலுத்தப்படல் வேண்டும்.
16. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலைநாளுக்கு முன்பதாக செலுத்தப்படல் வேண்டும். அல்லது அடுத்த மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும். வாடகைப்பணம் தொடர்ச்சியாக இரண்டுமாதங்கள் செலுத்தப்படாத விடத்து முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
17. இவ் ஒப்பந்தம் தொடர்பாகச் சபைச் செயலாளரின் நியாயமான எவ்வித முடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாக சபைக்கெதிராகவோ, செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
18. கேள்வி தொடர்பாக மேலதிக விவரங்கள் செட்டிகுளம் பிரதேசசபையில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

| இல | கடை இல | மாத வாடகை | கேள்விபடிவக் கட்டணம் | கேள்விவைப்பு கட்டணம் | ஆரம்ப கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கடை இல 11 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0,000.00 |
| 2 | கடை இல 12 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0,000.00 |
| 3 | கடை இல 13 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0,000.00 |
| 4 | கடை இல 14 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0,000.00 |
| 5 | கடை இல 15 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0,000.00 |
| 6 | கடை இல 16 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0.[illegible] |
| 7 | கடை இல 17 | 4000.00 | 1000.00 | 5000.00 | 0,000.00 |

திரு.சு.விஜயதாஸ்,
செயலாளர்,
பிரதேச சபை, செட்டிகுளம்.

31.01.2017 (AJA/IN/00537)(11,17)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 31
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து அல்மதீனா அணி மோதவுள்ளது. (ம-23)

## ஐக்கியம் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 31
நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் ஐக்கியம் சம்பியானானது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 14:8 என்ற புள்ளிகளின் அடிப்டையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)



## ஆழியவளை அருணோதயா உதயசூரியனை வீழ்த்தியது

யாழ்ப்பாணம், ஜன. 31
வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில்பதிவுசெய்தகழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில்ஆண்கள்பிரிவில்ஆழியவளை அருணோதயா அணி சம்பியனானது.
செம்பியன்பற்று விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வத்திராயன் உதயசூரியன் அணியை எதிர்த்து ஆழியவளை அருணோதயா அணி மோதியது. முதலாவது செற்றில் உதயசூரியன் அணி 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
ஆனால் சரிவில் இருந்து மீண்ட அருணோதயா அணி அடுத்த இரு செற்களையும் 25:14, 25:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

## இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜன. 31
உசன் இராமநாதன் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி குறித்த் வித்தியாலய மைதானத்தில் இன்று பி.ப. 1.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ரி.சோதிலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சிவஞானம் மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-122)



## போராடி வென்றது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச்சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.
யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 64:62 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)



## கலைமகள் அணி சம்பியன்



யாழ்ப்பாணம், ஜன. 31
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் மாமுனை கலைமகள் அணி சம்பியனானது.
செம்பியன்பற்று விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மாமுனைகலைமகள்அணியை எதிர்த்து செம்பியன்பற்று சம்பியன் அணி மோதியது.
ஆட்டத்தின்முதல்இருசெற்களிலும் ஆதிக்கம் செலுத்திய மாமுனை கலைமகள் அணி 25:14, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அடுத்த இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

## கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்

யாழ்ப்பாணம், ஜன. 31
கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட்டில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனானது.
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி மகேசன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சேந்திரன் 23 ஓட்டங்களையும், துசிகரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பிரசாந் மூன்று இலக்குகளையும், அனுசன், புவி இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி மகேசன் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதை அடுத்து 24 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனானது ஞானம்ஸ் அணி. அதிகபட்சமாக அருண் 12 ஓட்டங்களையும், அனுரதன், சஞ்சீவன் இருவரும் தலா 10 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில்சேந்திரன், ஜெனி, ஜெனன் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-422-108)



## இரண்டாவது ஆட்டம் நாளை

இலங்கை–தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை இடம்பெறவுள்ளது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வென்றது. இதனால் நாளைய ஆட்டத்தில் வெல்லவேண்டும் என்ற நெருக்கடி இலங்கைக்கு உள்ளது. மாறாக நாளைய ஆட்டத்தில் இலங்கை தோற்றால் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே கிண்ணம் வெல்லமுடியும் என்ற நெருக்கடி நிலை ஏற்படும். (ம)

## இறுதி நாளை

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் முதலாவதில் இங்கிலாந்தும் இரண்டாவதில் இந்தியாவும் என இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. நாளை ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கே கிண்ணம் என்ற நிலை உள்ள காரணத்தால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## ரியல் பெடிஸ்–பார்சிலோனா ஆட்டம் சமநிலை

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பார்சிலோனா–ரியல் பெடிஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

கோல்கள் இல்லாமல் முதல் பாதி முடிவடைந்தது. அலிக்ரா 75 ஆவது நிமிடத்தில் பெடிஸின் கோலைப் பதிவசெய்தார். அந்த அணியின் ஆதிக்கத்துடன் ஆட்டம் நகர்ந்தது. இறுதி நிமிடத்தில் சுவாரஸ் பதிவுசெய்த கோலால் சரிவில் இருந்து மீண்டு தட்டுத்தடுமாறி சமன் செய்தது பார்சிலோனா. (ம)



# ஸ்ரொய்னிஸ் மிரட்டலாட்டம்; இருப்பினும் வென்றது நியூசிலாந்து

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் அந்த அணியின் வீரரான ஸ்ரொய்னிஸின் விடாப் போராட்டத்தையும் தாண்டி ஒருவாறு வெற்றிபெற்றது நியூசிலாந்து.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடருக்காக ஆஸ்திரேலியா நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக குப்தில் மற்றும் லாதம். 7 ஓட்டங்களுடன் லாதத்தை வீழ்த்தினார் ஸ்ராக். வில்லியம்சனை வீழ்த்தினார் ஸ்ரொய்னிஸ். அரைச்சதம் கடந்தார் குப்தில். ரெய்லர் பதின் மத்தைத் தாண்டவில்லை. 61 ஓட்டங்களுடன் குப்திலை வீழ்த்தினார் ஸ்ரொய்னிஸ்.

மத்திய வரிசையில் புறூம் சிறப்பாகச் செயற்பட்டார். அவரது இன்னிங்ஸின் சிக்சர்களும் இருந்தன. 56 பந்துகளில் அவர் அரைச்சதம் கடந்தார். 73 ஓட்டங்களுடன் புறூம் ஆட்டமிழந்தார். நீஸ்கம் மத்திய வரிசையில் 48 ஓட்டங்களைக் குவித்து பலம் சேர்த்தார். முடிவில் நியூசிலாந்து 286-9.

பந்துவீச்சில் ஸ்ரொய்னிஸ் 3 இலக்குகளையும் கும்மின்ஸ் 2 இலக்குகளையும், ஸ்ராக், ஹசில்வூட், பல்க்நெர், ஹெட் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு ஆரம்ப வீரர்களாக பின்ஞ், ஹெட் இருவரும் நம்பிக்கையை வழங்கவில்லை. முறையே 4 மற்றும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இருவரையும் வீழ்த்தியவர் போல்ட். மார்ஷ் ஹான்ட்ஸ்கொம், மக்ஸ்வெல் என்று எவரும் சிறப்பாகச் செயற்படவில்லை. 67 ஓட்டங்களில் 6 இலக்குகளை இழந்தது ஆஸ்திரேலியா.

பின்வரிசை வீரர்களில் ஒருவரான ஸ்ரொய்னிஸ் அடித்தாடி ஆட்டத்தை தனது கையில் எடுத்தக் கொண்டார். ஓட்டங்கள் கிடுகிடு வேகத்தில் உயர்ந்தன. சிக்சர்கள், பவுண்டரிகள் சீறிப்பாய்ந்தன. பல்க்நெர், கும்மின்ஸ் இருவரும் சிறு இணைப் பாட்டங்களை வழங்கினர். மீண்டெழுந்து 226-9 என்றிருந்தது ஆஸ்திரெலியா.

இறுதிநிலை வீரரான ஹசில்வூட்டுக்கு வாய்ப்பை வழங்காது அதிகப் பந்துகளை தானே எதிர்கொண்டு விளாசலைத் தொடர்ந்தார் ஸ்ரொய்னிஸ். சதமும் கண்டார். அஸ்திரேலியா 280 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஹசில்வூட், ரண்அவுட் செய்யப்பட்டார். 6 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது. (ம)

## விலகல்

நியூசிலாந்துக்கு எதிரான நேற்றைற முதலாவது ஒருநாள் ஆட்டத்திலிருந்து வேட் விலகினார். மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடருக்காக ஆஸ்தி ரேலிய அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. நியூசிலாந்து வென்றது. ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித், காயம் கார ணமாக விலகியிருந்தமையால் இந் தத் தொடருக்கான தலைவராக இலக்குக் காப்பாளரான வேட் நியமிக்கப்பட்டார். தொடருக்கு முன்பாக பயிற்சியில் ஈடுபட்ட போது அவர் காயமடைந் தார். இதனால் இறுதி நேரத்தில் வேட்டும் அணியில் இருந்து விலகினார். இத னையடுத்து பின்ஞ் தலைவராகச் செயற்பட்டார். (ம)



## ஆஸி. தோல்வியில் வருத்தமில்லை இப்படித் தெரிவித்தார் ரபேல் நடால்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் தோல்வியடைந்த போதிலும் அதில் வருத்தப்பட ஒன்றுமில்லை. இது மகிழ்ச்சியான தோல்வியே.

இவ்வாறு தெரிவித்தார் நடால். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் 3:2 என்ற செற் கணக்கில் பெடரர் சம்பியனானார். நடாலும் மிகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த ஆட்டம் கிட்டத்தட்ட 4 மணித்தியாலம் 30 நிமிடங்கள் வரை சென்றது. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே நடால் இவ்வாற தெரிவித்தார்.

இன்றைய (நேற்றுமுன்தின) ஆட்டத்தில் உற்சாகமாக விளையாடினேன். தனிப்பட்ட முறையில் எனது செயல்பாடு மிகவும் திருப்தி அளிக்கிறது. தோல்விக்காக வருத்தமுடன் இருக்கிறேன் என்று சொல்ல மாட்டேன். இதுமகிழ்ச்சியானதோல்வி. இந்தத் தொடரில் உலகின் மிகச் சிறந்த வீரர்களை வீழ்த்தினேன். ஒவ்வொருவ ருக்கு எதிராகவும் கடும் சவால் அளித்தேன். அது தான் எனக்கு முக்கியம். ஏனெனில் இதுதான் தொடர்ந்து விளையாட நம்பிக் கையை கொடுக்கும். இந்த ஆட்டத்தில் பெடரர் என்னை விட ஒருபடி மேலே சிறப்பாக விளையாடினார். வெற்றிக்கு அவர் தகுதியானவர் என் நடால் மேலும் தெரிவித்தார். (ம)



## மட்ரிட் அபார வெற்றி

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடர் மிகவும் பழைமையானது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட், ரியல் சொசைற்ரெட் அணிகள் மோதின. 3:0 என்ற கோல் கணக்கில் மட்ரிட் வென்றது.

மேட்டோ 38 ஆவது நிமிடத்திலும், ரொனால்டோ 51 ஆவது நிமிடத்திலும், அல்வாரோ 82 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்தனர். (ம)

## முறைப்பாடு

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் நம் பிக்கை வீரரான ரூட்டுக்கு தவறான எல்.பி.டபிள்யு. தீர்ப்பு வழங்கியமைக்காக மைதான நடுவருக்கு எதிராக ஆட்டத்தின் முக்கிய நடுவரிடம் முறைப்பாடு செய்ய இங்கிலாந்து அணி முடிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 144 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 139 ஓட்டங்களையே எடுத்து 5 ஓட்டங்களால் தோற்றது. இங்கிலாந்தின் வெற்றிக்கு இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

அந்தப் பந்துப்பரிமாற் றத்தின் முதல் பந்தில் ரூட் எல்.பி.டபிள்யு. ஆனார்.

மறுபரிசீலனையில் பந்து, துடுப்பு மட்டையில் பட்டுச் சென்றது தெரியவந்தது. இதனால் நடுவருக்கு எதிராக பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இங்கிலாந்து அணி ஆட்டத்தின் முக்கிய நடுவரிடம் முறையிடவுள்ளது.

இங்கிலாந்து அணியின் தலைவரான அயன் மோர்கன் இந்தத் தகவலை வெளியிட்டார். (ம)

## ஆஸி. கிண்ணத்தை நடாலுடன் பகிர பெடரர் விருப்பம்

ரென்னிஸ் ஆட்டங்களில் சமநிலை என்ற மூன்றாவது தெரிவு இருக்குமானால் ஆஸ்திரேலியத் தொடரை சமநிலையில் முடித்து கிண்ணத்தை நடாலுடன் பகிர்ந்திருப்பேன். இவ்வாறு தெரிவித்தார் பெடரர்.

ஆஸ்திரேலிய தொடரில் பெடரர் சம்பியனானார். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரென்னிஸ் ஒரு கடினமான விளையாட்டு. இங்கு சமநிலை என்பது கிடையாது. அப்படி ஒன்று இருந்திருந்தால் இன்றைய ஆட்டத்தில் (நேற்று முன்தின ஆட்டம்) நடாலுடன் சமன்செய்து மகிழ்ச்சியோடு கிண்ணத்தைப் பகிர்ந்திருப்பேன். நாங்கள் இருவரும் மீண்டும் ஆஸ்திரேலியத் தொடரில் விளையாடுவோம் என்று நினைக்கவில்லை. நடால் பழைய நிலைக்கு திரும்பியுள்ளார். இதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன் என பெடரர் மேலும் தெரிவித்தார். (ம)

# பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்கும்பானின் மைந்தன்

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர்-
நியூ மைதிலி ஜுவலர்ஸ்)





மலர்வு
14.04.1947

உதிர்வு
17.01.2002

திதி: தைமாத வளர்பிறை சதுர்த்தி (31.01.2017)

தோற்றச் சுடரொளியாய்
சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்து வந்துதித்த
அப்பாவே !
உங்கள் பிரிவு ஒரு புத்து ஐந்தாச்சு
தேற்றுவதற்கு யாருமில்லை
தெளிவு பெற முடியவில்லை
ஆற்றாமல் ஐயா
அழுகின்றோம் நாள்தோறும்
நீக்கமின்றி எம்மனத்தில்
நிலைத்திருப்பீர் எப்போதும்.

அன்னாரின் நினைவையொட்டி இன்று (31.01.2017) செவ்வாய்க்கிழமை சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்திலுள்ள வாழ்வகத்தில் இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



குடும்பத்தினர்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நியூ மைதிலி ஜுவலர்ஸ் (ந.கஜந்தன்)
38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 7878 / 021 221 7877

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2017 இல் வெளியிடப்பெற்றது.